
குண்டூசி
ஏப்ரல் 54...எட்டு அணா
ஏவி எம்
ப்ரொடக்ஷன்ஸ்
தயாரிப்பு
பெண்
AVM
PRODUCTIONS




*Distributors:* **A. V. R. A. & Co.,** **Madras, Bombay**



தமிழ் புதுவருஷ வெளியீடு
திரையுலகிற்கு
திகைப்பூட்டும்
தீர முயற்சி !
சிவாஜி கணேசன்
பண்டரி பாய்
...நடிக்கும்...
அந்த நாள்
ஒரு புதுமைச் சித்திரம்
13 JUL 1954
AVM
புரொடக்ஷன்ஸ்

தபால் பெட்டி
555
மதராஸ்



டெலிபோன்
40711
மதராஸ்

# N. V. ஷண்முகம் கம்பெனி

## பட்டணம் பொடியைப் போட்டு அனுபவித்து உண்மை தெரிந்த கனவான்கள் N. V. S. என்ற விலாசத்தை என்றும் மறவாதவர்கள்

N. V. S. பட்டணம் பொடியை போட்ட மாத்திரத்தில், உற்சாகமும், ஊக்கமும் பெறுகிறார்கள், உள்ளம் களிக்கிறார்கள். உள்ளத்தின் பூரிப்பே N. V. S. விலாசம் உச்ச நிலையடைந்ததற்கான உண்மைக் காரணம்.

என். வி. எஸ். புகழின் ஏற்றத்தைக் கண்டு பொறாமை கொண்டு போலிகள் N. V. S. நடைமுறையை நகல் எடுத்து நடிக்கப் பார்க்கிறார்கள். புகையிலையின் தத்துவமுணர்ந்து தயாரிக்க வகையறியாது, காம்பு கட்டைகளை சிக்காய் மெஷினில் கொடுத்து அரைத்து பட்டணம் பொடி என்று பெயர் சூட்டி பகட்டச் செய்கிறார்கள். போலிப் பொடிகளின் நகல் வேடப் பகட்டுச் செய்கைகளைச் சிதறடிக்கச் செய்த பெருமை நமது அபிமானிகட்கே சேரும். அவர்கள் 60 ஆண்டுகட்கு மேலாக அனுபவித்தடையும் ஆனந்தம் N. V. S. பட்டணம் பொடியின் இணையற்ற குணச் சிறப்பினாலாகும். N. V. S. பட்டணம் பொடி ஒன்று தவிர நமது மார்க்கெட்டுகளில் இதர போலிகள் இன்றளவு இடம்பெற முடியாதிருப்பது அவர்கள் N. V. S. விலாசத்திற்கு மட்டும் கொடுக்கும் ஆதரவே காரணம்.

என்றென்றும் N. V. S. பெயர் ஓங்கி வளரத் தாங்கள் கொடுக்கும் ஆதரவிற்கு எமது நன்றியறிதல் என்றும் தங்கட்கு உரித்தாகுக.



லிப்டன்
டீ
கெர்ல்
LIPTON'S
TEA GIRL
FINEST
INDIAN DUST TEA
சிறந்த ஸ்ட்ராங் டீ
தருகிறது
LTGX 26 TM


எப்ரல்
9உ முதல்
இல்லறஜோதி
மாடர்ன் தியேட்டர்ஸ்
தயாரிப்பு...

# இந்த ஊசியில்

## ஏப்ரல்—1954

பட்டை-7 ஊசி-7 பிரதி-79


| | | |
|---|---|---|
| தமிழ்ப் படங்களுக்கு புதிய மார்க்கெட் | தலையங்கம் | ... 6 |
| சூர்யகலா | மூவர்ணப் படம் | ... 9 |
| குண்டூசியைக் கேளுங்கள் | பதில்கள் | ... 11 |
| இலங்கையில் நக்ஷத்திரக் கிரிக்கெட் | இலங்கைக் கடிதம் | ... 16 |
| டி. வி. குமுதினி | வாழ்க்கைவர்ணனை | ... 19 |
| நுனிப்புல் | 'வெட்டுக்கிளி' | ... 23 |
| சசிகலா | ரேடியோ பேட்டி | ... 28 |
| அழகும் அறிவும் | சம்பந்தம் | ... 31 |
| மனோகரா | பட விமர்சனம் | ... 36 |
| அரசாங்கமும் சினிமாவும் | சு. ரா. | ... 38 |
| பெற்ற மனம் | வி. பாரதி | ... 41 |
| கற்கோட்டை | பட விமர்சனம் | ... 45 |
| இது செய்தி | செய்திகள் | ... 48 |
| பிரதிபலன் | ரா. வெங்கடசாமி | ... 51 |
| பொதுஜனம் பேசுகிறார் | கடிதங்கள் | ... 55 |
| புஸ்தகப் பொழுது | புஸ்தக விமர்சனம் | ... 60 |
| பணம் படுத்தும் பாடு | பட விமர்சனம் | ... 66 |
| பிரம்மலோகம் | ஸ்டுடியோச் செய்திகள் | 70 |
| சினிமா ஒரு கலையா? | மூ. புரட்சிப் பித்தன் | ... 73 |
| கைத்தறிக் கண்காட்சி | செய்தி | ... 83 |
| குண்டூசி டைரி | தினக் குறிப்பு | ... 84 |

குண்டூசி

ஆசிரியர்:
பி.ஆர்.எஸ்.கோபால்

# தமிழ்ப் படங்களுக்கு புதிய மார்க்கெட்

ஆசியா அயர்ந்து போய், அடிமையாய்க் கிடந்த காலம் துரிதமாய் மாறிவிட்டது. இப்பொழுது ஆசியாவெங்கும் சுதந்திர வெறியும், புத்துணர்ச்சியும் பரவியிருக்கிறது. ஆசிய நாடுகள் ஒன்றுடன் மற்றது நல்லெண்ணத்துடன் ஒத்துழைக்க முன் வருகின்றன. ஆசிய மக்களிடையே ஒரு புதிய சகோதர பாவம் தோன்றி, ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொள்ள வெகு தீவிரமாய் முயன்று வருகின்றனர்.

உலகம் பூராவும் நம் நேருஜியை "ஒரு தார்மிக அரசியல் வாதி" என்று கொண்டாடி வருகிறது. முக்கியமாக, கிழக்கு ஆசிய மக்கள் அவரை ஆசியாவின் சுபீக்ஷத்திற்கு வழி காட்ட வந்திருக்கும் ஜோதியாகக் கருதுகின்றனர். இந்தியாவின் அரசியல் முன்னேற்றப் பாதையை ஆசிய நாடுகள் பின்பற்றுகின்றன.

இந்த நிலைமையில் நாம் செய்ய வேண்டிய கடமைகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தியாவின் உன்னத விஷயங்களை இதர ஆசிய நாடுகள் தெரிந்து கொள்ளுவதற்கு வசதிகள் செய்ய வேண்டும். அவர்களைப் பற்றி நாமும் அதிகமாய் தெரிந்து கொள்ள வேண்டும்.

கலாசார நிபுணர்கள் நாட்டுக்கு நாடு போய்விட்டு வந்தால் மட்டும் போதாது. புஸ்தகங்களை அவர்களது மொழிகளில் அச்சிட்டு அனுப்பினால் கூட ஓரளவு பிரசாரமே கைகூடும்.

வெளி நாடுகளில் உள்ள மக்கள், இந்தியாவைப் பற்றியும் இந்திய கலாசாரத்தைப் பற்றியும் நேருக்கு நேர் பழகுவது போல் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதற்குச் சினிமாப் படங்களே மிக மிக ஏற்ற சாதனமாக இருக்கும். சினிமா பிரமாதமான பிரசார சக்தி வாய்ந்தது என்பது எல்லோரும் அறிந்ததே.

சென்ற மாதம் நம் ஸைகோன் நிருபர் எழுதியிருந்த ஒரு கடிதத்தை வெளியிட்டிருந்தோம். அதில் தமிழ்ப் படங்கள் சிலவற்றிற்கு அங்கு நல்ல ஆதரவு கிடைத்ததாகவும், பிரஞ்சு மொழியில் 'டப்' செய்யப்பட்ட "ஆன்" படம் அமோகமான வசூலைப் பெற்றது என்பதையும் குறிப்பிட்டிருந்தார் நிருபர்.

இக்கடிதத்தை கூர்மையாகப் படித்தவர்கள் நம் இந்தியப் படங்களுக்கு ஸைகோன் முதலான பிரதேசங்களில் விரிவான 'மார்க்கெட்' இருப்பதை அறிந்து கொண்டிருப்பார்கள். இதை அறிந்து கொண்டவர்கள் அதோடு நின்றுவிட்டால் பிரயோசனமேயில்லை.

முதலில், கீழ் ஆசிய நாடுகளில் எங்கெங்கு தமிழ்ப் படங்களுக்கு ஆதரவு கிடைக்கும். எந்தந்த பிரதேசங்களில் என்னென்ன பாஷைகள் பேசப்படுகின்றன, என்னென்ன பாஷைகளில் நம் படங்களை 'டப்' செய்து அனுப்பினால் வெற்றிபெற முடியும், எந்த மாதி

பட்டை-7 ஊசி-7 பிரதி-79

*ஏப்ரல்—1954*

ரிப் படங்களை அவர்கள் விரும்புகிறார்கள்—என்பது போன்ற புள்ளி விவரங்களை முதலில் தயாரிக்க வேண்டும். பிறகு, அந்நாடுகளில் வரவேற்கப்படக் கூடிய படங்களைப் பொறுக்கி யெடுத்து, 'டப்' செய்து அனுப்ப வேண்டும்.

ஹிந்தி மார்க்கெட்டிற்கு தமிழ் நாடு சில படங்களை அனுப்பி நல்ல வெற்றி பெற்றதும், பல தமிழ்ப்பட முதலாளிகள், தங்கள் தங்கள் மட்டரகமான படங்களை யெல்லாம், 'காமா சோமா' என்று டப் செய்து வட இந்தியாவுக்கு அனுப்பிவைக்கிறார்கள். இது மாதிரி செய்வது பெறுந் தவறாகும். முடிவில் தமிழ் நாட்டு முதலாளிகளுக்கு ஹிந்தி மார்க்கெட்டில் இடமே யில்லாமற் போய்விடும்.

எனவே, இதுபோல் செய்யாமல், நல்ல உயர்ந்த படங்களை மட்டும் பிற பாஷைகளில் 'டப்' செய்து வெளி நாடுகளுக்கு அனுப்ப நம் படத் தொழிலினர் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

மார்க்கெட்டை விரிவுபடுத்திக் கொள்ளுவதற்கும் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுவதற்கும் நம் பட முதலாளிகள் முன் ஒரு அரிய பெரிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது. அதை அவர்கள் நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**வருஷ சந்தா**

| | | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை | ... | ரூ. 6 |
| வெளிநாடுகள் | ... ... | ரூ. 9 |

**தனிப் பிரதி**

| | | |
|---|---|---|
| இந்தியா | ... ... | 8 அணா |
| இலங்கை | ... ... | 50 சதம் |
| வெளி நாடு | ... ... | 12 அணா |

**கட்டுரையாளர்களுக்கு**

"குண்டூசி"யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள், முதலியவை வரவேற்கப்படுகின்றன. வெளியிடப்படுபவைகளுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்.

அங்கீகரிக்கப் படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர்களை முன்னதாகவே வைத்து அனுப்பவேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு:— "குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவைகள் நிஜ நபர் எவரையும் குறிப்பிடுபவை அல்ல. —ஆசிரியர்.




பரணியின், ''சக்ரபாணி''
தெலுங்குப் படத்தில்
பானுமதி பிரமாதமாக
நடித்திருக்கிறாம்.



## சூர்யகலா

''ஜாதகம்'' புகழ் சூர்யகலா ஏவி. எம். தயாரிப்பான ''அந்த நாள்'' தமிழ்ப் படத்தில் பிரதம நடிகையாக விளங்குகிறார்.



டி. வி. குமுதினி

# குண்டூசியைக் கேளுங்கள்



**சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதிலளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.**



பத்மினி பிக்சர்ஸாரது "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" தமிழ்ப் படத்தில் கன்னி பத்மினி கையில் மலர்களுடன் காதல் ஒத்திகை பார்க்கிறார்!

எம். ஏ. எம். பாஷா (கீவளூர்)

**"காரைக்குடி சகோதரிகளில் கே. என். கமலம் நடிக்கும்போது, நன்கு பாடி நடிக்கக் கூடியவரான கே. என். ராஜலக்ஷ்மி நடிப்பதை ஏன் நிறுத்தி விட்டார்?**

அவர் வெறுமனே பலருடைய காதலியாக 'நடிப்பதில்' வெறுப்புக்கொண்டுவிட்டார் போலிருக்கிறது!

"ஏமாற்றம்" (திருச்சி

**நடிக, நடிகைகள்—விமர்சகர், ரஸிகர், டைரெக்டர், படமுதலாளி ஆகியோரில் யாரைக் கண்டு பயப்படுகிறீர்?**

இவர்களில் எவரைக்கண்டுமில்லை. 'இன்கம் டாக்ஸ்' அதிகாரியின் பெயரைக் கேட்டாலே அவர்களுக்கு சிம்ம சொப்பனம்.

ஏ. நம்பி (கொழும்பு)

**நான் சங்கீதம் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதற்கு இலங்கையில் தகுந்த வசதியில்லை. நான் அவ்விடம் வந்தால் கற்றுக் கொள்ள முடியுமா?**

ஓரிரண்டு வருஷ காலம் வேறு கவலையின்றி சென்னையில் தங்கியிருப்பதற்கான ஏற்பாட்டுடன் வந்தீரானால் சங்கீதம் கற்றுக் கொள்ளுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

எம். ஏ. வி. எஸ். ஹமீத் (கொழும்பு)

**எஸ். எஸ். வாஸன் "ஒளவையார்" மூலம் ஏராளமான புகழைப் பெற்றுவிட்டார். நான் ஒரு கதை எழுதியிருக்கிறேன். குமாரி வனஜாவையும், என்னையும் பிரதம பாகத்தில் நடிக்கச் செய்து இக்கதையைப் படமாக்க அவர் சம்மதிப்பாரா?**

மொத்தத்தில் வாஸன் ஏராளமான



"அந்த நாள்" என்று பெயர் மாற்றப்பட்டிருக்கும் ("ஒரு நாள்") படத்தில் நடிக்கும் சிவாஜி கணேசன்

புகழ் பெற்றிருப்பது உமக்குச் சகிக்கவில்லை என்று தெரிகிறது ?......

ஆர். ராசநாயகம் (திரிகோணமலை)

கே. ஆர். ராமசாமி. டி. ஆர். மஹாலிங்கம் ஆகிய இவ்விருவருள் சிறந்த சினிமாப் பாடகர் யார் ?

சந்தேகமன்னியில் டி. ஆர். மஹாலிங்கம்தான்.

வி. ஆர். ராஜேந்திரன் (சொக்கிகுளம்)

சாவித்திரி, பத்மினி இவ்விருவருள் அழகு மிக்கவர் யார் ?

நேரிலும் சரி; படத்திலும் சரி; பத்மினியின் அழகு அவரது பெயருக்கேற்றபடி சாந்தம் தவழும் தாமரையைப் போன்றது. சாவித்திரியின் அழகை ஆண்மை கலந்த அல்லிக்கு ஒப்பிடலாம்.

ந. பாஸ்கரன் (காரைக்கால்)

கிருஷ்ண குமாரியின் தமையனர் ஸ்ரீராமனும், படங்களில் நடிக்கும் ஸ்ரீராமனும் ஒருவரே தானு ?

இல்லை. உருவம், தோற்றம், தொழில் மூன்றிலுமே இவர்கள் வேறுபட்டவர்கள். தவிர, கிருஷ்ண குமாரியின் தமையனர் பெயர் வெறும் ராமன்தான்.

மணி (குளித்தலை)

சில நடிகைகளின் அத்தாட்சிப் பத்திரத்துடன் சோப்பு விளம்பரம் செய்கிருர்களே. இது அவர்களின் சம்மதத்தின் பேரில் தானே செய்யப்படுகிறது.

ஆம்; அது பற்றி நீர் சந்தேகிப்பதற்கில்லை.

ம. குருசந்திரன் (திரிகோணமலை)

"பராசக்தி", "திரும்பிப் பார்", "அன்பு", "தேவகி", "பணம்", "ஆசை மகன்", "வேலைக்காரி" ஆகியவற்றுள் சிறந்த இரு படங்களைக் குறிப்பிடவும்.

"அன்பு", "பராசக்தி".

ஸையத் கபூர் (அக்குறணை)

சிவாஜி கணேசனின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

பெஸன்ட் ரோடு, கோபாலபுரம், சென்னை–14.

ராதாகிருஷ்ணய்ய நாயுடு (நெல்லூர்)

எஸ். பாலசந்தர் தற்போது எந்தெந்தப் படத்தில் நடிக்கிருர் ?

ஏவி. எம்.மின் "பெண்" படத்தில் அவர் நடித்து வருகிருர்.

பி. கே. அமீர்ஹம்ஸா (கொழும்பு)

பாகவதரின் "புது வாழ்வு"ம் அண்ணுவின் "சொர்க்க வாசலும்" எப்பொழுது திரைக்கு வரும் ?

இவ் விரண்டில் "சொர்க்க வாசல்" சீக்கிரமே திறக்கப்படலாம்.

இ. மதனம் (கற்காடு)

"தேவதாஸ்" படத்தில் நாகேஸ்வரராவ் உண்மையாகவே மது அருந்திவிட்டு நடிக்கிருரா ?

அதுபோல் அவர் அமிதமாய் மது அருந்தி யிருந்தால் அவரைக் கொண்டு படமே தயாரித்திருக்க முடியாதே!

என். கந்தன் (சிதம்பரம்)

பெரியார் சினிமாவை எதிர்த்துப் பிரசாரம் செய்கிருரே—அவர் படத்தை ஏன்

இப்பொழுது வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் கெம்ப்ராஜின் ''கற்கோட்டை'' தமிழ்ப் படத்தில் ஜயலக்ஷ்மி.



---

**''நால்வர்'' தமிழ்ப் படத்தில் காட்டுகிறார்கள் ?**

கடவுள் மீது வெறுப்பு ஏற்படக் கூடியபடி பக்திப் படங்களைத் தயாரிப்பதில் அனுபவம் மிக்கவர்களாயிற்றே நம் பட முதலாளிகள்! அந்த 'டெக்னிக்' போலிருக்கிறது இது!

எஸ். எம். அரியான் (சிங்கீபுரம்)

**நீங்கள் காங்கிரஸ்காரரா? அல்லது கருஞ்சட்டையினரா ?**

நான் சுத்தமான வெள்ளைச் சட்டை அணியும் காங்கிரஸ்காரன். ஆனால், கலைஞர்களைப் பற்றியும், கலையைப் பற்றியும் எழுதும்போது நான் என் அரசியல் விருப்பு வெறுப்புகளுடன் விமர்சனம் செய்வதில்லை என்பது எல்லோரும் அறிந்ததே.

வி. ஆர். ராமானுஜம் (ஒரத்தூர்)

**பி. எஸ். கோவிந்தனின் சொந்த ஊர் எது? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? இப்பொழுது ஏதேனும் படங்களில் நடிக்கிறாரா?**

புளியம்பட்டியைச் சேர்ந்த கோவிந்தன நாயுடு ஜாதியைச் சேர்ந்தவர். தற்போது கோயமுத்தூரில் அசோகா பிக்சர்ஸார் தயாரித்துவரும் 'பத்மினி'' யில் நடித்து வருகிறார்.

என். ஸ்ரீநிவாஸன் (சைதாப்பேட்டை)

**'திருமணத்திற்கு இரண்டு மாலைகள்; ஒரு சொற்பொழிவாளர் போதும்' என்று ''பராசக்தி''யில் குணசேகரன் கூறுகிறானே. இவைகூட அவசியமா ?**

'பகுத்தறிவை' மேலும் கூர்மையாக உபயோகித்துப் பார்த்தால் மாலைகளும் பிரசங்கியும்கூட அவசியமில்லை என்ற முடிவுக்கு வர முடியும்! மிருகங்களென்ன மாலை மாற்றியா மணந்து கொள்ளுகின்றன!

என். ஏ. கோபாலகிருஷ்ணன் (நெல்லை)

**இப்பொழுது சில தமிழ்ப் படங்களில் மனைவி தன் கணவனின் பெயரைச் சொல்லி அழைப்பதைக் காண்கிறேன். இந்தப் பழக்கம் நமது தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ளதா?**

தலைகால் தெரியாமல் மேல்நாட்டு நாகரீகத்தில் மூழ்கிப்போன சில பெண்மணிகளும், தம் அந்தஸ்திற்குக் குறைவான கணவர்களைப் பெற்றிருக்கும் சினிமா நக்ஷத்திரங்களும் தங்கள் கணவன்மார்களைப் பெயர் சொல்லி அழைப்பதை நான் அறிவேன். ஆனால் இது இந்திய நாகரீகத்திற்கு ஒவ்வாத வழக்கம்தான் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

செ. பூபதி (பழையவண்ணாரப்பேட்டை)

**''தேவதாஸ்'' படத்தைத் தயாரித்த விநோதா பிக்சர்ஸாரின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.**

விநோதா பிக்சர்ஸ், 1, கோபால கிருஷ்ண ரோட், தியாகராயநகர், சென்னை-17.

தே. என். நடராஜன் (திருவல்லிக்கேணி)

**சிவாஜி கணேசன் தன் கடந்த நாட்களை ''திருப்பிப் பார்''ப்பாரா? நான் அவரைப் பார்க்க முடியுமா ?**

நீர் அவரை நேரில் பார்க்க விரும்புகிறீரா! 'திரும்பிப் பார்க்க' விரும்புகிறீரா என்பதை முதலில் தெரிவியும்!



ஏவி.எம். தயாரித்து வரும் "பெண்" தமிழ்ப் படத்தில் எஸ். பாலசந்தர், ஆர். கணேஷ், சாரங்கபாணி, கே. என். கமலம் சம்பந்தப்பட்ட இக் காட்சியைக் காணலாம்.

---

நம் தமிழ் நக்ஷத்திரங்கள் அப்படியொன்றும் கடந்த நாட்களை மறந்துபோகக் கூடிய அவ்வளவு காலம் சினிமாத் தொழிலில் இருப்பதில்லையே !

**என். பாலசுப்ரமண்யன் (மூலங்குடி)**

**எம். ஜி. ராமச்சந்திரன், ஸ்டன்ட் சோமு, ரஞ்சன்—ஆகிய மூவருள் கத்திச் சண்டையில் தேர்ந்தவர் யார்? வரிசைப்படி கூறவும்.**

ஸ்டன்ட் சோமு, ரஞ்சன், ராமச்சந்திரன்—சரிதானே !

**எஸ். ஏ. முகமது ஜாபர் (குன்னூர்)**

**மாதுரிதேவி தற்போது பணம் சம்பாதிப்பதிலேயே குறியாயிருக்கிறார் என்று கேள்விப்பட்டோம். எனின், அவர் குழந்தையை எப்பொழுது சம்பாதித்துக் கொள்ள நினைத்திருக்கிறார்?**

தங்கள் குழந்தைகளையே "சகோதரர் குழந்தை ; சகோதரி குழந்தை ; எதிர் வீட்டுக் குழந்தை" என்றெல்லாம் சொல்லிக் கொள்ளவேண்டிய தர்ம சங்கடமான நிலைமைகளெல்லாம் ஏற்படுவதால்தான், பொதுவாக, சினிமா நக்ஷத்திரங்கள் மணந்து கொள்ளுவதேயில்லை ; மணந்து கொண்டாலும் குழந்தை வேண்டுமென்று தவம் கிடப்பதில்லை.

**பி. கே. அமீர்ஹம்ஸா (கொழும்பு)**

**என் திருமணத்திற்கு வருபவர்களை வாசலில் நின்று கொண்டு வரவேற்பதற்கு அங்கமுத்துவை அழைத்தால் வருவாரா?**

கல்யாணத்திற்கு ஏராளமான பேர்கள் வந்து விட்டால் செலவு அதிகமாகுமே என்று நீர் நினைக்கிறாப் போலிருக்கிறது ! இல்லா விட்டால் அங்கமுத்துவை வரவேற்புக் கமிட்டித் தலைவியாக ஆக்க விரும்புவீரா, நீர் !

**வி. அலி ஹுஸேன் (கொழும்பு)**

**டி. ஆர். ராமச்சந்திரனுக்குப் பாடத் தெரியுமா? "மருமகன்" படத்தில் அவர் பாடியிருப்பது சொந்தக் குரலிலா?**

டி. ஆர். ராமச்சந்திரனுக்கு பிரமாதமாக இல்லாவிட்டாலும் சுமாராகப் பாட வரும். படங்களில் அவரேதான் பாடியிருக்கிறார்.

**துரை. முருகேசன் (அவிஞ்சி)**

பண்டரிபாய் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?... நிச்சயமாய் நீங்கள் 'பெண்ஜாதி' என்று பதில் அளிப்பீர்கள்! எனின், அவர் யாருடைய பெண்ஜாதி?

நான் பால்யத்தில் வசித்த ஊர் அல்லவா உங்கள் ஊர். ஆதலால், நான் அளிக்கக் கூடிய பதிலைப் பற்றியும் உமக்குக் கொஞ்சம் தெரிந்தேயிருக்கிறது! 'யாருடைய பெண்ஜாதி!' என்று கேட்டிரல்லவா! அவருக்கு முன்பே பிறந்துள்ள ஒரு 'ஆண் ஜாதி'யின் பெண்ஜாதியாக இனித்தான் ஆகவேண்டும் அவர்.

**எஸ். தம்பி முத்து (சுன்னுகம்)**

1953-ல் வெளிவந்த தமிழ்ப் படங்களில் அதிக வருமானத்தையும் புகழையும் பெற்ற படம் எது?

ஜெமினியின் "ஔவையார்" தான்.

**லக்ஷ்மி (மதுரை)**

'பின்னணி பாடுவதில் வஸந்தகுமாரி முன்னணியில் நிற்பதாகக் கூறினீர்கள். இனிமையாகப் பின்னணி பாடிவந்த கே. வி. ஜானகிக்கு பின்னணி பாடுவதற்கு ஏன் பட முதலாளிகள் அதிக சந்தர்ப்பம் அளிப்பதில்லை.

"ஆடை பாதி, ஆடம்பரம் பாதி, டாக்ஸி பாதி, சிபார்சு பாதி"—என்பது உமக்குத் தெரியாதா.

**ஜி. வி. அர்த்தநாரி (வேலூர், சேலம்)**

சிவாஜி கணேசன், நாகய்யா, சின்னப்பா, எம். ஜி. ராமச்சந்திரன், டி. கே. ஷண்முகம், எம். கே. ராதா—இவர்களை நடிப்புத் திறமைக்கேற்க வரிசைப்படுத்திக் கூறவும்.

நாகய்யா, சின்னப்பா, டி. கே. ஷண்முகம், சிவாஜி கணேசன், எம். கே. ராதா, எம். ஜி. ராமச்சந்திரன்.

**சு. முத்துநாடார் (கெட்ட ஹெத்தா, இலங்கை)**

எம். கே. டி. பாகவதர் சமீப காலத்தில் வெளிவந்த படங்கள் மூலம் ஏன் முன்போல் புகழ் பெறவில்லை?

"முன் மாதிரியே ரஸிகர்களைத் திருப்தி செய்ய வேண்டும்" என்று அவர் கொண்டிருக்கும் அளவுக்கு மீறிய கவலையே இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

**கமலா (கோவை)**

ஸ்ரீராம் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

நாயுடு ஜாதியைச் சேர்ந்தவர் அவர்.

**ரா. சுவாமிநாதன் (திருச்செங்கோடு)**

ஒவ்வொரு நடிகையும் ஒவ்வொரு நடிகனை மணந்து கொண்டால், அவர்களது வாழ்க்கை எப்படி இருக்கும்!

சந்தேகமேன்! "நடிகக் குஞ்சுகள்" நிறைந்ததாகி விடும்!

*பிரபல ஹிந்துஸ்தானி பாடகி பாய் ஷம்ஷட் பீகம், அவரது புத்திரி—பிரபல நக்ஷத்திரம் நஸீம் பானு போன்ற சுமார் 200 இந்தியர்கள் சமீபத்தில் லண்டனுக்குச் சென்று, பி. பி. ஸி. ரேடியோவின் ஹிந்தி ஒலிபரப்பில் பங்கெடுத்துக்கொண்டனர். பி. பி. ஸி. ஒலிப்பதிவிற்காக ஷம்ஷட் பீகம் பாடுவதை கீழே உள்ள படத்தில் நீங்கள் காணலாம்.*



# இலங்கையில் நக்ஷத்திர கிரிக்கெட்

## தமிழ் நக்ஷத்திரங்கள் கலந்துகொள்வார்கள்

பிரபல ஆர்தர் ராங்க் கோஷ்டியினர் கிரகரி பெக், வின்மின்தான் ஆகிய நக்ஷத்திரங்களைக் கொண்டு பெருவாரி பணச் செலவில் இலங்கையில் விறுவிறுப்பாகத் தயாரித்துக் கொண்டிருக்கும் "தி பெர்ப்பிள் பிளான்" என்ற ஆங்கிலப் படத்தில் நடிப்பதற்கு பர்மியர் போன்ற தோற்றமுடைய இருநூறு நடிகர்களைப் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். இந்த நடிகர் தேர்தலில் கண்டியில் பயிலும் மாணவர்களுக்கும், கொழும்பிலுள்ள சில பர்மியர்களுக்கும், முஸ்லீம்களில் சிலருக்கும் அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது. இவர்கள் எல்லோருக்கும் இப்படத்தில் நடிப்பதற்காகச் சம்பளம் கொடுக்கப்படும்.

கண்டியை அடுத்துள்ள இயற்கை வனப்புப் பொருந்திய கடுகணாவயில் எடுக்கப்படும் இப்படத்துக்கான "ஜனக் கூட்டக் காட்சியில்" பிரபல நடிகர் கிரகரி பெக்குடனும், பர்மிய யுவதி வின்மின்தான் என்பவருடனும் இந்த இருநூறு புதிய நடிகர்கள் தோற்றமளிப்பார்கள்.

### இலங்கையில் தென்னிந்திய நக்ஷத்திரங்கள் ?

இந்த இகழ் "குண்டூசி" நேயர்கள் கைகளில் இருக்கும்போது நமது தென்னிந்தியாவிலுள்ள சினிமா மண்டலம் கொஞ்சம் இருளடைந்ததாகவே காணப்படும். காரணம், இந்த சினியா மண்டலத்தை ஜெகஜோதியாகப் பிரகாசிக்கச் செய்து கொண்டிருந்த சினிமா நக்ஷத்திரங்களெல்லாம் இலங்கைக்கு அந்த சமயம் விஜயம் செய்திருப்பார்கள்,

ஏப்ரல் 10-ந் தேதி இலங்கை வரும் மகாராணியாரின் விஜயத்தை யொட்டியும், பல தர்ம ஸ்தாபனங்களினதும், கல்வி ஸ்தாபனங்களினதும் வளர்ச்சிக்காக நிதி சேர்த்துக் கொடுப்பதை யொட்டியும் தென்னிந்திய தமிழ் நட்சத்திரங்களான லலிதா, பத்மினி, ராகினி, சாவித்திரி, அம்பிகா தேவி, டி. ஆர். ராமச்சந்திரன், 'ஜெமினி' கணேசன் முதலான 15-க்கு மேற்பட்ட நக்ஷத்திரங்கள் அடங்கிய கோஷ்டியினர் ஏப்ரல் 9-ந் தேதி சென்னையிலிருந்து விமான மார்க்கமாக பறந்து வருகிறார்கள். இந்தக் கோஷ்டியினர் இலங்கையில் தங்கும் ஒரு வாரத்திலும் பலதரப்பட்ட விழாக்களிலும், நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்வார்கள்.

சமீபத்தில் இலங்கை வந்து பல கதம்ப நிகழ்ச்சிகளிலும், கிரிக்கெட் ஆட்டங்களிலும் பங்கு பெற்று இலங்கை ரஸிகர்களை மகிழ்வூட்டிச் சென்ற ராஜ்கபூர்-நர்கீஸ் கோஷ்டியில் நம் தமிழ் நாட்டு நட்சத்திரங்கள் ஒருவரேனும் இல்லாது போனது இலங்கை ரஸிகர்களிடத்தில் பெரிய ஏமாற்றத்தையும், மனக் கசப்பையும் கொடுத்தது. இப்பெருங் குறைபாட்டுக்குப் பிராயச்சித்தம் தேடுவதே போல் நம் தமிழ் நாட்டு நக்ஷத்திரங்கள் ஒருங்கே விஜயம் செய்யப்போவது இலங்கை ரஸிகர்களிடத்தில் இன்பத்தை யூட்டியிருக்கின்றது. வட இந்திய நக்ஷத்திரங்களுக்குத் தாங்கள் கொடுத்த குதூகலமான வரவேற்பினும் உயர்வாக தென்னிந்திய நக்ஷத்திரங்களுக்குக் கூடுதலான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று இப்போதிலிருந்தே சினிமா ரஸிகர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கைப் பத்திரிகைகளும் இப்போதிலிருந்தே நக்ஷத்திரங்களின் விஜயத்தை யொட்டி முன் பக்கங்களிலேயே பிரமாதப்படுத்தத் தொடங்கி விட்டன!

ஏப்ரல் மாதம் 9-ம் தேதி தென்னிந்தியாவிலிருந்து ஒரு பிரத்தியேக வமானம் மூலம் இலங்கைக்குப் பறந்து வரும் தென்னாட்டு நக்ஷத்திரங்கள், இங்குள்ள இலங்கை நக்ஷத்திரங்களான கிளாவிஸ் டி சில்வா, ருக்மணி தேவி, ரீட்டா ரத்னாயகா. ஆய்ஷா வீரக்கூன் முதலானவர்களுடன் கொழும்பில் கிரிக்கெட் ஆடுவார்கன்.

அத்துடன் ஏப்ரல் 11-ந் தேதி எலிஸபெத் மகாராணியாருக்கு இலங்கைப் பிரதமர் ஸர் ஜோன் கொத்தலாவலை அவர்கள் தமது உத்தியோக வாசஸ்தலமான 'டெம்பிள் ரீஸில்' அளிக்கவிருக்கும் பெரிய விருந்துபசாரத்தின் போது நமது நடனமணிகளான லலிதா-பத்மினி ராகினி சகோதரிகளின் நாட்டியக் கச்

சேரியும் நடைபெறும். அன்றே மகாராணியாருக்கு ஒரு நடராஜர் விக்ரகத்தைத் தென்னிந்திய நக்ஷத்திரங்கள் அன்பளிப்பாகக் கொடுத்து மகிழப் போகிறார்கள்.

*12, 14, 16* தேதிகளில் கொழும்பில் கோலாகலமான கதம்ப நிகழ்ச்சிகள் நம் நக்ஷத்திரங்களால் நடத்தப்படும். *14*-ம் தேதியன்று 'ஓவல்' மைதானத்தில் நடைபெறவிருக்கும் தென்னிந்திய - இலங்கை நக்ஷத்திரங்களின் கிரிக்கெட் ஆட்டத்தை மகாராணியாரும் பார்த்து ரஸிப்பார்கள்.

இந்த மகத்தான 'கலை விழா'வை ஏற்பாடு செய்த 'லங்கா முருகன் நவகலா பில்ம்ஸ்' ஸ்தாபனத்தின் அதிபரான எஸ். எம். நாயகம், 'ஸினிமாஸ் லிமிடெட்' அதிபரான கே. குணரத்தினம், ஆர். ஐயாத்துரை ஆகிய மூவரையும் இங்குள்ள கலை ரஸிகர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

இருந்தும், இந்த நக்ஷத்திரக் கோஷ்டியில் நடிக ரத்னங்களான நாகய்யா, நரஸிம்ம பாரதி, நம்பியார், எம். கே. தியாகராஜ பாகவதர், எம். கே. ராதா, என். எஸ். கிருஷ்ணன், மதுரம், டி. ஆர். மகாலிங்கம், பி. பானுமதி, எஸ். வரலக்ஷ்மி, குமாரி கமலா, வைஜயந்திமாலா டி. ஆர். ராஜகுமாரி, பி. கண்ணாம்பா முதலானவர்களின் பெயர்கள் இடம் பெறாது போனது இங்குள்ளோர் பலருக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் கொடுத்தருக்கிறது. நக்ஷத்திரக் கோஷ்டியினர் இலங்கைக்கு புறப்படும் கடைசி நேரத்திலாவது விடுபட்ட நக்ஷத்திரங்களும் சேர்ந்து கொள்ளுவார்கள் என்று இலங்கையர் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றனர்.

மொத்தத்தில் ஈழத்தின் தலைநகரமான கொழும்பு வரும் ஏப்ரலில் நக்ஷத்திரங்களின் தண்ணொளியில் மூழ்கித் 'தகதக'த்துக் கொண்டிருக்கும்.



சமீபத்தில் வெளிவந்துள்ள ''பணம் படுத்தும் பாடு'' படத்தில் கே. ஆர். அம்புஜவல்லி பொல்லாத வீட்டுக்காரியாகத் தோன்றிப் படுத்தும்பாடு வெகு தமாஷாக இருக்கிறது.

### யாழ்ப்பாணத்தில் களியாட்ட விழா

யாழ்ப்பாணத்தில் 'மகாஜனக் கல்லூரி'க் கட்டிட நிர்மாணத்துக்காக இப்போது களியாட்ட விழாவொன்று வெகு விமரிசையாக நடந்து கொண்டிருக்கிறது.

இந்தக் களியாட்ட விழாவில் கலந்து கொள்ளுவதற்காக ஜெமினி கணேசன், ராமசர்மா. வித்தியா, யோகம், மங்களம் முதலான பல நக்ஷத்திரங்கள் இங்கு வந்திருந்தனர்.

ஏப்ரல் 3-ந் தேதியன்று இந்தவிழாவில் கலந்து கொள்ள சென்னையிலிருந்து புஷ்பவல்லியும், அவருடைய கோஷ்டியினரும் வருவார்கள். அவர்கள் தென் இந்திய நக்ஷத்திரங்களின் 'கிரிக்கெட்' விழாவிலும் கலந்து கொள்ளுவார்கள் என்று தெரிகின்றது.



''நல்லவனு''க்கு மாலையிட்டு விட்டு, நயமாகப் பார்க்கிறார் பி. கே. சரஸ்வதி—ஸன்ரைஸ் புரடக்ஷன்ஸாரின் ''நல்லவன்'' தமிழ்ப் படத்தில்.

---

## இலங்கை வானொலியிலும் சினிமாப் பாட்டுக்கு ஆபத்து?

'இலங்கை வானொலியில் தற்போது ஒலிபரப்பப்படும் சினிமா இசைத் தட்டுகளுக்குக் கட்டணத்தைக் கூட்டித் தர வேண்டும்' என்று இந்திய சினிமாப் பட உற்பத்தியாளர்சள் ஸ்தாபனம் இலங்கை வானொலியைக் கேட்டிருப்பதால், இலங்கை வானொலி அதிகாரிகள் சினிமா இசைத் தட்டு சங்கீதம் ஒலிபரப்பப்படுவதை வெகுவாகக் குறைக்க உத்தேசித்துள்ளார்கள்.

*1948*ல் இந்திய சினிமாப் பட உற்பத்தியாளர்கட்கும், இலங்கை வானொலி நிலையத்தாருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் ஒரு தடவை ஒலிபரப்பப்படுவதற்கு 'ஒரு ரூபாய்' என ஒப்புக்கொள்ளப்பட்டதாம் இந்த ஒப்பந்தம் உள்நாட்டு ஒலிபரப்புக்குமட்டுமேயென்றும். இப்போது பெருவாரியான லாபம் தரும் 'வணிக ஒலிபரப்புக்கு' அல்லவென்றும், ஆனபடியால் கட்டணத்தைக் கூட்டி அதாவது 'வணிக ஒலிபரப்பு' வருமானத்தில் பாதியைத் தங்களுக்குத் தர வேண்டுமென்றும் இந்திய சினிமாப் பட உற்பத்தியாளர்கள் கேட்கிறார்கள். இந்தக் கோரிக்கை நியாயமானதல்ல என்று இலங்கை வானொலி அதிகாரி சுட்டிக் காட்டி இதனைக் கடுமையாக எதிர்க்கவும் செய்கிறார்.

## இலங்கையில் சங்கீத வாணி!

நாவல்பட்டி கதிரேசன் கல்லூரிக் கட்டிட நிதிக்காகப் பல கச்சேரிகள் செய்ய பிரபல பாடகி ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரி கடந்த 6-3-54 சனிக் கிழமையன்று சென்னையிலிருந்து விமான மூலம் இங்கு பறந்து வந்தார்.

விமான நிலையத்தில் ஏராள சங்கீத ரஸிகர்கள் சங்கீத வாணியைத் தரிசிக்க வந்திருந்தனர். நாவலப்பட்டி எம். பி. யின் மனைவியார் ஸ்ரீமதி ஆர். இ. ஜயதிலகா ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரிக்கு மலர் மாலையிட்டு மிகக் குதூகலமாக வரவேற்றார்.

இலங்கைப் பார்லிமென்ட் மெம்பர்களின் விடுதியான 'சிராஸ்வஸ்தியில்' சங்கீத வாணிக்கு ஒரு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு வைபவத்தில் ஜனப்பிரதிநிதிகள் சபைச் சபாநாயகர் ஸ்ரீ. ஆல்பர்ட் பிரிஸ் கல்வி மந்திரி ஸ்ரீ. எம். டி. பண்டா, பிரதமரின் தாயாரான ஸ்ரீமதி ஆலிஸ் கொத்தலாவலை. இந்தியப் பிரதிநிதி ஸ்ரீ. ஸி. ஸி. தேசாய், அவர் மனைவி மற்றும் பல பிரதிநிதிகள் உயர்தர உத்தியோகஸ்தர்கள், ஆகியோர் கலந்துகொண்டனர்.

வரவேற்புக்குத் தலைமை தாங்கியவர் சமீபத்தில் இலங்கையின் கவர்னர் ஜெனரலாகக் கடமையாற்றியவரும், பிரதம நீதியரசருமான ஸ்ரீ. ஸி. நாகலிங்கம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு, கண்டி, நாவலப்பட்டி முதலான நகரங்களில் எம். எல். வஸந்த குமாரியின் கச்சேரிகள் பிரமாதமாக நடைபெற்றன.

—''நவம்''



# டி.வி.குமுதினி கண்டேசு

"சினிமாவுக்கே லாயக்கற்றவர்கள்" என்று ஒரு சமயம் பட அதிபர்களால் கருதப்பட்ட சிலர் இப்பொழுது நக்ஷத்திரங்களாக விளங்குகின்றனர். சில நடிகைகளுக்கு சில்லறை வேஷம் கூடக் கொடுக்க மறுத்த சில பட அதிபர்கள் அதே நடிகையின் வீட்டிற்குச் சென்று, தம் படத்தில் கட்டாயம் நடிக்க வேண்டும் என்று வருந்தி வேண்டிக் கொண்டதை நான் பார்த்திருக்கிறேன்.

இதேபோல், முதல் படத்தின் மூலமே நிறையப் பெயரும் புகழும் சம்பாதித்துக் கொண்ட சில நடிகைகள், என்ன காரணத்தாலோ. பிந்திய படங்களில் ஒன்று சோபிக்காமலோ, அல்லது நடிக்கச் சந்தர்ப்பமே கிடைக்காமலோ தவிக்கின்றனர். சிலர் பட உலகிலிருந்து வெறுப்புடன் விலகியும் வட்டனர்.

இரண்டாவதாகச் சொன்ன கோஷ்டியைச் சேர்ந்த நடிகைக்கு ஒரு உதாரணம் வேண்டுமானால் டி. வி. குமுதினியைக் கூறலாம். அவரது முதல் படமான "மாத்ருபூமி"யில் அவரது நடிப்பை ரஸிகர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள். அவரை அறிமுகப்படுத்திய பட முதலாளியை வாழ்த்தினார்கள். அடுத்து வரும் படங்கள் மூலம் அவர் பிரமாதப் புகழ் பெற்று ஒரு முன்னணி நக்ஷத்திரமாக ஆகிவிடுவார் என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

நாம் எதிர்பார்ப்பவையெல்லாம் சாதாரண வாழ்க்கையிலே நடைபெறுவதில்லையே. நக்ஷத்திரங்கள் நிறைந்த சினிமா உலகிலா அவை நடைபெறும்! குமுதினி இன்றுவரை ஒரு டஜன் படங்களில் நடித்து விட்டார். ஆனால், ஒன்றில்கூட "மாத்ரு பூமி" அளவு அவர் சோபிக்கவில்லை. அவரிடம் திறமை இல்லாதது இதற்குக் காரணமல்ல. அவர் என்னவோ சினிமாவுக்கு உதவக்கூடிய வித்தைகள் பலவற்றைக் கற்று வைத்திருக்கிறார். சொந்தக் குரலில் பாடவும் தெரியும். நடிப்புத் திறமையும் ஆர்வமுமோ அவரிடம் ததும்பி நிற்கின்றன.

இவ்வளவிருந்தும் அவர் ஏன் சோபிக்கவில்லை! அவருக்கு ஏன் பட அதிபர்கள் தகுந்த ஆதரவு அளிக்கத் தவறிவிட்டனர்! இது போன்ற கேள்விகளுக்கெல்லாம் யாராலும் சரியான பதில் அளிக்கவே முடியாது.

குமுதினி சங்கீதத்துடன் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். அதே போக்கில் சென்றிருந்தாரானால் அவர் இன்று

கீழேயுள்ள படம் : 'வனசுந்தரி'யிலிருந்து



ஒரு சங்கீத விதுஷியாக விளங்கிக் கொண்டிருக்கக் கூடும். ஆனால், சினிமா அவரது வாழ்க்கையில் வலுவில் குறிக்கிட்டு, "ஆற்றில் ஒரு கால்; சேற்றில் ஒரு கால்" என்று அவரை ஆக்கியிருக்கிறது.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஆத்தங்கல் என்று ஓர் கிராமம் உளது. அதுவே குமுதினியின் சொந்த ஊர். அந்த ஊரைச் சேர்ந்த—நியாய ஸ்தலத்தில் சமாஸ்தாவாக இருந்த வீரமணி ஐயர் என்பவரின் இரண்டாவது குழந்தையாக குமுதினி நள வருஷம் பரட்டாசி மாதம் 27-ந் தேதியன்று வெள்ளிக்கிழமையும் கார்த்திகை நக்ஷத்திரமும் கூடிய தினத்தில் பிறந்தார். பெற்றோர்கள் அவருக்கு காந்திமதி என்று பெயரிட்டு அழைத்தனர். குமுதினியுடன் பிறந்த ஒரே தமையன் ஹரிஹர ஐயர் தற்போது சென்னையில் ஒரு சங்கீத உபாத்தியாயராக இருந்து வருகிறார்.

குமுதினியின் தகப்பனார் சங்கீதத்தில் மிகப் பிரியம் உடையவர். அவரே பாட்டுகளை இயற்றுவதும், பாடுவதும் உண்டாம். ஆனால் குமுதினி பிறவி உரிமையாகப் பெற்ற இனிய குரலை தகப்பனாரிடமே சங்கீதம் பயிலுவதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாதபடி தகப்பனார் இவரது நான்காவது வயதிலேயே காலமாகிவிட்டார்.



மேலேயுள்ள படம் : 'விடுதலை'யிலிருந்து

குமுதினியின் தாய் பாஷை மலையாளம். அவர் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஐந்து வருஷ காலம் கல்வி பயின்றதும் மலையாள பாஷையில்தான். அவர் வயது வந்த பின்னரே தமிழ் பாஷையை எழுதவும் படிக்கவும் தாமாகக் கற்றுக் கொண்டார்.

குமுதினி இனிய குரலைப் பெற்றிருந்தமையால், அவரது தாயார் அவருக்கு எட்டாவது வயதில் ஐயாச்சி பாகவதர் என்பவரிடம் சங்கீத சிக்ஷைக்கு ஏற்பாடு செய்து வைத்தார். ஆரம்ப சிக்ஷை முடிந்த பின்னர், குமுதினி அனந்த பாகவதர் என்பவரிடம் தொடர்ந்து, சங்கீதம் கற்றுக் கொண்டார். அதோடு பன்னிரண்டாவது வயதிலேயே

அவர் சங்கீதக் கச்சேரிகள் செய்யவும் புறப்பட்டு விட்டார்!

ஒரு தடவை கச்சேரிகள் செய்வதற்காக அவர் மதுரைக்கு வந்தார். வந்தவரை மீனாக்ஷி அம்மன் தன் நகரவாசியாகவே ஆக்கிக் கொண்டுவிட்டாள்.

இப்பொழுது "தினமணி டாக்கீஸ்" என்று வழங்கப்படும் தியேட்டர் அந்தக் காலத்தில 'மீனாக்ஷி சுந்தரம டாக்கீஸ்' என்று அழைக்கப்பட்டு வந்தது. அந்தக் காலத்தில அந்தத் தியேட்டரில் அடிக்கடி கலாட்டாக்கள் நடந்து வந்ததாம். அதனால் தியேட்டரை சாவர நடத்த முடியாமல் மானேஜர்கள் மாறிக்கொண்டேயிருந்தனர். கடைசியாக, நல்ல திடகாத்திர சரீரமும், 'கலாட்டா என்றால் கல்கண்டு' என்று எண்ணமும் கொண்டிருந்த எஸ். வி. வெங்கடேஸ்வர ஐயருக்கு மானேஜர் பதவி கிடைத்தது. அத்துடன் அடிக்கடி மானேஜர்கள் மாறுவதும் கலாட்டாக்கள் நடப்பதும் முற்றுப்புள்ளி பெற்று, அந்தத் தியேட்டர் சாந்தி மிக்க தியேட்டராக மாறவிட்டதாம்!

மானேஜர் வெங்கடேஸ்வரய்யர் பதின்மூன்று வயதான குமுதினியை இரண்டாவது மனைவியாக மணந்து கொண்டார். கல்யாணமானதும், கற்றுக்கொண்ட சங்கீதத்தைக் கைவிட்டு விடாமல், மதுரை நகரில் பெண்களுக்கு

"மாத்ரு பூமி"யில்





"அசோக் குமாரி"ல்





"ஔவையார்"ல்



''சாயா'' படத்தில்
ஒரு காட்சி

சங்கீத சிக்ஷை சொல்லிக் கொடுக்கலானார். கச்சேரிகளுக்கு அழைப்பு வந்த போது போய் வந்தார். அந்த சமயத்தில் எச். எம். வி. கம்பெனியார் இவரையும், நாகசாமி பாகவதரையும் பாடச் செய்த, சங்கீத ஆரம்ப பாடங்களை இசைத் தட்டுகளில் வெளியிட்டனர்.

அச்சமயத்தில், (1938-ல்) பிரபல டைரெக்டர் எச். எம். ரெட்டியும், ஏ. எல். ஆர். எம். கம்பெனியின் மானேஜராயிருந்த ராம்தாஸும் கதாநாயகி தேர்தலுக்காக மதுரைக்கு வந்திருந்தனர். அவர்கள் ''மதுரையில் தங்களுக்குத் தேவையான கதாநாயகி இல்லை'' என்ற எண்ணத்துடன் ஊர் திரும்பவிருந்த போது, குமுதினியைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைச் சந்தித்தனர். அவர்கள் தாங்கள் தேடி வந்த கதாநாயகி கிடைத்து விட்டதாகச் சந்தோஷித்து, குமுதினியை ஒப்பந்தம் செய்து கொண்டனர். இப்படத்தில் நடிப்பதற்காக அவர் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

எச். எம். ரெட்டி இவர் விஷயத்தில் தகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டதால் குமுதினியின் நடிப்பு ''மாத்ரு பூமி'' படத்தில் மிகப் போற்றத்தக்கதாக அமைந்து விட்டது. அவர் இந்தப் படத்திற்கெனவே கத்திச் சண்டை, குதிரை சவாரி முதலியவைகளைக் கற்றுக் கொண்டார். அப் படத்தில் அவர் பாடியுள்ள பாட்டுகளும் ரஸிகர்களுக்கு மிகப் பிடித்து விட்டன. ''நமது ஜன்ம பூமி'', ''அன்னையின் காலில் விலங்குகளோ'' என்ற பாட்டுகள் இசைத் தட்டுகளில் பதிவு செய்யப்பட்டு, மூலைக்கு மூலை ஒலித்தன. அவர் ''மாத்ரு பூமி'' ஓடிக் கொண்டிருந்த பல ஊர்களுக்குச் சென்று மேடை மீது தோன்றினர். ரஸிகர்கள் அவருக்கு ஆரவாரமான வரவேற்பளித்தார்கள்.

ஒரே படத்தின் மூலம் குமுதினி அபாரமான புகழ் பெற்று விட்டதைக்

[தொடர்ச்சி 80-ம் பக்கத்தில்]



''பொன் வயல்'' படத்தில்

# துணிப்புல்


## வெட்டுக்கிளி

“கா ......கா....கா”—ரஸிகர்களுக்குச் சட்டென்று 'காக்காய்' பாட்டுதான் நினைவுக்கு வருகிறது, இல்லையா! "பராசக்தி"யில் வந்த இந்த ஒரு பாட்டு அவ்வளவு தூரம் பிராபல்யம் அடைந்துவிட்டிருப்பது வாஸ்தவம்தான். சிறந்த கருத்து அமைந்த அப்பாட்டு அந்த அளவுக்கு பிராபல்யம் அடைந்திருப்பதில் வியப்பு எதுவுமில்லை. ஆனால், அந்தப் பாட்டை எழுதியதற்காகக் கிடைக்கும் பெருமைக்காக நடுவிலே ஒரு போட்டி ஏற்பட்டிருந்ததே, அதை நினைத்தால் நகைப்பு வருகிறது. "அந்தப் பாட்டு யாரால் எழுதப்பட்டது!" என்பதே அந்தப் போட்டி. ஒரு காரியம் வெற்றிகரமாக நடந்து முடிந்துவிட்டால் அதற்குப் பொறுப்பு தான் தான் என்று பலரும் மார்தட்டிக் கொண்டு வருவார்கள் அதே காரியம் படுதோல்வியாக முடிந்திருக்கட்டும்; நானில்லை, நீயில்லை என்று தட்டிக் கழித்து தலைமறைவார்கள்; இது உலக இயற்கை. அதுபோலவே இந்த காக்காய் பாட்டு விஷயத்திலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை சொந்தக்காரர்களாக்கியது சினிமா உலகம்.

"படத்தின் வசனங்களை எழுதிய எங்கள் மு. கருணாநிதிதான் அந்தப் பாட்டையும் எழுதினார்" என்று பெருமை பேசிக் கொண்டார்கள், வசனகர்த்தாவின் கட்சியை ஆதரிப்பவர்களும், அவரது தோழர்களும். ஆனால், அந்தப் பாட்டைப் பின்னணியில் பாடிய பாடகரைச் சேர்ந்தவர்களோ. பாட்டைப் பாடிய பாடகர்தான் அதை 'எட்டுக் கட்டியதாக' பல்லவி பாடிக்கொண்டே இருந்தார்கள். உண்மையில் அந்தப் பாட்டை இயற்றியவர் உடுமலை நாராயணக் கவி. "அந்தப் பாட்டை எழுதியது நானாக இருக்க, புகழுக்குப் பலர் யார் யாரையோ பாத்திரமாக்குகிறார்களே!" என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார் அவர். இதில் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? வசனகர்த்தாவோ, பாடகரோ அந்தப் பாட்டைப் புனைந்தது தாங்கள் தான் என்று சொல்லிக் கொள்ளவில்லை. எல்லாம் அவர்களது குழாம் செய்த வேலைதான்! காக்காயின் பெருமையே பெருமைதான்!

* * *

"காக்காய்" பாட்டைப் பற்றிச் சொன்னதும் என் நினைவு சட்டென்று காக்காயாகப் பறக்கிறது. சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு பாராட்டு விழாவைப் பற்றி எழுத. கொத்தமங்கலம் சுப்புவுக்கு நடந்த அந்தப் பாராட்டு விழாவைப் பற்றிதான் சொல்லு



ரோஹிணி வெளியிடான "பணம் படுத்தும் பாடு" படத்தில் சிவராம், என். டி. ராமராவ், சௌகார் ஜானகி சம்பந்தப்பட்ட இந்தக் காட்சியையும் காணலாம்.



"ஜாதகம்" புகழ் சூர்யகலாவும், பிரபல ஹாஸ்ய நடிகர் பி.டி. சம்பந்தமும் தோன்றும் இக்காட்சியை ஏவி. எம்மின் "ஒரு நாள்" படத்தில் கண்டு களிக்கலாம்.

---

கிறேன். இந்தப் பாராட்டு விழாவில் பலர் கலந்துகொண்டார்கள் என்றாலும், வந்திருந்தவர்களில் பெறும் பகுதியினர் 'இது அநாவசியமான ஒரு விழா' என்ற ஒரு அபிப்பிராயமே கொண்டிருந்தனர். கூட்டத்தில் புகுந்துகொண்ட நான் ஜெமினி ஊழியர்கள் பெரும்பாலோர் இருந்த பகுதியில் போய் ஒண்டிக்கொண்டேன். ஏனெனில் அவர்களிடம் நெருங்கியிருந்தால் நேயர்களுக்கு அளிக்க விஷயம் ஏதாவது கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும். என் அனுமானம் வீண் போகவில்லை. வெகு ரஸமாக இருந்தது அவர்களிடை நடந்த பேச்சு.

* * *

சுப்பு அளவுக்கு அதிகமாகப் பாராட்டப் பட்டதாகவே அனைவரும் கருதினார்கள். "ஒரு ஊழியர், ஒரே ஸ்டுடியோவில் சேர்ந்தாற்போல் பதினைந்து வருஷங்கள் இருந்தார் என்பது சினிமா சரித்திரத்திலேயே கிடையாது" என்று ஜெமினி அதிபர் கூறியபோது ஜெமினி கோஷ்டியார் என்ன பதில் முணுமுணுத்துக் கொண்டார்கள் தெரியுமா? "பசையுள்ள இடத்தில் பதினைந்து வருஷம் என்ன, ஆயுள்மட்டும் இருந்தால் நூறு வருஷம் கூட, யாரும் ஒட்டிக் கொண்டிருப்பார்களே!" என்பதுதான். அதே சமயம், ஜெமினி வாத்திய கோஷ்டியில் வேலை பார்க்கும் ஒரு ஆசாமியோ, "எனக்கு சொற்ப சம்பளமே கிடைக்கிறதென்றாலும் நானும் தான் ஜெமினி ஸ்டுடியோ ஆரம்பத்திலிருந்து அங்கு இருக்கிறேன். முன்னுக்கு வர தனியாக ஒரு கலையைக் கரைகண்டிருக்க வேண்டும். அது எனக்குத் தெரியவில்லையே!" என்று குறைப்பட்டுக் கொண்டதையும் நான் கவனிக்காமல் விடவில்லை.

* * *

என்னைக் கேட்டால், ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டே "இரவல் புகழில் பிரகாசிப்பது" (Shining in borrowed Feathers) என்று; அது இவர் விஷயத்தில் ரொம்பப் பொருத்தம் என்றுதான் சொல்லுவேன். ஏனெனில், நியாயமாக யார் யாருக்கோ போய்ச் சேர வேண்டிய

புகழ் மாலைகள் இவர் கழுத்தில் வந்து விழுகின்றன அல்லவா! "ஔவையாரை"த்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். படம் வெற்றிகரமாக அமைய முழுக்க முழுக்கப் பாடுபட்டவர்கள் ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸனும் மற்றுமுள்ள நூற்றுக்கணக்கான ஜெமினி ஊழியர்களும்தான். தவிர, சுப்பு அன்று குறிப்பிட்டாரே 'இந்த "ஔவையார்" புகழுக்கு நான் பாத்திரனல்ல" என்று. அது அவர் விநயமாகக் குறிப்பிட்டதுதான். ஆனால் அதுதான் எத்தகைய மகத்தான உண்மை தெரியுமா! ஏனெனில் அவர் முதலில் சுயமாகத் தயாரித்த "ஔவையாரை"ப் பார்த்தவர்களுக்கு, அதைப்பற்றித் தெரிந்தவர்களுக்குத் தெரியும் அந்த உண்மையின் ரகஸியம்!

*　　　*　　　*

"மிஸ் மாலினி" பட விஷயத்தைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். இப்படித்தான் புகழ் திசைமாறி சுப்புவிடம் போய் விட்டது. இந்தப் படத்திற்கு முழுக்க முழுக்க பாடுபட்டவர் ஜெமினியில் அப்பொழுது வேலையிலிருந்த பிரபல காமிரா மேதையான கே. ராம்நாத்தான். ஆனால், பெயரும் புகழும் என்னவோ சுப்புவுக்குத் தான்! "ஔவையார்" பட சம்பந்தமாக நியாயமாக பாராட்டப்பட வேண்டியவர்கள். அப்படத்தைத் துணிந்து தயாரித்த எஸ். எஸ். வாஸனும் படத்தின் வளர்ச்சிக்கு ராப்பகலாகப் பாடுபட்ட நூற்றுக் கணக்கான ஊழியர்களும் தான். ஆகவே இந்தப் பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் தவறிவிட்டார்களென்றே கருதுகிறேன்.

*　　　*　　　*

பாராட்டுக் கூட்டத்தில், சரிபாதி ரொம்ப நியாயமானது; பொருத்தமானது. காந்தி மகான் கதை'யைப் பாடிய சுப்புவை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவருடைய 'காந்தி மகான் கதையை நான் கேட்டிருக்கிறேன். பிறவி முதல் தேசிய பக்தி மிககவர் அவர். ஆகவே, கதை சொல்லும் அவருக்கு உணர்ச்சியினால் குரல் கம்முவது அதிசயமல்ல; கதையைக் கேட்கும் நமக்கும் துக்கம் தொண்டையை அடைக்கிறது. அவ்வளவு பிரமாதமாக இருக்கிறது. அவர் புனைந்துள்ள கதை; அதை அவர் உணர்ச்சியுடன் சொல்லும் பாணி.



"பொன் வயல்" புகழ் குமாரி சுசிலா சென்ற மாதம் சென்னை மேடையில் தோன்றி நடனமாடினார்.

அதற்கு அவரைப் பாராட்ட, பரந்த மெரினா பீச்சில்கூட ஒரு கூட்டம் போடலாம். ஆனால், "ஔவையார்" விஷயம் சற்று மிகையானது என்பதே பலரது அபிப்பிராயமாகும்

*　　　*　　　*


சுப்பு ஒரு அறிஞர். கிராமியப் பாட்டுகள் எழுதுவதில் கியாதி உள்ளவர், நல்ல நடிகர் (அன்றையப் பாராட்டுக்

வெண்மையான, சுத்தமான

# லக்ஸ் டாய்லட் சோப்பின்

நுரை மிகவும் மிருதுவானது,
நறுமணம் கமழ்வது..."

என்று கூறுகிறார் நிகார்






நிகார் கூறுவதாவது: "இந்த சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப் என் சருமத்தில் அற்புதமான மாறுதலை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் சுருசுருப்பான ஆழப்புகுந்து சுத்தம் செய்யும் நுரை என் சருமத்தை பட்டுப்போல் மிருதுவாகவும், நாள் முழுதும் கவர்ச்சியாகவும் இருக்கச் செய்கிறது. அன்றியும் என் வதனத்திற்கு காந்தியும், புதுப்பொலிவும் தருகிறது."

"...அதனால் தான் லக்ஸ் டாய்லட் சோப்பை எனது பூரண அழகு பராமரிப்பாக தேர்ந்தெடுத்திருக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 413-50 TM

கூட்டத்தில் அதை அவர் நன்கு வெளிப்படுத்தினர்!) முன்பு பல படங்களில் ஹாஸ்ய பாகங்களில் அவர் நடித்திருப்பதை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக—"ஸில்வர் ஸ்கிரீன்" பத்திரிகையில் நான் உதவி ஆசிரியனாக இருந்த காலம் முதல் அதாவது, சுமார் இருபது ஆண்டுகளாக அவர் எனது நண்பர். மற்றும் பல கலைகளில் வல்லுநர். எப்படி இருந்தாலும் நியாயமாகக் கிடைக்க வேண்டியதைத்தான் ஒருவர் அடையலாம் என்ற கொள்கையை உடையவன் நான்.

* * *

"ராஜி—என் கண்மணி" என்ற படம் ஒரு விசித்திரமான எண்ணத்தை பலர் மனதில் உண்டாக்கியிருந்தது. முக்கியமாக, ஆயிரக் கணக்கான "ஆனந்த விகடன்" வாசகர்களுடைய உள்ளத்திலே என்று கூற வேண்டும். "ராஜி என் கண்மணி"யின் கதை "ஆனந்தவிகடன்" பொறுப்பு ஆசிரியர் "தேவன்" எழுதியது என்பது பலரின் ஒருமுக அபிப்பிராயமாக இருந்தது. காரணம், "ராஜி" என்ற ஒரு பிரமாதமான கதா பாத்திரத்தைத் தம் விஷயதானங்களில் நடமாட விட்டு, வாசகர்கள் மனதில் ஆழ நிலைக்கும்படி வைத்துவிட்டார் "தேவன்". இந்தக் குழப்பத்திற்கு மற்றொரு காரணம் படத்தின் டைரெக்டரும் ஒரு தேவனாக (கே. ஜே. மகாதேவன்) அமைந்து விட்டதுதான்!

* * *

"ராஜி என் கண்மணி"யைப் பற்றி எழுதியதும் அப் பட சம்பந்தமான ஒரு செய்தியும் என் நினைக்கு வருகிறது. வேறு எங்குமில்லாத ஒரு புது மாதிரி வழக்கம் ஜெமினி ஸ்டுடியோவில் உண்டு. அதாவது, ஒரு படத்திற்குப் பெயர் வைப்பது குறித்து ஊழியர்களிடை ஒரு போட்டி நடக்கும் அங்கு. முதலில் "கண்ணம்மா என் காதலி" படத்திற்கு அங்கு ஒரு போட்டி வைத்தார்கள். அந்தப் பெயரைக் குறிப்பிட்டு பரிசைப் பெற்றவர் 'ஆனந்தவிகடன்' பொறுப்பாசிரியர் "தேவன்". "ராஜி என் கண்மணி"க்கும் நாமகரணம் செய்ய இப்படி ஒரு போட்டி நடந்தது. "ராஜி என் கண்மணி" பெயரைக் குறிப்பிட்டு பரிசைப் பெற்றவர் ஜெமினி விளம்பர இலாகாவில் பணிபுரியும் நீண்டகால ஊழியரான கிருஷ்ணஜீ.



காற்றினிலே நக்ஷத்திர பேட்டி

# சசிகலா

“நீங்கள் பல சினிமா நக்ஷத்திரங்களின் வாழ்க்கையைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். இன்று, சசிகலாவின் வாழ்க்கையைப் பற்றிக் கேட்பீர்கள். தன்னிடம் உள்ள கலைத் திறமையினாலும், தனது தளராத முயற்சியினாலும் முன்னுக்கு வந்தவர்களில் இவர் ஒருவர். படங்களில் சிறு பாத்திரங்களில் நடிக்க ஆரம்பித்து இன்றைய தினம் அடைந்துள்ள புகழ்ச்சியான நிலைக்கு உயர்ந்தவர். தனது திறமையினால் இந்தியா பூராவும் நன்கு தெரிந்தவர்.”—பால்ராஜின் இந்த அறிமுகத்துடன் பேட்டி ஆரம்பிக்கிறது.

பால்ராஜ் :—ஓ! சசிகலா! வந்துவிட்டீர்களா!

சசிகலா:—நமஸ்தே, பால்ராஜ் ஜி! தாமதமாகி விட்டதற்கு மன்னியுங்கள்.

பா:—நமஸ்தே, சசிஜி! உங்கள் தாமதத்திற்கு என்ன காரணம்!

ச:—உங்கள் அறிமுகத்தைக் கேட்டுக் கொண்டு வெளியிலே தான் நின்றேன். உங்கள் அறிமுகம் புகழ்ச்சிப் பாதையில் திரும்பவே, உங்கள் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்க உள்ளே வந்தேன்.

காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

பா :—பதினைந்து நிமிஷங்களுக்கு நான் பேசாமல் இருக்க முடியாது. ஆனால், உங்களைப் புகழ்வதை வேண்டுமானால் நிறுத்திக் கொள்கிறேன்.

ச:—வந்தனம்.

பா:—இப்பொழுது நான் உங்களுடன் பேசலாமா, சசி ஜி ?

ச:—தாராளமாக!

பா:—நீங்கள் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், நீங்கள் பிறந்தது எங்கே!

ச:—எனது பெற்றோர்களின் சொந்த ஊரான ஷோலாப்பூரில், 1932ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 3ம் தேதி நான் பிறந்தேன்.

பா :—உங்கள் பெற்றோர் ஷோலாப்பூரில் என்ன செய்து கொண்டிருந்தார்கள்!

ச:—என் தந்தை ஜவுளி வியாபாரம் செய்து கொண்டிருந்தார். என் தாய் குடும்ப வேலைகளைக் கவனித்து வந்தார்.

பா:—நீங்கள் சிறு பிராயத்தில் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

ச :—நான் படித்துக் கொண்டிருந்தேன். நான் செய்யக் கூடியது வேறு என்ன இருக்கிறது!

பா:—நான் வேறு விஷயம் கேள்விப் பட்டேனே!

ச:—நல்லது, நீங்கள் என்னைப் பற்றிக் கேள்விப் பட்டதை நான் அறிய விரும்புகிறேன்.

பா:—நீங்கள் நாள் பூராவும் பாடிக் கொண்டேயிருப்பது வழக்கமாமே!

ச :—நான் பாடுவது உண்மை தான், ஆனால் நாள் பூராவும் இல்லை.

பா:—அப்படியானால் உங்களுக்கு எதுதான் ரொம்பவும் பிடித்தம்!

ச:—நாடகங்களில் நடிப்பது. எனது ஐந்தாவது வயதில் நான் ‘கணபதி விழா’வில் கிருஷ்ண பகவானாக நடித்தேன். அதே பாகத்தை சேர்ந்தாற்போல் ஆறு வருஷங்கள் நடித்து வந்தேன்.

பா:—பாட்டிற்காக நீங்கள் ஏதாவது பரிசு வாங்கியிருக்கிறீர்களா!

ச:—“பந்தன்” என்ற படம் எங்கள் நகரில் திரையிடப்பட்டது. ஒரே தியேட்



டைரெக்டர் கே. ராம்னாத்தின் தயாரிப்பான "விடுதலை"யில் மிகப் பழைய முகம் கே. பி. கேசவனை புதுமுகம் மோஹனுடன் சேர்ந்தார்ப்போல் பார்த்திருப்பீர்கள்.

---

டரில் இருபத்தி ஐந்து வாரங்கள் நடந்தது. அந்தத் தியேட்டரின் மானேஜர் வெள்ளி விழாக் கொண்டாடினார். அன்றைய தினம் சங்கீதப் போட்டி ஒன்றை அவர் ஏற்பாடு செய்திருந்தார். நான் "சல் சல் ரி நௌஜவான்" என்ற பாட்டைப் பாடி முதற் பரிசைப் பெற்றேன்.

பா:—(கை தட்டி) சசி ஜீ, பேஷ், பேஷ்! இப்பொழுது எங்களுக்காக அதே பாட்டைப் பாடுங்கள்.

ச:—பால்ராஜ் ஸாஹிப், நான் என் சிறு பிராயத்தில் தான் பாடுவது வழக்கம் என்று சொன்னேனே! சரி, மேலே ஏதாவது கேள்வி கேளுங்கள்.

பா:—வேறு ஏதாவது கேள்வியா ......! நான் வேறு என்ன கேள்வி உங்களைக் கேட்பது......ஆம், உங்களுக்கு எத்தனை சகோதர சகோதரிகள்!

ச:—நாங்கள் அறுவர். மூன்று சகோதரர்கள். இரண்டு சகோதரிகள். நான் ஐந்தாவது.

பா:—அநேகமாக ஐந்தாவதாகப் பிறக்கிறவர்களே சாதாரணமாக ரொம்ப குறும்புத்தனம் செய்கிறவர்கள். ஆகவே நீங்களும் உங்கள் சிறு பிராயத்தில் மிகவும் துஷ்டையாகத் தான் இருந்திருப்பீர்கள்.

ச:—பால்ராஜ்! ஏன் சுற்றி வளைத்துக் கேள்வி போடுகிறீர்கள்! எனது சிறு பிராயச் செயல்களில் சிலவற்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள், அவ்வளவு தானே!

பா:—சரி, அவைகளைத் தான் சொல்லுங்களேன்.

ச:—ஒரு நாள், கடையைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு என்னையும் என் தமக்கையையும் வைத்து விட்டுப் போனார் எங்கள் தந்தை. அப்பொழுது எனக்கும் என் தமக்கைக்கும் ஒரு சச்சரவு ஏற்பட்டது. நான் கோபத்தில் அவள் மூக்கில் ஒரு குத்து விட்டேன். அவள் மூக்கிலிருந்து ரத்தம் கொட்ட ஆரம்பித்தது.

பா:—சரி நான், உங்கள் தந்தை உங்களைச் சும்மா விட்டிருக்க மாட்டாரே!

ச:—அது தான் இல்லை பால்ராஜ் ஜி! என் பெற்றோருக்கு என்னிடம் அலாதிப் பிரியம். ஆகவே, அவர்கள் என்னைக் கோபிக்கவில்லை. ஆனால், அதற்குப் பின் ஏனோ தெரியவில்லை, நான் யாருடனும் சண்டைக்குப் போனதே கிடையாது.

பா:—உங்கள் முகத்தைப் பார்த்தால் சிறு வயதில் நீங்கள் மிகவும் கண்டிப்பான ஒரு ஆசாமியாக இருந்திருப்பீர்கள் என்று தெரிகிறது. ஆனால் உங்கள் பேச்சைக் கவனிக்கும் போது வேறு விதமாகத் தெரிகிறதே!

ச:—என்ன!

பா:—நீங்கள் தகராறு செய்வீர்கள் என்பது தான் தெரிகிறது.

ச:—நான் ஒரே ஒரு தடவை தான் அப்படி சண்டை பிடித்தேன் என்று சொல்லுகிறேனே.



மூன்பு சென்னையில் நடந்த நக்ஷத்திர கிரிக்கெட் ஆட்டத்தின் போது துணை விமர்சனம் செய்த பிரபல ஹாஸ்ய நடிகர் டேவிட். ஆர். கே. பில்ம்ஸின் "பூட் பாலிஷ்" படத்தில் அவரது தோற்றம்.

---

பா:—சரி, நீங்கள் ஏன் ஷோலாப்பூரை விட்டு பம்பாய்க்கு வந்தீர்கள்!

த:—எங்கள் உறவினர்கள் சிலர் பம்பாயில் இருந்தார்கள். நாங்கள் அடிக்கடி இங்கு வந்து அவர்களுடன் தங்குவது வழக்கம்.

பா:—நீங்கள் பட உலகில் எப்படிப் பிரவேசித்தீர்கள்!

த:—இந்தத் தொழிலுக்கு நான் வர வேண்டியதாகி விட்டது, வந்தேன். இப்பொழுது என்ன செய்ய முடியும்!

பா:—அது சரி, நான் கேட்பது நீங்கள் முதல் முதல் படத்தில் நடிக்க எப்படி சந்தர்ப்பம் கிடைத்தது என்பதுதான்!

த:—ஷுகுத் ஹுஸேன் ரசூல் என்பவர் "ஸீனத்" படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அதாவது நான் 1945ம் வருஷத்தைப் பற்றிப் பேசுகிறேன். அப்படத்தில் வந்த 'கவலி'யில் எனக்கு ஒரு சிறு பாத்திரம் கொடுத்தார்.

பா:—அதில் பல பெண்கள் பங்கெடுத்துக் கொண்டார்களல்லவா?

த:—ஆம். அதில் சிறப்பாக நடிக்கும் பெண்ணுக்கு இருபத்தி ஐந்து ரூபாய் பரிசு ஒன்று ஏற்படுத்தினர் ஷாகுத்.

பா:—உங்களுக்குத்தான் அந்தப் பரிசு கிடைத்திருக்க வேண்டும்.

த:—ஆம். கடவுள் கிருபையால் எனக்கு முதல் பரிசு கிடைத்தது.

பா:—சரி ஜீ! இப்படத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் போது படத்தில் பங்கெடுத்துக் கொண்ட எல்லா நடிகர், நடிகைகளுக்கும் மெடல்கள் வழங்கப் பட்டனவே; உங்களுக்கும் ஒன்று கிடைத்திருக்க வேண்டுமே!

த:—ஆம், எனக்கும் கிடைத்தது.

பா:—அதன் பின் ஷாகுத் தனது அடுத்த படங்களிலும் உங்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்திருக்க வேண்டுமே!

த:—ஷாகுத்தால் நான் மூன்று வருஷங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டேன். "லுக்னூ" என்ற படத்தில் நடித்தேன்.

பா:—அதன் பிறகு தான் ஷாகுத் பாகிஸ்தானுக்குப் போய்விட்டார்.

த:—பி. என். அரோராவினால் அவரது "டோலி" படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டேன்.

பா:—"டோலி"க்குப் பின் நீங்கள் வேறு எந்தப் படங்களில் நடித்தீர்கள்!

த:—"டோலி"க்குப் பின் "பக்டி", "கேர்ல்ஸ் ஸ்கூல்" "ப்ரீத்கா கீத்" "நஸாரே", "அயெஷ்", "ரூபயா", "ராஜ்-ராணி", "தீன்-பட்டி-சார்-ரஸ்தா". "அஜிப் லட்கி". "சர்தஜ்", "சாசா சௌதரி", "சுரங்" "ஜீவன் ஜோதி" ஆகிய படங்களில் நடித்தேன்.

பா:—நீங்கள் பல படங்களில் நடித்திருக்கிறீர்கள். எந்தப் படத்தில் மிக நன்றாக நடித்திருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்!

த:—"சரங்" படத்திற்கு முன் எனக்கு "நஸரே"யில் என் பாத்திரம் மிகவும் பிடித்ததாக இருந்தது. ஆனால் இப்பொழுது, எனக்குக் கிடைத்த நல்ல பாத்திரமே "சுரங்" படத்தில்தான் என்று நான் நினைக்கிறேன்.

பா:—ஆம். சந்தேகம் இல்லை. "சுரங்" படத்தில் உங்கள் நடிப்பு மிகவும் உயர்

[தொடர்ச்சி 46-ம் பக்கத்தில்]

# அழகும் அறிவும்

— சம்பந்தம்

அந்தச் செய்தியை அறிந்ததும், இன்பத்தையே ஊசியின் மூலம் தன் உடலில் ஏற்றினாற்போலிருந்தது சுமங்களாவிற்கு. "உண்மையாகவே அவர் சம்மதித்து விட்டார்!" என்று கேட்டு மனப்புளகிதங் கொண்டாள் அவள்!

ஆனால், வெகு நாழியாகியும் இன்னும் சத்தியன் வரக்காணோமே! சுமங்களாவின் கண்கள் அங்கே சுழன்று சுழன்று பார்த்தன. அங்கு அவன் இல்லாததைக் கண்டு, அவள் மனம் சஞ்சலத்தால் சாம்பியது. இருந்தும் அன்று அவளுடைய அரங்கேற்ற நாட்டியமாயிற்றே! அனைவரையும் வரவேற்று விட்டு, பிறகு மறுதளிக்க முடியுமா!

அதனால் சற்று நாழிகைக்குள் நாட்டியத்திற்கான மேல் ஆடைகள் மினுமினுக்க, அலங்கார பூஷிதையாய் தளர் நடை நடந்து மெல்லென மேடைக்கு வந்தாள். உடனே 'கும் கும்' என்னும் மத்தளச் சத்தத்தோடு கலந்து பாதச் சதங்கை ஒலி கல்கல் என்று சப்திக்க, சுமங்களா 'நிருத்தம்' ஆட ஆரம்பித்தாள். அடிக்கடி அவளுடைய பாத கமலங்கள் ஆகாயத்திலேயே மிதந்து நின்றன. வெவ்வேறு காலப் பிரமாணங்களில் வெவ்வேறு ஜதிகளில் அவள் விதம் விதமாக நிருத்த வகைகளை ஆடிக் காட்டினாள்.

அவள் பம்பரம் போல் சுழன்றாடிய போது, பார்த்துக் கொண்டிருந்தவர்களின் கண்களும் சுழன்றன. அந்த சமயத்தில் தானே சுமங்களாவும் அவனை அங்கு கண்டாள்! பின்னணி சங்கீதப் பகுதியில் வீணையும் கையுமாய் அமர்ந்திருந்தான் சத்தியன்.

உடனே அவள் மனம் ஆனந்தக் கடலாடியது; தன்னையே மறந்து ஆடினாள்.

பரதநாட்டிய வினிகையில் முதற் பகுதியான 'நிருத்தம்' முடிவடைந்து சற்று ஓய்வு பெற்றாள் சுமங்களா. அந்த இடைவேளையில் வீணையும் கையுமாய் நவநவமான கீதங்களைப் பொழிந்து தள்ளினான் சத்தியன். அவ்வீணையின் ஜங்காரம், அனைவருடைய உடலையும் உள்ளத்தையும் ஒருவித இன்ப வேதனையால் துடிக்கச் செய்தது.

பிறகு அபிநயம் பிடிக்க ஆரம்பித்தாள். சத்தியனின் கணீரென்ற இனிமையான தேன் குரல்தான் பின்னாலிருந்து மிதந்து வந்தது. மெய்ம் மறந்து ஆடினாள் சுமங்களா. ஆகா!

'துள்ளி வருகுது வேல்
தூர நில் பகையே'

என்ற பதத்திற்கு அவள் துள்ளிக் குதித்த வேகம் உண்டே! அனைவரும் தங்கள் மேல் வேல் பாய்வதாகவே எண்ணி சற்று நகர்ந்து கொடுத்தார்கள் அடுத்த படி,

'ஆசை முகம் மறந்து போச்சே
இதை யாரிடம் சொல்வேனடி தோழி'

என்ற பதத்திலிருந்த கனிவு யாவரையும் மிகவும் பாதித்தது. அப்பொழுது ஏற்பட்ட அவள் முகபாவத்தைக் கண்டு, அனைவரும் பாகாய் உருகினர்.

அப்பொழுது சுமங்களா நாட்டியமாடவில்லை. நடனக்கலையே அவளை ஆட்கொண்டிருந்தது!

அரங்கேற்றம் முடிந்ததும் முதன் முதலாய் சத்தியனுக்கு நமஸ்கரித்து ஆசி பெறவே ஓடினாள் சுமங்களா. ஆனால், அதற்குள் அவன் சென்றுவிட்டானே! உடனே மனம் வெதும்பி ஓடிச்சென்று தன் மஞ்சத்தின் மீது குப்புறவிழுந்தாள்; குலுங்கக் குலுங்க அழுதாள். அனைவரும் அவளுக்கு ஏதேதோ சொல்லித் தேற்றினார்கள்! பலன் இல்லை. அவள் அன்றிரவு சாப்பிடக்கூட வரவில்லை.

## 2

சுமங்களா வேறு யாரோ இல்லை சத்தியனுக்கு; அவனுடைய சொந்த அத்தை

ப கள்தான் அவள். ஆனுல். செல்வத்தி லேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்த ஏகபுதல்வி. சத்தியன் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆனுல் தன் பரம்பரை குணத்திற்கேற்ப இயற்கையாகவே சங்கீத ஞானம் படைத்தவன். அதோடு வீணையும் நன்ருய் மீட்டுவான். சுமங்களா அவனிடம் பாட்டு கற்றுக் கொள்ளவுவதான் வந்தாள். ஆனுல் அவளுடைய நவ யௌவன சௌந்தரிய முகத்தையும், எழில் பொருந்திய மனமோகன உடல் வளப்பத்தையும் கண்டு, சத்தியனே சுமங்களாவை நாட்டியம் கற்றுக்கொள்ளத் தூண்டினுன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் அவனே தான் செய்வித்தான். அவளும் அதி ஆர்வமாய் நாட்டியம் கற்றுக் கொண்டாள்.

சத்தியன் அவளை அடிக்கடி ஆடச் சொல்லிக் களிப்புறுவான். அபிநயத்துக்கேற்ற பதங்களை தயாரித்துக் கொண்டு தானே வீணையும் கையுமாய் அமருவான் சத்தியன். சுமங்களா வெகு நளினமாக அபிநயம் பிடித்துக் காட்டுவாள். அது ஏனே அவனுடைய பாட்டிற்குத்தான் அவளுடைய நாட்டியம் சோபித்தது.

'கலை'யும் 'கலை'யும் கலந்து பழகின. அறிவு அழகை மயக்கியது; அழகு அறிவை மயக்கியது. இருவரும் ஒன்றுசேரும் இன்ப நாளை எதிர் பார்த்துக் கிடந்தார்கள்.

ஆனுல், உற்ற வயதில் சத்தியனுக்கு திருமணம் செய்துவைக்க, அவன் அம்மா தன் அண்ணன் மகள் லோசனுவையே முடித்துக் கொண்டு வந்தாள். அப்பொழுது சத்தியனின் குளிர்ந்த பார்வையில் ஏற்பட்ட மாறுபாட்டைக் கண்டு அவள் நீட்டிப் பேச ஆரம்பித்து விட்டாள். ''சுமங்களா உன்னைச் சுற்றிக்கொண்டிருக்கிருள் என்று நினைக்காதே சத்தியா! அவள் பெரிய கை; நேரத்துக்கு ஒரு உடை, நிமிஷத்திற்கு ஒரு மினுக்கு, வினடிக்கு ஒரு பகட்டு. அவளுக்கும் நமக்கும் கட்டி வருமா! அவள் தளுக்கும் குலுக்கும் எத்தனையோ பேர்களை மயக்கும், அதிலே அவளுக்கு ஒருவித ஆனந்தம், தெரியுமா! நம் லோசனு அப்படியில்லை. உடனே நம் குடும்பத்தை எடுத்து நடத்துவாள். அவளும் நன்ருய் பாடுவாள். அவளைப் பாடச் சொல்லி தினம் வீணையை மீட்டிக்கொண்டிரேன்'' என்ருள்.

நாள்தோறும்] அடிக்கடி ஓயாமல்



சொல்லிக் காட்டிய இவ் வார்த்தைகள், சத்தியன் கனவை அரித்துக் கரைத்து விட்டன. பிறகு அம்மாவின் இஷ்டப்படி லோசனுவையே மணந்து கொண்டான் சத்தியன்.

லோசனுவும் மிகுந்த அழகிதான். அவள் எழிலைவிட, அவள் இன்னிசைக் குரல்தான் சத்தியனை மயக்கியது. கல்யாணம் ஆன புதிதில், அவளை தினம் பாடச் சொல்லி, வீணையை மீட்டினுன் சத்தியன். ஆனுல், நாளடைவில் அப்படியே முடிகிறதா! எத்தனையோ குடும்பத் தொல்லைகள்!

சத்தியன் அம்மா உடம்பிற்கு வந்து படுத்துக் கொண்டாள். லோசனுதானே அவளுக்கு சிசுருஷை செய்தாக வேண்டும்! அடிக்கடி அவள் அவன் பக்கலிலேயே வந்து உட்கார்ந்து கொண்டிருக்க முடியுமா! நாளடைவல் சத்தியனுக் கென்னவோ உப்புச் சப்பற்ற வாழ்க்கையாய் தோன்றியது. அடிக்கடி வெளியூர் கச்சேரிகளுக்குச் சென்று செல்வம் குவித்துங் கூட, அவன் மனதுக் கென்னவோ ஏதோ குறையொன்றே தோன்றியது. கல்யாணமாகி இத்தனை வருஷங்களாகயும் குழந்தை யொன்றும் பிறக்கவில்லையே என்று அவன் அம்மாவிற்கு அளவில்லா வருத்தம். அடிக்கடி சத்தியன் திருமுகத்தை ஏறிட்டுப் பார்த்து விட்டுப் பெருமூச்செறிந்தாள். நாளடைவில் அவள் மனவருத்தமே அவள் உடம்பைத் தின்றது. திடுக்கென்று ஒரு நாள் அவன் தாய் கண்களை மூடிக்கொண்டு விட்டாள்.



அந்த வருஷக் கடைசியில்தான் லோசனு கருவுற்ருள். சீக்கிரத்தில், தான் ஒரு அப்பா ஆகப்போகிறுமென்று சத்தியனுக்கு உள்ளூர அதிக சந்தோஷம். லோசனுவுக்கு எல்லாவித சிசுருஷைகளையும் செய்துகொண்டு, அவளை சந்தோஷமாய் வைத்துக் கொண்டிருந்தான். அடிக்கடி, 'இன்னும் ஆறு மாதங்கள்', 'இன்னும் ஐந்து மாதங்கள்' என்று விரல் விட்டு கணக்கிட்டுக் கொண்டிருந் சத்தியன், வெளிக் கச்சேரிகளுக்குக்கூட அதிகம் செல்வதில்லை.

அன்று லோசனுவுக்கு உடம்பு சு...யாகவே யில்லை. அடிக்கடி படுத்துப் ப...த்து எழுந்தாள். சத்தியன் அவளை அடிக்கடி விசாரித்துக் கொண்டிருந்தான். அந்...

யில் அவளைத் தனியே விட்டு வெளியே போகப் பிரியமில்லைதான் சத்தியனுக்கு. என்ன செய்வது! அவர்கள்தான் லோசனவை மிகவும் வருந்திக் கேட்டு வார்த்தை வாங்கிச் சென்று விட்டார்களே!

சுமங்களாவன் காட்டிய அரங்கேற்றத்துக்கு சென்று திரும்பிவர இரவு வெகு நேரமாகி விட்டது. அதற்குள் லோசனு குறைப் பிரசவமாகிக் கிடந்தாள். அண்டையில் பக்கத்திலுள்ளவர்களை உதவிக்கு வைத்துக் கொண்டு அவளுக்கு சிசுருஷை செய்தான் சத்தியன். போட்ட கை போட்டபடி உயிரற்ற சவம்போல் கிடந்தாள் லோசனு. அவள் மனம் அல்லோல கல்லோலப் பட்டது. டாக்டருக்கும் ஆள்விட்டு அனுப்பினுன்.

3

பலபலவென்று விடிந்து கொண்டிருந்தது. பாதி சாத்தியிருந்த அறைக் கதவை மெதுவாய் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் சுமங்களா. சத்தியன் அங்கு சோகமே உருவாய் தன் தலையை மேஜையின் மீது கவிழ்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். ஏதோ அரவம் கேட்டுத் தலையை நிமிர்த்தினன். அந்த நேரத்திலே கண்களிலே தோன்றி காமறலே மறைந்த கண்ணீர்த் துளிகள், புண்ணுகிக் கிடந்த அவன் மனதைப் படம் பிடித்துக் காட்டின. அதைக் கண்ட சுமங்களா துணுக்குற்றாள். "இப்பொழுதுதான் தெரியும் எனக்கு. லோசனுவுக்கு எப்படியிருக்கிறது?" என்று பரபரப்புற்றாள். "உம். டாக்டர் உள்ளே போயிருக்கிறார். வந்தால்தான் தெரியும்" என்று முணுமுணுத்தான்.

இத்தனை நாட்களாக வராத அவள், அன்று திடுக்கென வந்ததனல், சுமங்களாவைப் பற்றிய நினைப்பு அவன் மனதை உறுத்திற்று. அந்தக் காலத்திலிருந்த அவள் பகட்டு எங்கே மறைந்ததோ! 'காதலும் ஜீவனும் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்தைப் பற்றியல்லவா சிரத்தையுடன் விசாரிக்க வந்திருக்கிறாள் இப்பொழுது' என்று எண்ணிய அவன் மனம் சிறிது சலனமுற்றது. "இப்படி உட்காரேன் சுமங்களா" என்று சமீபத்து நாற்காலியைக் காட்டினன். சில சமயங்களில் பாட்டிலே ஸ்வர பேதங் காணுமே, அது மாதிரியிருந்தது அவன் குரல் அப்பொழுது.

"உம். இதோ சமீபத்தில இருக்கும் என்னை இத்தனை அவஸ்தையான நிலையில் கூட கூப்பிடக் கூடாதென்று எண்ணமோ!" என்று சொல்லிக் கொண்டே கீழே விரித்துக் கிடந்த பாயில் காலை மட


தொடர்ச்சி 63-ம் பக்கம்

"உமா" தங்க கவரிங் காசு நெக்லேஸ்
ரூ. 25/- பார்சல் சார்ஜ் தனி




கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.
உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ்
உமா மஹால் :: மசூலிப்பட்டணம்

அவர்கள் வளரும் பருவத்தில்



ஞாபகமிருக்கட்டும்

உபரி விடமின்களுடன் கூடிய பிரிட்டானியா பிஸ்கட்டுகள் குழந்தைகளால் விரும்பப்படுகின்றன. அவர்களுக்கு வேண்டிய விசேஷ போஷாக்கைத்தரும் இதையே வாங்கிக் கொடுங்கள்.

சிறந்த பிஸ்கோத்துகள்

# பிரிட்டானியா

ஜாம் மற்றும் ஸர்க்கஸ் வகைகள் குழந்தைகளுக்கென்றே ஏற்பட்டவை.

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

BBX 2TM

# ஜனரஞ்சகமான படம் "மனோகரா"

## சிவாஜி கணேசனின் சிறந்த நடிப்பு

"தேடினேன்...தேடினேன்...தேடினேன்!!! திரைக் கதையின் முடிவுவரை சென்று தேடினேன். ஆனால் நான் நாடினது கிடைக்கவில்லை." கடந்த அரை நூற்றாண்டாக, ஆயிரம் தடவைகளுக்கும் மேலாக, பலராலும் நாடகமாக நடிக்கப்பட்ட, ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியாரின் "மனோஹரா" நாடகக் கதையை, மனோஹரா பிக்சர்ஸின் "மனோகரா" படக் கதையில் தேடினேன். சங்கிலி அறுக்கும் கட்டம், வஸந்த விழா, நாடகம் நடிப்பது இப்படி சில முக்கியமான கட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றனவெனினும் நாடகக் கதைக்கும் திரைக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்! இதனால் திரைக் கதையின் தரத்தை நான் குறைத்துக் கூறுவதாக அர்த்தமல்ல. கேசரிவர்மன் என்ற ஒரு புதிய பாத்திரத்தையும் சேர்த்து திரைக் கதையை ரஸிக்கும்படியாகவே அமைத்திருக்கிறார் மு.கருணாநிதி.

வசனங்கள் வழக்கம்போலவே கனல் தெறிப்பதாக இருக்கின்றன. முக்கியமாக சங்கிலி அறுக்கும் கட்டத்திலும், இறுதியில் கண்ணாம்பா பேசும் கட்டத்திலும் சம்பாஷணைகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன. பல இடங்களில் இரு பொருள்பட வசனங்கள் எழுதவும் தவறவில்லை. "பரசுராமன் அவதாரம்; நான் மனிதன்" என்று வசனம் தீட்டிய மு. கருணாநிதிகூட, மனிதனுக்கு மேற்பட்ட சக்தி ஒன்று இருக்கிறது என்பதை, அவர் அறியாமலே இறுதிக் கட்டத்தில் (தூணோடு பிணைத்த மனோஹரன் தூணை இடித்துக் கொண்டு கிளம்பும் இடம்) சேர்த்திருக்கிறார். அதுவும் 'அவன்' செயல்தான்!

நடிப்பில் முதல் ஸ்தானம் மனோகரனாக நடிக்கும் சிவாஜி கணேசனையே சாரும். ஆனால், இவரது நடிப்பு காதல் கடடங்களைத் தவிர மற்ற இடங்களில்தான் நன்றாக இருக்கிறது. கோபத்தினால் புலியாக மாறும் அவர், தாயின் வார்த்தையைக் கேட்டதும் பூனையாக அடங்கிப் போகும் கட்டங்களிலும், தந்தையிடம் வாதம் புரியும் கட்டங்களிலும் இவரது நடிப்பு சிறப்பாக இருக்கிறது. வெகு நீண்ட வசனங்களை அவைகளின் கருத்துச் சிதையாதபடி இவர் நன்கு பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது. மனோகரனின் நண்பன் ராஜப்பிரியனாக வரும் எஸ். எஸ். ராஜேந்திரன் பரக்கட்டை மாதிரி தோற்றமளிக்கிறார்;

புருஷோத்தமனாக வரும் சதாசிவராவின் தோற்றம் கம்பீரமாக இருக்கிறது. நடிப்பும் பரவாயில்லை. சத்தியசீலராக வரும் ஜாவர் சீதாராமன் பாத்திரத்திற்கேற்ப சாந்தமாக நன்கு நடித்திருக்கிறார். எஸ். ஏ. நடராஜன் உக்ரசேனாகவும் எம். கே. முஸ்தாபா கேசரிவர்மனாகவும் சிறப்பாக நடித்திருக்கின்றனர்.

மனோகரன் கதையிலேயே வஸந்தன் பாத்தரம் ஒரு அரிய சிருஷ்டி. அந்தப் பாத்திரத்தில் தோன்றும் எஸ். ராதாகிருஷ்ணனின் நடிப்பு பூஜ்யமாகப் போய்விட்டது. கோமாளிக் கூத்தாக இருக்கிறது. இந்தப் பாத்திரத்தில் டி. ஆர். ராமச்சந்திரனைப் போட்டிருந்தால் மிகப் பிரமாதமாக இருந்திருக்கும் என்றே பலரும் கருதுவார்கள்.

நடிகைகளில் பத்மாவதியாக வரும் பி. கண்ணாம்பாவின் நடிப்பு சோக கட்டங்களில் உயர்வாக இருக்கிறது. இறுதியில், "பொங்கி எழு மகனே" என்று கூறும் கட்டத்தில் இவர் நடிப்பு பிரமிக்க வைக்கிறது என்றாலும் "கண்ணகி" படத்தில் பாண்டியன் சபையை ஞாபகப்படுத்துவதாக இருக்கிறது. வஸந்தசேனைப் பாத்திரத்திற்குப் பொருத்தமாக நடித்திருக்கிறார் டி. ஆர். ராஜகுமாரி. இவரது சாகஸ நடிப்பு நன்றாயிருக்கிறது. என்றாலும், தமது வயதை மறந்து இவர் குதிப்பதும் ஆடுவது நகைப்புக்கிடமாக இருக்கிறது. மனோஹரனையே எதிர்த்துப் போர் புரியப் புறப்படும் வீராங்கனையான விஜயாளின் பாத்திரத்திற்கு கிரிஜா பொருத்தமேயில்லை. அவரது பாகம் இப்படத்தில் சோடையாகப் போய்விட்டது. முத்துலக்ஷ்மி இப்படத்தில் சோபிக்கவேயில்லை. காரணம் அவருக்கு ஏற்ற பாகம் இப்படத்தில் அளிக்கப்படாததுதான். படத்தில் சில நிமிடங்களே வந்து போகும் பண்டரிபாயையும், பி. கே.

சரஸ்வதியையும் பற்றிக் குறிப்பிடாமல் விடுவதே நலம்.

சங்கீத அம்சத்தைப் பொருத்தவரை இப்படம் ஒரு ஏமாற்றமே. பாட்டுகள் எதுவும் மனதில் நிலைத்து நிற்பதாக இல்லை. குமாரி கமலாவின் நடனம் ரஸிக்கும்படி இருக்கிறது.

டைரெக்‌ஷனைப் பொருத்தவரை, பிரஸாத்தின் திறமை "ஓகோ" என்று சிலாகிக்கும்படி இல்லை. விஷப் பாம்பிலிருந்து வஸந்த சேனையை 'மிக்ஸ்' பண்ணியிருப்பது ரொம்பப் பழைய டெக்னிக். நாடகம் வஸந்த விழா இவைகளை வெகுவாகக் குறைத்து விறுவிறுப்பாக்கியிருக்கலாம். விஷம் கொடுக்கப்பட்ட கேசரி வர்மன் உயிர் தப்பினது எப்படி என்பதை சரியானபடி புரியும்படி காட்டியிருக்கலாம். அக்ஷயனாக மாறிய மனோஹரனை உக்கிரசேனனது ஆட்கள் கூடப் புரிந்து கொள்ளாதது ஆச்சரியமே!

யுத்தக் காட்சிகளை மேலும் தத்ரூபமாகக் காட்டியிருக்கலாம். சினிமாவைப் பார்த்து விட்டு சிறு பையன்கள் நடுத்தெருவில் கத்திச் சண்டை போடுவது போல இருக்கிறது.

பிரம்மாண்டமான காட்சிகளை 'செகர்' போட்டுக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவைகள் சரியானபடி பயன்படுத்திக் கொள்ளப் படவில்லை என்பது தெரிகிறது. ஒலி, ஒளிப்பதிவுகள் திருப்திகரமாக இல்லை. படத்தைப் பார்க்கும் போது 'மனோஹரா கதையே இரவில் நடந்ததோ!' என்று எண்ணும்படி இருக்கிறது. வெளிச்ச ஏற்பாடு திருப்திகரமாக இல்லை. பல இடங்களில் பேசப்படும் வசனங்கள் புரிவதே இல்லை. அருபனாக கேசரிவர்மன் செய்யும் செயல்கள்–தந்திரக் காட்சிகள்–குதிரை தானே ஓடி வருவது, தனிக் கத்தி மட்டும் போர் புரிவது போன்ற பல காட்சிகள்—நன்கு படமாக்கப்பட்டுள்ளன.

மனோஹராவில் ஆபாசக் காட்சிகள் எதுவும் கிடையாது. நவரஸங்களும் பொருந்தியுள்ள கதை. சிவாஜி கணேசன் சிறந்த நடிப்பு, நேர்த்தியான தந்திரக் காட்சிகள், பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகள் இவைகளுக்காகப் பார்க்கக் கூடிய ஜனரஞ்சகமான ஒரு படம் "மனோஹரா."

—"ஜாம்பவான்"


கூந்தல் வளர...

ஜெமினி

ஹேர் ஆயில்

★

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டது.

★

கூந்தல் வளர்ச்சிக்கு மிகச் சிறந்தது.

★

எங்கும் கிடைக்கும்:

சித்தமணி

கெமிகல் ஒர்க்ஸ்

சென்னை—17.

# அரசாங்கமும், சினிமாவும்

சு. ரா.

சுதந்திர இந்தியாவில் நாம் வசித்து வருகிறோம். நாட்டில் நமது சர்க்கார் நடக்கிறது. ஜனநாயக அரசாங்கம் மக்களுக்குப் பலவித நன்மைகளைச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறது. அதற்கான பல முன்னேற்றத் திட்டங்களையும் வகுத்திருக்கிறார்கள். திட்டங்களை நிறைவேற்ற—ஏன், அரசாங்கம் நடக்கவே—பணம் தேவை. சர்க்காருக்குப் பணம் கிடைக்க வரி ஒரு முக்கிய கருவி. நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வரிகளை நம்மிடமிருந்து வசூலித்துத்தான் அரசாங்கம் நமக்கு நன்மை பயக்கும் திட்டங்களை நிறைவேற்றுகிறது. எனவே, நாம் அளிக்கும் வரிப் பணம் நமது நன்மைக்குத் தான்—அல்லது நமது சந்ததிகளின் நன்மைக்குத் தான்—பயன்படுகிறது. யாரோ மூன்றாவது மனிதன் வரிப் பணத்தைச் சாப்பிட்டு விடுவதாக நாம் நினைக்கக் கூடாது. இதை சுதந்திர இந்தியப் பிரஜைகள் உணரவேண்டியது அவசியம். உணர்ந்து வரிகளை சந்தோஷத்துடன் அளிக்க வேண்டும்.

எனினும் நமது பட முதலாளிகளில் சிலர் வரிகளுக்கு எதிராகப் பிரசாரமே செய்கிறார்கள். "நாங்கள் ஆயிரக் கணக்கில் லக்ஷக் கணக்கில் முதல் போட்டு, சிரமப்பட்டு படம் பிடிக்கிறோம். முடிவில் நாங்கள் அடையும் லாபம் மிகவும் சொற்பமே. ஆனால் சர்க்காரோ ஒன்றுமே செய்யாமல் பெரும் பகுதியைத் தமாஷா வரி முதலியவற்றின் மூலம் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள்" என்று ஓலமிடுகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்க, கண்டிக்கத் தக்க, விஷமமான பிரசாரமாகும். தவறான பிரசாரமும் கூட.

முதலாவதாக, பட முதலாளிகள் தாங்கள் கையை விட்டுத் தமாஷா வரியைச் செலுத்துவதில்லை. முன்பு டிக்கட் எட்டணாவாக இருந்தால், இப்பொழுது "கட்டணம் 0-8-0 — வரி 0-2-6 ஆக 0-10-6" என்று வரியையும் சேர்த்து நம்மிடமிருந்து வசூலிக்கிறார்கள். பொது மக்கள்தான் வரியைச் செலுத்துகிறார்கள். மக்கள் சினிமாப் பார்த்தால்தான் சர்க்காருக்கும் வரி கிடைக்கும். 'படம் தோல்வியோ, வெற்றியோ எதை அடைந்தாலும், சர்க்காருக்கு வரி நிறையக் கிடைத்துவிடுகிறது' என்பது தவறு. வசூல் அதிகமானால் பட முதலாளிக்கும் லாபம் உண்டு; சர்க்காருக்கும் வரிப் பணம் நிறையச் சேரும். படம் தோல்வி அடைந்தால், பட முதலாளி நஷ்டமடைவதோடு, சர்க்காருக்கும் வருமானம் குறையத்தான் செய்கிறது. எனவே, சர்க்காரின் வருமானம் அதிகரிக்கும் என்பதற்காக வேனும் நல்ல படங்கள் வெளி வருவது அவசியம்.

"வரியையும் சேர்த்து கட்டணம் அதிகரிப்பதால், பார்ப்பவர்கள் தொகை குறைகிறது. ஒரே படத்தைப் பலர் பல முறை பார்க்கவும் இயலாமல் போகிறது. எங்களுக்கும் லாபம் கிடைப்பதில்லை" என்றும் வாதம் செய்யப்படுகிறது. இதுவும் தவறுதான். நல்ல படம் வந்தால் இரட்டிப்புக் கட்டணம் செலுத்தியாவது மக்கள் பார்க்கிறார்கள் என்பதற்கு "ஸாம்ஸன் அண்ட் டிலைலா" உதாரணம் இருக்கிறது. தற்சமயம் "ஔவையார்" படம் நல்ல வசூலை அளித்து வருகிறது. ஆகவே, வசூல் குறைவு என்றால் படத்தின் தரம் குறைவு என்றுதான் கொள்ள வேண்டும். வரி காரணமாகாது.

'தமாஷா வரி முதலியவற்றின் மூலம் கிடைக்கும் பணத்திலிருந்து பட முதலாளிக்கு உதவி செய்யவேண்டும்; குறிப்பிட்ட சத விகிதத்தை இதற்கென்று ஒதுக்கவேண்டும்' என்றும் சொல்கிறார்கள். இதுவும் பிசகான வாதம். பணக்காரர்களிடமிருந்து வருமான வரி, அமித லாப வரி முதலியவை வசூலாவதால், பணக்காரர்களின் நன்மைக்கே அந்தப் பணத்தைச் செலவிடவேண்டும் என்று சொல்ல முடியுமா! "ரெயில்வேக்கள் மூலம் நிறைய வருமானம் வருகிறது; ஆகவே, ரெயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு நிறைய சம்பளம் தரவேண்டும்" என்று சொல்ல முடியுமா! அரசாங்கம்

பல துறைகளிலிருந்து வரி வசூல்செய்து பொதுவாக மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுவதுதான் நியாயமே தவிர, ''என்னிடமிருந்து வசூலித்த வரியை எனக்காகச் செலவிடு'' என்று கூறுவது நகைப்புக் கிடமாகும்.

பட முதலாளிகள் அரசாங்கத்தை வேறொரு விஷயத்துக்காகவும் தாக்குகிறார்கள். ''எங்கள் சுதந்திரத்தில் தலையிடுகிறார்கள். சென்ஸார் போர்டு பல காட்சிகளைப் படங்களிலிருந்து எடுத்துவிடுகிறது. படத்தையே கூடத் தடை செய்து விடுகிறது. ஹோ......ஹோ'' என்று அலறுகிறார்கள்.

அரசாங்கம் எதற்காக இருக்கிறது! மக்களுக்கு நன்மை செய்யத்தான். மக்களின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் எதையும் தடை செய்ய அதற்கு உரிமை உண்டு. அதைச் செய்யாவிட்டால் தன் கடமையிலிருந்து அது தவறிவிட்டது என்று கூறலாம். ஆகவே, தணிக்கை விஷயத்தில் பட முதலாளிகள் கூக்குரலிடுவதை விட்டு விட்டு, தணிக்கை அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும். ''ஔவையார்'' போன்ற படங்களையே தயாரிக்க வேண்டும். சுதந்திர இந்தியா முன்னேறத் தக்க விதத்தில் படங்கள் வெளியிடவேண்டும்.

தற்போது படங்களை மட்டும் சென்ஸார் செய்கிறார்கள். ஆனால், விளம்பரங்களிலும், 'ஸ்டில்' போட்டோக்களிலும் உள்ள ஆபாசங்களைக் களைந்தெறிய சர்க்கார் முன்வரவேண்டும். திரையில் ஒரு முத்தக் காட்சி க்ஷணநேரம் காட்டப்பட்டு மறைந்து விடலாம். அதுகூட அவ்வளவாக மக்களைப் பாதிக்காது. ஆனால், நடுச் சந்தியில், முத்தக் காட்சியைப் பெரிது படுத்திப் படுதா விளம்பரம் வைப்பதில் எவ்வளவு கெடுதல் இருக்கிறது என்பதை சர்க்கார் கவனித்து, அவற்றை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும். கொட்டகைகளிலும்.



பரணி பிக்சர்ஸாரின் மின்னல் தயாரிப்பான ''சக்ரபாணி'' தெலுங்குப் பட ஷூட்டிங்கின் போது நடந்த விருந்துக் காட்சி இது. பானுமதி, நாகேஸ்வரராவ், ஸி. எஸ். ஆர்., சூர்யகாந்தம், பானுமதியின் கணவர் டைரெக்டர் ராமகிருஷ்ணு (நிற்பவர்), அமர்நாத் ஆகியோரை மேலே படத்தில் நாம் காணலாம்.



**பத்மினி பிக்சர்ஸார் தயாரித்து வரும் "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" தமிழ்ப் படத்தில் சிவாஜீ கணேசனும், பத்மினியும் தோன்றும் ஒரு காட்சி இது.**

---

சுவர்களிலும் ஆபாச 'ஸ்டில்'களையோ, விளம்பரங்களையோ வைக்க அனுமதிக்கக் கூடாது, தற்போதுள்ள தணிக்கை முறைகளைப் "பாதிக் கிணறு தாண்டுவதற்குத்தான்" ஒப்பிடலாம். விளம்பரங்களையும், 'ஸ்டில்'களையும்கூட தணிக்கை செய்வது அத்தியாவசியம.

அரசாங்கம் இன்னொன்றும் செய்ய வேண்டும்: "ஔவையார்" போன்ற அற்புதமான நல்லுரை தாங்கிய படங்களுக்கு தமாஷா வரி விலக்கு அளிப்பதுடன், அம் மாதிரிப் படங்களைப் பரிசுகள் கொடுத்து கௌரவிக்க வேண்டும். கிராமாந்தரப் பகுதிகளில் அவற்றை இலவசமாகக் காட்டவும் ஏற்பாடு செய்யவேண்டும். 'கல்வி இலாகா' செய்யவேண்டிய முக்கிய பணிகளில் இதுவும் ஒன்ருகும்.

சினிமாத் தொழிலைச் சேர்ந்தவர்கள் கூட்டம் ஒன்றில் ராஜாஜி அவர்கள் 'மஞ்சள்' பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்பிட்டார் சினிமாச் சம்பந்தப் பட்டவர்களை ஆபாசமாகத் தாக்கி, அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி அவதூறுகளைப் பரப்பும் பத்திரிகைகளை அரசாங்கம் தடுக்க வேண்டும். சினிமாவில் ஈடுபட்டுள்ளோரும் கௌரவமான மனிதர்கள் தான் என்ற நிலை ஏற்படவேண்டும். இதற்குச் சினிமாத் தொழிலிலுள்ளோரும், அரசாங்கமும் ஒத்துழைக்கவேண்டியது அவசியம். அரசாங்கத்தைத் தாக்கிப் பட முதலாளிகளோ, சினிமாத் தொழிலைக் கண்டித்து அரசியல் தலைவர்களோ பேசுவதோ, எழுதுவதோ நிற்கவேண்டியது அவசியம். பொதுவாக சுதந்திர இந்தியப் பிரஜைகளின் தரத்தை உயர்த்த அரசாங்கமும், சினிமாத் தொழில் அதிபர்களும் ஒன்றுபட்டுப் பாடுபடுவார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

# பெற்ற மனம்

குமாரி வி. பாகீரதி

"போனாற் போகல் திரும்பி வந்தான் புது மாப்பிள்ளை—என்பது போல உன்னை அனுப்புகிறேனே, அம்மா. உம். அதுக்கென்ன செய்வது! நீ பிழைத்து எழுந்தாயே, அதுவே போதும். இப்பொழுது இல்லாவிட்டால் அடுத்த வருஷமே ஒன்று பெத்து எடுத்துக்கொண்டு போகிறே, அதுக்காகத்தான் நானும் கடவுளை வேண்டிக் கொள்ளுகிறேன். போனதற்காக வருத்தப்படாதே. உன் உடம்பையும் கெடுத்துக் கொள்ளாதே. மாப்பிள்ளையையும் கவலைப்படாதிருக்கச் சொல்லு!" என்று அப்பா படித்துப் படித்துச் சொன்ன வார்த்தைகள் என் காதுகளில் மறுபடியும் மறுபடியும் ஒலித்துக்கொண்டேயிருந்தன.

"நீ பிழைத்தெழுந்தாயே அதுவே போதும்!" ஆம், அப்பா நினைத்ததும், ஏன் அன்று அவர் கடவுளிடம் வேண்டினதும் அதுதான். அவர் பெற்ற மனம் என்னை இழக்கத் தயாராக இல்லை. ஆனால் என் மனமோ...'நான் போனாலும் சரி, நான் பெற்றெடுத்த என் கண்மணி பிழைத்தால் போதும்' என்றுதான் நினைத்தது. ஆனால், பெற்றெடுத்த தாயின் மனம் இப்படிக் கிடந்து தவிக்கும்பொழுது என் கணவர் மனம்...அது என்ன நினைத்ததோ. யாருக்குத் தெரியும்! ஏறக்குறைய மூன்னூறு மைல்களுக்கு அப்பால் இருக்கும் அவர் அன்று என்ன வேண்டியிருப்பார்! வாழ்க்கைத் துணைவியான நான் பிழைப்பதையா! அல்லது பத்து வருடங்களுக்குப் பிறகு குலத்தைத் தழைத்து ஓங்கச் செய்யப் பிறந்த பிள்ளை பிழைப்பதையா!

நீண்ட பிரயாணத்தின் களைப்பைக் காட்ட பெருமூச்சு ஒன்று விட்டபடியே ரயில் விழுப்புரம் ஜங்ஷனில் வந்து நின்றது. இவ்வளவு நேரமும் பெட்டியில் காற்றுகூட புகமுடியாமல் அடைத்துக் கொண்டிருந்த யாத்ரீகக் கும்பலொன்று இறங்கி பல் தேய்த்து காலை ஆகாரம் செய்யச் சென்றது.

இரவெல்லாம் காலை மடக்கியபடியே உட்கார்ந்திருந்த நான் சற்று நிம்மதியாகக் காலை நீட்டி உட்கார்ந்தேன். ஆயிற்று இன்னும் பாதி நாள் பிரயாணம்தான். பிறகு! என் கணவர் ஸ்டேஷனுக்கு வந்திருப்பார். அந்தச் சந்திப்பை எண்ணிப் பார்க்கவே எனக்குப் பபமாக இருந்தது. ஆனால், மூன்று மாதங்களுக்கு முன்பு நான் ஊருக்குப் போகும்பொழுது அந்தச் சந்திப்பைத் தான் எத்தனைவிதமான இன்பக் கனவுகளுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்! ரயிலை விட்டு இறங்கியவுடன் என் கண்மணியை முதன் முதலாக அவர் கைகளில் கொடுப்பேன். அப்பொழுதுதான் அவர் முகத்தில் எத்தனை சந்தோஷம் பொங்கும்! பத்து வருஷங்களுக்குப் பின் தந்தையாகும் பாக்கியத்தைப் பெற்ற சந்தோஷம் அனைத்தும் முகத்தில் பளிச்சிடாதா! சாமான்களை இறக்க வேண்டுமென்பதையும், அது ஸ்டேஷன் என்பதையும்கூட மறந்து குழந்தையைக் கொஞ்ச ஆரம்பித்து விடுவார். "அப்படிக் கொஞ்சாதீர்கள். குழந்தை பயந்துவிடப் போகிறது" என்று பெருமையாகச் சொல்லி நான் குழந்தையை அவர் கைகளிலிருந்து வாங்கிக் கொள்ளுவேன். இப்படியெல்லாம் நான் கற்பனைக் கண்ணால் அந்தச் சந்திப்பைக் கண்டேன். ஆனால் இதையெல்லாம் தகர்த்தெறியும்படியாக அந்தப் பாழும் தெய்வம்தான் சதி செய்து விட்டதே.

கல்யாணமாகி எல்லோரையும்போல ஓரிரண்டு வருஷங்களுக்குள் நான் தாயாராகவில்லை. ஐந்து வருடங்கள் வரை பொறுத்துப் பார்த்த உலகம் எனக்கு மெள்ள மெள்ள மலடி என்ற பட்டம் கட்டத் தயாரானது. நானும் என் கணவரும்கூட நம்பிக்கையிழந்துவிட்டோம். ஆனாலும், என் மாமனார் மாமியார் அப்பா, அம்மா பலருடைய வேண்டுகோளின்படியும் நான் கோவில் குளங்களைச் சுற்ற ஆரம்பித்தேன். இப்படியாக மற்றொரு ஐந்து வருஷங்களும் கழிந்தன. அப்பொழுதுதான் எங்களுடைய சோர்ந்து போன வாழ்க்கையைக்

கிளர்த்தெழும்படியாக நான் தாயாகும் பாக்யத்தை யடைந்தேன். கோவில் களையும் குளங்களையும் சுற்றியது வீண் போகவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன் எங்களை யெல்லாம் ஒருங்கே சந்தோஷத்தில் ஆழ்த்திய ரவி பிறந்தான். ஊருக்கே அபூர்வமான செல்லப்பிள்ளை யான ரவியைப் பற்றி என் கணவருக்குப் பக்கம் பக்கமாகக் கடிதம் எழுதி ஆனந்திப்பேன். அவருக்கும் குழந்தையைப் பாக்க வேண்டுமென்று ஒரே ஆவல். ஆனால் உயிர்களைக் காக்கும் புனிதமான வைத்தியத் தொழிலை மேற்கொண்டுள்ள அவருக்கு ஓய்ச்சலும் ஒழிவும் ஏது!

'இன்னும் ஒரு மாதம் பொறுங்கள். குழந்தையுடன் ஓடோடியும் வந்து விடுகிறேன்' என்று எழுதிய கடிதத்தை அன்றுதான் தபாலில் சேர்த்தேன். ரவிக்கு லேசாக ஜுரம் கண்டது. வெறும் ஜுரமாக இருந்த அது டைபாயிட் ஜுரமாக மாறியது. எனக்கும் அந்த ஜுரம் பற்றிக் கொண்டது. இரவும் பகலும் யமனுடன் போராடிய எங்கள் இருவரில் என்னை விட்டு விட்டு பச்சைக் குழந்தையான ரவியை என்னிடமிருந்து பறித்துக் கொண்டது அவனைக் கொடுத்த தெய்வம். 'தவமிருந்து பிறந்த குழந்தையை அவரிடம் கூடக் காட்டாமல் பறிகொடுத்து விட்டுத் திரும்பும் எனக்கு எத்தகைய வரவேற்பைக் கொடுப்பாரோ!' என்று எண்ணி ஏங்கியது என் மனம்.

''கல்யாணி, கல்யாணி, இறங்கு''

என்ற என் கணவருடைய குரல் கேட்கவே திடுக்கிட்டு எழுந்தேன் நான். யோசனையில் ஆழ்ந்து போயிருந்த நான் ரயில் புறப்பட்டதையோ ஊர் வந்து விட்டதையோ அறியவில்லை. என் கணவர் பரக்கப் பரக்க பெட்டியையும் படுக்கையையும் இறக்கிக் கொண்டிருந்தார். நானும் இறங்கினேன். யந்திரம் போல் ஒரு ஜட்காவைப் பேசி அதற்குள் சாமான்களை ஏற்றிக் கொண்டிருந்தார் அவர். என்னை ஏனென்றுகூடக் கேட்கவே யில்லை. துக்கம் ஒரு புறமும், பயம் மற்றொரு புறமும் பற்றியிழுக்க நான் பேசாமல் வண்டியில் ஏறினேன். வண்டிச் சக்கரங்கள் கடகடவென உருண்டன. அவரே பேசுவாரென்று எதிர் பார்த்த நான் ஏமாந்தேன். அவர் என் பக்கம்கூடத் திரும்பவிரும்பாதவர்போல் ஜட்காவிற்கு வெளியே பார்த்தபடியே இருந்தார். என்னிடம் ஏன் இந்தப் பாரா முகம்! குழந்தையைக் கொன்றவள் நான்தான் என்று எண்ணுவதுபோலிருந்தது அவருடைய ஒவ்வொரு செய்கையும். நான் பெற்ற தாயல்லவா! குழந்தை இறந்த துக்கம் எனக்கு மட்டுமில்லையா!

குழந்தையையும் கணவரின் அன்பையும் ஒருங்கே பறிகொடுத்து விட்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தேன் நான். என் மனதை எவ்வளவோ அடக்கிக் கொண்டு அவருக்கு ஆறுதல் கூற அடித்துக் கொண்டது என் மனம். ஆனால் என் முன்னால்கூட நிற்கப் பயப்படுபவர்போல் இருந்த அவர், காலை ஆறு மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்து உடனே ஆஸ்பத்திரிக்குக் கிளம்பி விடுவார். இரவு பத்து மணிக்கு மேல் தான் வருவார். குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டு விட்டுப் படுத்து விடுவார்.

ஒரு வாரம் இப்படியே கழிந்தது. வீட்டில் மரண அமைதி! இதைப் பொறுக்கவே என்னால் முடியவில்லை. என் கண்மணி ரவியை இழந்த குற்றம் என்னைத் தானா சேர்ந்தது! பாழும் தெய்வம் என்னையும் ஏன் ரவியுடன் கொண்டு போயிருக்கக் கூடாது! இதற்கும் ஒரு வழி எனக்குத் தோன்றி விட்டது. சோர்ந்து போயுள்ள அவர் உள்ளத்தை எப்படியாவது உற்சாக மூட்ட நினைத்தேன். அன்று முதல் உற்சாகமாக வளைய வரலானேன். மணமான புது மணப் பெண்போல் உற்சாகமாகத் திரிய ஆரம்பித்தேன் அவர் எதிரில். ஆனால், இதனாலெல்லாம் அவர் மனம் மாறியதா? துக்கம் குறைந்ததா!

பகல் பத்து மணி இருக்கும். அவர் சாப்பிட வந்தார். எப்பொழுதும் போல் மௌனமாகவே சாப்பிட்டுவிட்டு தன் அறைக்குப் போய் விட்டார். அப்பொழுது தான் எங்களிடமிருந்த பழைய வேலைக்காரி அன்னம்மாள் வந்தாள். அவளுக்கு எப்பொழுதுமே அலாதி விசுவாசம் உண்டு. பத்து வயது முதல் என்னிடம் வேலைக்கு இருந்து வந்தாள். போன வருஷம்தான் அவள் கல்யாணம் செய்து கொண்டு கிராமத்துக்குப் போய் விட்டாள். அன்று போனவள் இன்றுதான் வீடு தேடிக் கொண்டு வந்திருக்கிறாள். தனியே வரவில்லை. கையில் தன் சிறு குழந்தையுடன் வந்திருக்கிறாள்.

அதுவும் கூட ரவியைப் போலவே ஆண் குழந்தை.

என்னைப் பார்த்ததும் 'ஓ'வெனக் கதறி அழ ஆரம்பித்தாள். நான் முதலில் அவளுக்கு ஒரு விஷயமும் தெரியாது என்றுதான் நினைத்தேன். ஆனால், அவளோ யார் மூலமோ என் குழந்தை இறந்ததை துக்கம் விசாரிக்க வந்திருக்கிறாள். நானும் அழ நினைத்தேன். ஆனால் அவர் வீட்டிலிருப்பதை நினைத்து என் அழுகையை அடக்கிக் கொண்டேன். அன்னம்மாளின் குழந்தையுடன் கொஞ்ச ஆரம்பித்தேன். வெறி பிடித்தவள் போல என் அறைக்கு ஓடினேன். என் பெட்டியைத் திறந்து குழந்தை ரவியின் சட்டைகளையெல்லாம் வாரி எடுத்துக் கொண்டு வந்தேன். எல்லாச் சட்டைகளையும்விட அந்த ரோஸ் கலர் ஸில்க் சட்டையைப் பார்த்ததுமே என்னையும் அறியாமல் இவ்வளவு நேரமும் சேர்த்து வைத்திருந்த துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. செக்கச் சிவந்த ரவியின் உடம்பில்தான் பதியப் பதிய அந்தச் சட்டை எவ்வளவு அழகாக இருந்தது! அந்தச் சட்டையை அன்னம்மாளின் குழந்தைக்குப் போட்டேன். குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு கொஞ்ச ஆரம்பித்தேன். மாடிப் படிகளில் நின்று கொண்டு என் கணவர் என்னையே கவனித்துக் கொண்டிருந்ததை நான் கவனிக்கவே இல்லை. குழந்தையைக் கொஞ்சிக் கொண்டேயிருந்த எனக்கு மறுபடியும் என் துர்ப்பாக்கிய நிலை நினைவிற்கு வந்து விட்டது. என் மனதைத் திறந்து காட்ட அன்னம்மாள்தான் சரியான ஆசாமி என்று தோன்றியது. வார்த்தைகளும் உணர்ச்சியுடன் சேர்ந்து வெளிவர ஆரம்பித்தன.

"அன்னம்மா, ரவியுடன் இந்தப் பாவியும் இறந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! என் மனதிற்குள் இருக்கும் துக்கத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு என் கணவருடைய துக்கத்தைப் போக்கி அவர் மனதை மாற்ற முயற்சித்தேன். ஆனாலும், அவர் துயரம் போக்க முடியாததாயிருக்கிறது. ஒருகால் நான் இறந்து, குழந்தை இருந்திருந்தாலாவது..." என்று மேலே கூற முடியாமல் நான் விக்கியபடியே நின்றேன்.

"அம்மா, அப்படி சொல்லாதே அம்மா. பெரிய ஜீவனான நீ பிழைத்ததல்லவா புண்ணியம்! கடவுள் தயவிருந்தால் அடுத்த வருஷம் இந்தப் பயலைப்போல உனக்கும் ஒரு ராசா பிறக்கிறான். சுவரிருந்தால் தானேம்மா சித்திரம்!" என்று கூறியவள் மாடியிலிருந்து இறங்கி வந்த என் கணவரைக் கண்டு மரியாதையாக எழுந்து நின்றாள்.

"கல்யாணி! தாயன்பை நான் இவ்வளவு காலமாய் புரிந்து கொள்ளவில்லை. நீ என் துயரத்தைப் போக்குவதற்காக உன் கரை கடந்த துயரத்தைக்கூட அடக்கியிருக்கிறாய் என்பதை இப்பொழுதே உணருகிறேன். நான் உன் உல்லாஸ நடத்தையைத் தவறாக நினைத்து விட்டேன். என்னை மன்னிப்பாயா?" என்று சொன்னபடியே என் கையிலிருந்த அன்னம்மாளின் குழந்தையை வாங்கிக் கொண்டார். "சாமி, அடுத்த வருஷம் இந்தப் பயலைப் போலே அம்மாளுக்கு ஒரு ராசா பிறப்பான் சாமி!" என்று 'ஜோஸியம்' சொன்னாள் அன்னம்மாள்.

அவள் ஜோஸியத்தை ஆமோதிப்பவன் போல் பொக்கை வாயைத் திறந்து 'உம்' கொட்டினான் அன்னம்மாளின் மகன்.




# பலஹீனர்களுக்கு சாஸ்திரீய தயாரிப்பு



அமெரிக்காவிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் கண்டுபிடிக்கப்படும் நூதனங்களெல்லாம் புராதன இந்திய சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டவைகளே. "ஈமாடோன் டானிக்" மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு சக்தி வாய்ந்த ஔடதம். உத்திரவாதமுள்ள இந்த டானிக், உடம்பு பூராவுக்கும் ஒரு புது சோபையையும், புதிய ரத்தத்தையும் அளிக்கிறது. உங்கள் எடையை 5 முதல் 10 பவுண்டுகள் வரை அதிகரிக்கச் செய்யும். நிரந்தரமான பலத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கும். இது மூளைக்கும் சிறந்த டானிக். 24 மணி நேரத்திற்குள்ளாகவே உங்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டுபண்ணும். உங்கள் கன்னத்தை ரோஜா நிறமாக்கி, உங்கள் தோற்றத்தை 10 முதல் 15 வயதுவரைக் குறைத்துக் காட்டும். உபயோகிப்பவர் இது ஏற்படுத்தும் அற்புத மாறுதலைக் கண்டு ஆச்சரியம் அடைவர். விலை : பெரிய பாட்டில் (பூரா முறை) ரூ. 5-0-0. அரை பாட்டில் ரூ. 3-0-0. தபாற் செலவு ரூ. 1-2-0.

**ஈமாடோன் எண்ணெய்:** இது வெளிப் பூச்சிற்கானது; மாய சக்தி உடையது. சிறுபிராயத் தவறுகளினால் ஆண்களுக்கு ஏற்படும் எல்லாக் குறைபாடுகளையும் சில தினங்களில் நீக்கும்; முதல் நாளன்றே உங்களை ஆச்சரியப்படச் செய்யும். விலை: பெரிய பாட்டில் (பூரா முறை) ரூ. 5. அரை பாட்டில் ரூ. 3-0-0. தபாற் செலவு ரூ. 1-2-0.

டானிக், எண்ணெய்—இரண்டிற்கும் சேர்ந்தாற்போல் (பெரிய பாட்டில்கள்) ஆர்டர் செய்பவர்களுக்கு தபால் சார்ஜ் இனாம்.

## தாமதப்பட்ட மாதவிடாய்

**மென்ஸோலின்:** அபூர்வான மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட இம் மருந்து ஆச்சரியம் மிக்க தயாரிப்பு. எக் காரணத்தினாலும் நின்றுபோன அல்லது தாமதப்பட்ட மாதவிடாயை 24 மணி நேரத்திற்குள் ஒழுங்கு படுத்தும். விலை ரூ. 5-0-0. தபாற் செலவு ரூ. 1-2-0.

**மென்ஸோலின் ஸ்பெஷல்:** இது சுலபமாகவும், ஜாலவித்தை மாதிரியும் சிரமமின்றியும் மாதவிடாயை சரிப்படுத்தும். விலை ரூ. 10-0-0. தபாற்செலவு ரூ. 1-2-0.




**எச்சரிக்கை:** கர்ப்ப முற்றவர்கள் மேற்சொன்ன இரு மருந்துகளையும் உபயோகிக்கக் கூடாது.

**ஹேர் கிரீம்:** உலகம் பூராவும் உங்களை விரும்பச் செய்யவேண்டுமா? ஹேர் கிரீம் தான் அதற்கு சிறந்த வழி. வைத்திய சாஸ்திரம் இதுவரை கண்டுபிடித்துள்ள எல்லா மருந்துகளையும் விட அற்புதமானது. இம் மருந்து கருப்பு நிறமான முகத்தை வெண்மையாகவும். மிருதுவாகவும் செய்யும். அதிசயமான சக்தி வாய்ந்தது. விரும்பத்தக்க நறுமணம் உடையது. விலை : பெரிய பாட்டில் ரூ. 5. சிறிய பாட்டில் ரூ. 3-0-0. தபாற் செலவு ரூ. 1-2-0.

—கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதவும்—

**ANGLO AMERICAN MEDICAL STORES,**

(G. M.) Pull Bangash, DELHI—6.

# "கற்கோட்டை" சாதாரணப் படம்

## ரஸிகர்களுக்குப் பெருத்த ஏமாற்றம்

பிரஞ்சு நாவலாசிரியர்களில் சிறந்தவர் அலெக்ஸாண்டர் டூமாஸ்; அவரது சிருஷ்டிகளில் மகத்தானது 'கவுண்ட் ஆப் மாண்டிகிரிஸ்டோ' என்பது. அந்த நாவல் திரைப் படமாக வருகிறது என்று அறிந்தபோது அதை ஆவலுடன் எதிர்பார்த்தார்கள் ரஸிகர்கள். ஆனால், படத்தைப் பார்த்த பின் தான் எத்தகைய ஏமாற்றம் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஒரு சிறந்த கதையைக் 'குட்டிச் சுவரா'க்கி விட்டிருக்கிறார்கள்.

டூமாஸின் கதையை, ஒன்றிரண்டு இடங்கள் தவிர அப்பட்டமாக அப்படியே பின்பற்றி யிருக்கிறார்கள். அதை விட்டு நமது பண்பாட்டிற்கு ஏற்ற முறையில் கதையை மாற்றி அமைத்திருக்கலாம். மூலக் கதையில் இல்லாத முடிவை மட்டும் புகுத்தி யிருக்கிறார்கள். அந்த முடிவு பொருத்தமாக இல்லாததுடன் அபத்தமாகவும் இருக்கிறது. வசனங்களைக் குறித்து எதுவும் எழுதாமல் விடுவதே மேல்.

நடிப்பு என்று எடுத்துக் கொள்ளும் போது பாங்கராக வரும் கே. சாரங்கபாணிதான் படத்தின் ஜீவநாடியாக இருக்கிறார். கஞ்சனாக அவர் இயற்கையாக நடித்திருக்கிறார். நீதிபதியாக வரும் பி. ஆர். பந்துலுவின் நடிப்பு பாதகமில்லை. இறுதியில் புத்திமாறாட்டம் ஏற்பட்டவராக நடிக்கும் கட்டத்தில் மிக நன்றாக இருக்கிறது இவரது நடிப்பு. கதாநாயகன் பிரதாபனாக நடிக்கும் கெம்பராஜின் நடிப்போ, தோற்றமோ எதுவும் கவர்ச்சிகரமாக இல்லை. சிறையில் அடைக்கப்படும் கட்டங்களில் பச்சக் குழந்தைபோல் அவர் அழுவது நகைப்பிற்கே இடமளிக்கிறது. ஆனந்தனாக வரும் நடிகர் ஒரு திருஷ்டி பரிகாரம்.

சுந்தரியாக வரும் கிருஷ்ண குமாரியின் நடிப்பு தோற்றம் எதுவும் இப்படத்தில் பரிமளிக்க வில்லை. விலாஸினியாக வரும் நடிகை வருகிறார். போகிறார்—நடிப்பா, முகபாவ மாறுதலா—எதுவுமே இல்லை. மங்களாவாக வரும் ஸந்தியாவுக்கு நல்ல முகவெட்டு இருக்கிறது. முதல் படமானாலும் நடிப்பு பாதகமில்லை.

பாட்டுகள் எதுவும் இனிமையாகவோ கருத்துச் செறிந்தவையாகவோ இல்லை. ஆனால், அளவுக்கு மீறி நீண்டு சலிப்புத் தட்டுகின்றன. 'கப்பல் ஓட்டும் தமிழா' என்ற பாட்டு எதிர்பார்த்த பலன் அளிக்க வில்லை! சில கட்டங்களில் பின்னணியில் இசை அமைத்திருப்பது நன்றாக இருக்கிறது. அந்தக் காட்சிகளுக்கு விறுவிறுப்புக் கொடுப்பதாக இருக்கிறது.

ரீடா, சுலோசனா இருவரின் நடனம் கவர்ச்சிகரமாக இருக்கிறது. ஒலி ஒளிப் பதிவுகள் பாதகமில்லை. பாதள சிறைக் கூடம், குகை முதலிய இடங்களில் அளவுக்குத் தகுந்த வெளிச்சம் ஏற்பாடு செய்து படம் பிடித்திருப்பது நன்றாக இருக்கிறது. படத்திலேயே மிகவும் பிரமாதமான ஒரு இடம் கற்கோட்டையின் வெளிப்புறம். கோட்டையும், அதை அலைகள் மோதுவதுமான காட்சி தான்.

டைரெக்டர் திறமை என்று குறிப்பிட படத்தில் ஒரு இடம்கூடக் கிடையாது. காதல் காட்சி, பழி வாங்கும் படலம் இவைகள் அளவுக்கு மீறி, விறுவிறுப்பின்றி, 'போர'டிக்கின்றன. கதையில் குழப்பம் நிறைய இருக்கிறது. விலாஸினிக்குப் பிறந்த குழந்தையின் கதி என்ன? விலாஸினியின் அண்ணன் யார்? அவன் என்ன ஆனான்? இதெல்லாம் கற்கோட்டையில் மறைந்த மர்மங்களாகி விட்டன. மொத்தத்தில், நடுவில் துப்பாக்கி வெடி கிளம்பும் இரண்டு இடங்களும் தூங்கி விழுகிறவர்களை எழுப்ப வென்று சொல்லும் அளவுக்குப் படம் ''போர''டிக்கிறது. 'நல்ல கதையைக் குட்டிச்சுவராக்கி விட்டார்களே' என்று பச்சாத்தாபப்பட வேண்டிய ஒரு படமாகும் ''கற்கோட்டை'' தமிழ்ப் படம்.

—''ஜாம்பவான்.''

# காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

[30-ம் பக்கத் தொடர்ச்சி]

வாக இருந்தது என்பதில் சந்தேகமே இல்லை.

ச:—வந்தனம்.

பா:—இப்பொழுது எந்தெந்தப் படங்களில் நடித்து வருகிறீர்கள்.

ச:—"சாசா சௌதுரி" "பாப்ரே பாப்" பிரபல டைரெக்டர் சாந்தாராமின் அடுத்த தயாரிப்பு ஆகியவைகளில் நடித்து வருகிறேன்.

பா:—படங்கள் பார்ப்பதில் உங்களுக்குப் பிரியம் இருக்க வேண்டுமே!

ச:—ஆம், நான் படங்கள் பார்ப்பது உண்டு.

பா:—எப்பொழுதிலிருந்து!

ச:—நான்தான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே! எனது சிறு பிராயத்திலிருந்தேதான்.

பா:—அப்படியானால் சொல்லுங்கள்; உங்கள் அபிமானமிக்க ஹிந்தி நக்ஷத்திரங்கள் யார்!

ச:—காமினி கௌஸல், திலீப் குமார்.

பா:—ஆங்கிலப் படங்களில்!

ச:—ஜெனிபர் ஜோன்ஸ், ரீடா ஹேவொர்த், டானிகர்டிங் ஆகியவர்கள் மிகவும் அழகாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களையே நான் பெரிதும் விரும்புகிறேன்.

பா:—சசி ஜீ! படப் பிடிப்பு வேலையில்லாத சமயங்களில் நீங்கள் எப்படிப் பொழுது போக்குகிறீர்கள்!

ச:—படம் பார்க்கப் போவேன்; குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவேன்; தையல் அல்லது பூ வேலை செய்வதில் பொழுதைக் கழிப்பேன்.

பா:—நீங்கள் ஏதாவது ஆட்டம் ஆடுவது உண்டா!

ச:—எனக்கு 'பாட்மிண்டன்' ஆடுவது ரொம்பப் பிடிக்கும். சமீபத்தில் நான் கிரிக்கெட் ஆட டெல்லிக்குக் கூடப் போயிருந்தேன்.

பா:—அடேடே, உங்களுக்குக் கிரிக்கெட் கூட ஆடத் தெரியுமா!

ச:—எனக்கு ஆடத் தெரியாது. ஆடும்படி பலவந்தப்படுத்தப்பட்டேன்.

பா(சிரித்துவிட்டு):—நீங்கள் சமையல் கூட நன்ருகச் செய்வீர்களோ!

ச:—இல்லை. சமையலில் எனக்கு அவ்வளவாகத் திறமை போதாது. ஆனால், நான் செய்யும் சமையலை என் கணவர் ருசித்துச் சாப்பிடுகிறார்.

பா:—உங்கள் கணவரா!

ச:—ஆம், எனக்குக் கல்யாணமாகி விட்டது. ஒரு பெண்கூட இருக்கிறாள்.

பா:—உங்களுக்கு எப்பொழுது கல்யாணமாயிற்று!

ச:—1949-ம் வருஷம் நவம்பர் மாதம் 29-ம் தேதி என் விவாகம் நடைபெற்றது.

பா:—அவருடைய பெயர்!

ச:—என் கணவர் பெயர் ஓம் பிரகாஷ்


தங்கம், வெள்ளி ஆபரணங்களுக்கு

சிறந்த இடம்

**தி ஜெயின் ஜுவல்லெரி கம்பெனி**

1. நாகேஸ்வர ராவ் ரோடு

தியாகராய நகர் :: சென்னை.

ஸைகால்; அவர் பம்பாயில் சொந்தமாக வியாபாரம் செய்து வருகிறார்.

பா:—உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் விசேஷமாக எது ரொம்பவும் பிடிக்கும்.

ச:—கார் ஓட்டுவது. அது எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஒருநாள் சாப்பிட்டுவிட்டு காரில் புறப்பட்டோம். வீட்டிலுள்ளவர்கள் நாங்கள் அரை மணி நேரத்தில் திரும்பி விடுவோம் என எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், நாங்கள் திரும்ப எவ்வளவு நேரம் ஆயிற்று தெரியுமா?

பா:—எவ்வளவு நேரம்?

ச:—24 மணி நேரம்.

பா:—எங்கே போயிருந்தீர்கள்!

ச:—நாங்கள் புனாவுக்குப் போய்விட்டு மறு நாள் காலைதான் திரும்பினோம்.

பா:—நல்ல தமாஷ்! தயவு செய்து கூறுங்கள் உங்கள் கல்யாணம் காதல் கல்யாணமா?

ச:—ஆமாம். ஏன்!

பா:—அப்படித்தான் இருக்க வேண்டுமெனக் கேட்டேன். உங்கள் உண்மைப் பெயர் என்ன சொல்லுங்கள்.

ச:—என் உண்மைப் பெயர் சசிகலா. வீட்டில் எல்லோரும் என்னை சசி என்று அழைக்கிறார்கள். என் தாயார் மட்டும் மல்கின் என்று அழைக்கிறாள்.

பா:—ஓம்ஜீ உங்களை அழைக்கிறார்.

ச:—ஓ...ஓ...(சிரிக்கிறார்) நல்லது மன்னியுங்கள், நான் இப்பொழுது போகட்டுமா?

பா:—போவதற்கு முன், நீங்கள் பம்பாயில் எங்கே வசிக்கிறீர்கள் என்பதைச் சொல்லிவிட்டுப் போங்கள்.

ச:—ஏன்?

பா:—ஓம்ஜியை வந்து பாராட்டுவேன்.

ச:—சரி. இதோ, எழுதிக்கொள்ளுங்கள் - 286, ஸையன், பம்பாய்—22, நமஸ்தே!

பா:—நமஸ்தே!

[நீங்கள் மேலே வாசித்தது—பிரபல லிப்டன் டீ கம்பெனியாரது ஏற்பாட்டின் பேரில் "ரேடியோ ஸிலோன்" மூலம் ஒலிபரப்பப்பட்ட பேட்டியாகும்.]

---



"என்னடா, சுத்த மண்டுவாய் இருக்கிறாயே? நம்ம வீட்டுக் கலியாணத்திலே டான்ஸூ கச்சேரி வைக்கணும்னு மனோரமா பார்ட்டியை அழைச்சுண்டு வரச்சொன்னால், இந்த மனோரமா பாட்டியை அழைத்து வந்திருக்கிறாயே!"

---

### பத்திரிகைக் காட்சிகள்

சென்ற மாதம் 3-ம் தேதி, சென்னை ராஜகுமாரி தியேட்டரில் மனோகரா பிக்சர்ஸின் "மனோகரா" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக்காட்சி நடைபெற்றது. அதே தினம் முதல் இப்படம் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டுள்ளது.

கெம்பராஜ் புரொடக்ஷன்ஸின் "கற்கோட்டை"யின் பத்திரிகைக் காட்சி, சென்ற மாதம் 10-ம் தேதி, பரணி ஸ்டுடியோவில் நடந்தது. இந்தப் படம் சென்ற மாதம் 12-ம் தேதி முதல் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகிறது.

## இது செய்தி

சேலம், மாடர்ன் தியேட்டர்ஸார் "தேசிங்கு ராஜன்" என்ற படத்தைத் தயாரிக்கத் திட்டம் போட்டு அதற்கான பூர்வாங்க வேலைகளில் முனைந்திருக்கிறார்கள். சரித்திர சம்பந்தமான இப்படத்தின் திரைக் கதை-வசனத்தை மு. கருணாநிதி எழுதுவார்.

டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு, "மலைக் கள்வன்" என்ற படத்தைத் தமிழ்-தெலுங்கு இரு மொழிகளிலும் தயாரிக்கத் தொடங்கியிருக்கிறார். நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளையின் கதையைத் தழுவியதாக இருக்கும் திரைக்கதை. பானுமதி, ஸ்ரீராம், எம்.ஜி. ராமச்சந்திரன், என். டி. ராமராவ், டி. எஸ். துரைராஜ், டி. பாலசுப்ரமண்யம் ஆகியோர் இப்படங்களில் நடிப்பார்கள். படம் கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோவில் தயாரிக்கப்படும்.

ஜெமினி ஸ்டுடியோஸார் அடுத்தபடி மின்னல் தயாரிப்பாக ஒரு படத்தைத் தயாரித்து வெளியிடப் போகிறார்களாம். இப்படத்தை கொத்தமங்கலம் சுப்பு டைரெக்ட் செய்யக்கூடுமென்றும் படத்திற்கு "நீலவேணி" என்று பெயராக இருக்குமென்றும் தெரிகிறது.

கோவையில் புதிதாகத் தோன்றியுள்ள ஒரு படக் கம்பெனியார் "மதியும் மமதையும்" என்ற ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். படம் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாராகுமெனத் தெரிகிறது.

ஜூபிடரில் மானேஜராக இருந்து அனுபவம் பெற்ற டி. எஸ். வெங்கிட்டசாமி, அதனின்றும் விலகி, மெர்குரி பிலிம்ஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். இவர் "தமிழன்" எழுதிய "புனர் ஜன்மம்" என்ற நாவலைப் படமாக்கப் போகிறாராம். இப் படத்தின் வசனங்களையும் பாட்டுகளையும் முன்பு ஜெமினியிலிருந்த வி. சீதாராமன் எழுதுகிறார். இப் படத்தின் ஆரம்ப விழா நியூடோன் ஸ்டுடியோவில் சென்ற மாதம் 19ம் தேதி காலை நடைபெற்றது. மனோஹர் பிக்சர்ஸ் உரிமையாளர் எம். சோமசுந்தரம் இந்த விழாவைத் துவக்கி வைத்தார். ஸி. ஸ்ரீனிவாஸராவ் டைரெக்ட் செய்யப் போகும் இப்படம் நியூடோனில் தயாரிக்கப்படும். குசலகுமாரி, கே. லக்ஷ்மிகாந்தம், கே. எஸ். அங்கமுத்து, சே. ரத்னம், கே. ஏ. தங்கவேலு, ஸி. பி. கிட்டன், வி. பி. எஸ். மணி ஆகியோர் படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளனர். சங்கீத டைரெக்ஷன் எம். எஸ். விஸ்வநாதன் கையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

நடிகை அஞ்சலி தேவி, அடுத்தபடி தம் சொந்தப் படமாக அனார்கலியைத் தயாரிக்கப் போகிறாராம். இது தெலுங்கில் மட்டுமே தயாரிக்கப் படுமெனத் தெரிகிறது. இப்படத்தில் அஞ்சலிதேவி அனார்கலியாகவும், நாகேஸ்வரராவ் ஸலீமாகவும் நடிப்பார்களெனத் தெரிகிறது. படத்தை வேதாந்தம் ராகவய்யா டைரெக்ட் செய்யக்கூடுமென்று தெரிகிறது.

ரோஹிணி ஸ்டுடியோஸார் "கனகதாரா" என்ற தமிழ்ப் படம் ஒன்றைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இப் படத்தை எச். வி. பாபு டைரெக்ட் செய்வாராம்.

சென்னையில் புதிதாக ஆரம்பமாகியுள்ள லியன் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியார் தமிழில் ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். இப்படத்தை எஸ். கே. சாரி டைரெக்ட் செய்வாரென்று தெரிகிறது.


### பாரதி வகுப்பு

சென்ற மாதம் 6-ம் தேதி, பாரதியார் சங்கத்தின் ஆதரவில் பாரதியார் வகுப்பு ஆரம்பமாயிற்று. இந்த வகுப்பை பேராசிரியர் அ. ஸ்ரீனிவாஸராகவன் ஆரம்பித்து வைத்தார். பிரதி சனிக்கிழமைகளிலும் பாரதியின் கவிதைகளைப் பற்றி பல அறிஞர்கள் பேசுவார்களாம்.

### ஸபா நிகழ்ச்சிகள்

சென்ற மாதம் 14ம் தேதி, திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸபாவின் ஆதரவில் எஸ். வி. பார்த்தஸாரதியின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. அன்றையக் கச்சேரி வெகு சிறப்பாக அமைந்திருந்தது.

சென்ற மாதம் 14ம் தேதி இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டி ஆதரவில்



கெம்பராஜ் சென்ற மாதத்தில் வெளியிட்டிருக்கும் ''கற்கோட்டை'' தமிழ்ப் படத்தில் கிருஷ்ணகுமாரி ஒரு சோக கட்டத்தில் இப்படிக் காட்சியளிக்கிறார்.

---

தஞ்சை சகோதரிகளின் (விசா–பிரகதா–சந்திரா) நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. அவர்கள் அன்று பரத நாட்டிய ஓரியண்டல் அயிட்டங்களை ஆடினார்கள். அன்றையக் கச்சேரிக்கு குமாரி என். ராஜம் பதங்கள் பாடினார்.

மயிலை, ரஸிக ரஞ்சனி ஸபா ஆதரவில் சென்ற மாதம் 13, 14ம் தேதிகளில் ''இரு மனம்'' என்ற நாடகம் நடைபெற்றது. வி. என். சம்பந்தம் எழுதியது இந்த நாடகம். நாடகக் கருத்து போற்றத்தக்கதாக இல்லை. பி. கே. சரஸ்வதி–மனோஹர் ஜோடியும், எம். எஸ். எஸ். பாக்கியமும் நன்கு நடித்தார்கள். எம். எஸ். எஸ். பாக்கியத்திற்கு ஜோடியாக ஒரு நல்ல நடிகரைப் போட்டிருக்கலாம்.

மயிலாப்பூர் சங்கீத சம்ரக்ஷணை ஸபாவின் ஆதரவில் சென்ற மாதம் 7ம் தேதி ''பொன் வயலி''ல் நடனமாடிய குமாரி சுசிலாவின் நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. அன்று வசூலான தொகை, காலஞ் சென்ற டி. கே. எஸ். நாடக சாபாவின் ஹார்மோனிஸ்ட், விஸ்வநாதய்யரின் குடும்ப உதவி நிதிக்கு அளிக்கப்பட்டது. இதே சபாவின் ஆதரவில் சென்ற மாதம் 21தேதி, அரியக்குடியின் சிஷ்யையான கே. எஸ். தனம்மாளின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

## வாழ்த்துகிறோம்

சென்ற மாதம் 7ம் தேதி, அப்பர் பேனாக்களைத் தயாரிக்கும் வி. டி. கன்னியப்ப முதலியார், தமது மகள் செல்வி ரோஸ் அம்மாளை செல்வன் தாமோதர முதலியாருக்குத் திருமணம் செய்து கொடுத்தார், சென்னையில்.

அதே தினம், தேவாரம் நியூஸ் ஏஜண்ட், என். ஐயராம் என்ற சிரஞ்சீவி வெங்கிடராமன், சௌபாக்கியவதி ஆவுடையம்மாளைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார் தேவாரத்தில்.

நமது பத்திரிகை அச்சாகும்,, கமர்ஷியல் அச்சகத்தில் பைண்டிங் இலாகாவில் வேலை பார்க்கும் சிரஞ்சீவி பி. எஸ். சுப்பிரமணியம், சௌ. ஜீவரத்னம்மாளை மணந்து கொண்டார். சென்னையில், சென்ற மாதம் 12ம்தேதி. திருமணத்திற்கு அச்சகத் தொழிலாளர்கள் பலரும் விஜயம் செய்து ஆசி கூறிப் பரிசுகள் வழங்கினார்கள்.

சென்ற மாதம் 15ம் தேதி, நமது கடலூர் ஏஜண்ட் ஆர். கே. முத்துராமலிங்கம் செட்டியார் தமது தம்பி சிரஞ்சீவி ஆர். கே. பிரஹலாதனுக்குத் திருமணம் செய்து வைத்தார். மணமகள் சௌ. பாலகுருவாம்பாள்.

நமது பத்திரிகையின் விளம்பர இலாகாவில் பணியாற்றும் சிரஞ்சீவி ஜே. ரத்னசபாபதி என்ற ஜே. ஆர். எஸ். சர்மா கிரஹஸ்தராகி விட்டார். பங்களூர் ஹிந்துஸ்தான் ஏர்கிராப்ட் லிமிடெட் ஸ்தாபனத்தில் வேலை பார்க்கும் ஸ்ரீ. ஏ. கோபாலஸ்வாமி அய்யரின் புத்திரி சௌ. சந்திரவதனா அவரது வாழ்க்கைத் துணைவியானார். சென்ற மாதம் 22–ம் தேதி, ஆரணியில் நடைபெற்ற இந்த விவாகத்திற்கு நமது காரியாலயத்தார் சென்று ஆசி கூறிப் பரிசு வழங்கினார்கள். மற்றும் பல நண்பர்களிடமிருந்து ஆசிச் செய்திகளும், பரிசுகளும் வந்து குவிந்தன.

தம்பதிகள் அனைவருக்கும் ''குண்டூசி''யின் மனப்பூர்வமான ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## பம்பாயிலே தமிழ் நாடகங்கள்

இளைஞர் முன்னேற்றக் கழகம் ''கவியின் கனவு'' தமிழ் நாடகத்தை சென்ற மாதம் 28-ம் தேதி போதார் கல்லூரி அரங்கில் நடத்திற்று. நாடகத்தில் ஏ. பி. பாரத்பாலகிருஷ்ணன், மயில்வாகன், மிஸ். சாந்தி, பி. கே. சரஸ்வதி ஆகியோர் நடித்தார்கள். எஸ். ஆர். சாரங்கன் டைரெக்ட் செய்தார். பாண்டுரங்-ராஜாமணி வாத்திய கோஷ்டி நாடகத்தின் சிறப்புக்கு உதவியது.

''மனோரதம்'' என்ற தமிழ் நாடகத்தை கலா நிலயத்தார்கள் இம்மாதம் 3-ம் தேதி அளிக்கப் போகிறார்கள். இதில் சினிமா நடிகை நந்தினி நடிப்பார். பாண்டுரங்-ராஜாமணி சகோதரர்களின் புதிய சங்கீதத்தையும் கேட்கலாம்.

## தடையும்-வழக்கும்

சென்னை சர்க்கார், ''ஆயுள் தண்டனை'' என்ற நாடகத்தை ராஜ்யத்தின் எந்த இடத்திலும் பொது மேடையில் நடிக்கக் கூடாது என்று நாடகச் சட்டம் 3-வது பிரிவின்கீழ் தடை விதித்துள்ளனர். மேற்படி நாடகம் ஜனவரி 3-ம் தேதி எம். ஆர். ராதாவால் சென்னை வண்ணாரப் பேட்டையில் நடிக்கப்பட்டது. மேற்படி நாடகம் பொது மக்களது மனதைப் பாழ்படுத்தும் முறையில் இழிவானதாக உள்ளதென்றும், ஏற்கெனவே தடை செய்யப்பட்ட ''பணக்காரன்'' என்ற நாடகத்துக்கே ''ஆயுள் தண்டனை'' என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சென்னை சர்க்கார் கருதுகின்றனர்.

நாடகத்தின் வசன நகலை அதிகாரிகளுக்குக் கொடுக்காமல் ஜனவரி 3-ம் தேதியன்று சென்னை, வண்ணாரப்பேட்டையில் ''ஆயுள் தண்டனை'' என்ற நாடகத்தை நடத்தியதற்காக எம். ஆர். ராதா என்ற நடிகர் மீது இ.பி.கோ. 176 பிரிவுபடியும், நாடகங்கள் சட்டத்தின் கீழும் போலீஸார் சென்ற மாதம் 5ம் தேதி சென்னைப் பிரதம பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் முன்பு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்கள்.

''நல்ல முடிவு'', ''முருகன்'', ''பணக்காரன்'' என்ற நாடகங்கள் ஏற்கெனவே சர்க்காரால் தடை செய்யப்பட்டவை. இந்த நாடகமும் அநேகமாக அதே மாதிரியானதுதான். ஆரியர்கள், திராவிடர்களிடையே விரோதத்தைத் தூண்டி விடுவதாக இருக்கிறது. அத்துடன் சர்க்காரையும், காங்கிரஸ் கட்சியையும் அவதூறான முறையில் தாக்குகின்றது என்று குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சர்க்காரால் தடை செய்யப்பட்டுள்ள ''போர் வாள்'' என்னும் நாடகத்தின் கருத்துக்களை ''சுந்தரலீலா'' என்ற வேறு பெயர் கொண்ட நாடகத்தில் புகுத்தி நடித்ததாக பிரபல நாடக நடிகர் எம். ஆர். ராதா மீதும், மற்றும் ஏழு பேர்கள் மீதும் சேலம் ஜில்லா மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## இசைத் தட்டு சங்கீதம்

இந்திய சினிமா இசைத் தட்டுகளை அடியோடு தடை செய்வது அகில இந்திய ரேடியோவின் நோக்கமல்ல என்றும், நல்ல பாட்டுகளை மட்டும் வைக்க கட்டுபடுத்துவதுதான் தங்களது நோக்கம் என்றும் ரேடியோ மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் சென்ற மாதம் 11-ம் தேதி மக்கள் சபையிலே தெரிவித்தார். சினிமா இசைத் தட்டுகளை ஒலிபரப்புவதற்கு பட உற்பத்தியாளர்களுடன் சர்க்கார் ஒரு காண்ட்ராக்ட் ஏற்படுத்திக் கொண்டிருந்தால்தான் நல்ல பாட்டுகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு கமிட்டி நியமிக்கும் கேள்வி எழ முடியும் என்றும், அது போன்ற ஒரு காண்ட்ராக்ட் இல்லாததால், கமிட்டி நியமிக்கும் கேள்வி எழவில்லை என்றும் ஒரு ''நேயர் விருப்பம்'' கேள்விக்கு அவர் பதிலளித்தார். இது கவனத்தில் கொள்ளப்படுவதாயும் சாத்யமான அளவுக்கு பலதரப்பட்ட இசைத் தட்டுகளை வைப்பதுதான் அ. இ. ரேடியோவின் கொள்கை என்றும் அவர் கூறினார்.

## தங்கமணி உதவினார்

பிப்ரவரி மாதம் 28-ம் தேதி, குமாரி ஆர். தங்கமணியின் நாட்டியக் கச்சேரி ஒன்று, சிதம்பரம் தில்லை டாக்கீஸில் நடைபெறறது. சிதம்பரம் நகராட்சி ஆரம்ப பாடசாலை, பிரசவ விடுதி இவைகளின் கட்டட உதவி நிதிக்காக இக்கச்சேரி நடைபெற்றது. இவரது நடனக் கச்சேரி, யாழ்ப்பாணம் கலை விழாவில் அடுத்த மாதம் 17-ம் தேதி நடைபெறவிருக்கிறது.

# பிரதி பலன்

ரா. வெங்கடசாமி

"ஏன் சாந்தா, இந்த நிலையிலே போனா இன்னும் ரெண்டு மூணு வருஷத்திலே நம்ம சேத்த சொத்தெல்லாம் கரைஞ்சு போயிடுமே!" என்றாள் மாஜி பிரபல நடிகை சாந்தா தேவியின் தாயார் அம்புஜம்மாள்.

"சம்பாதித்தது எதற்கம்மா! நிம்மதியாக இருந்து சாப்பிடத்தானே! தாராளமாகச் செலவு செய்து விட்டு இப்போது சுருக்கமாகச் செய்யக் கையை குறுக்கிக் கொள்ள எனக்கு மனதே வரவில்லையம்மா!" என்றாள் சாந்தா தேவி!

"எப்போதோ வாங்கின கடனுக்குன்னு, நல்ல நிலத்தை வித்தே! இப்போ செலவுக்குன்னு காரையும் வித்துட்டே! இன்னும் என்னென்ன செய்யப் போறியோ......ஆமா, சாந்தா உனக்கு வயசு இருபத்தி மூணுதானே ஆகுது, ஏதாவது படத்திலே சான்ஸுக்கு போய் முயற்சி பண்ணக் கூடாதா!"

"என்னம்மா இது, என் விஷயத்தை நீ நன்றாக அறிந்த பிறகுகூட இம்மாதிரி சொல்கிறாய்!......யாராவது வந்து கூப்பிட்டால்......நான் போகமாட்டேனென்றா சொன்னேன்! கூப்பிடத்தானே ஆளில்லை......"

"உன்னை இம்மாதிரி வாழவொட்டாமல் செஞ்சிட்ட அந்த பாவிக்கு நல்ல கதி கிடைக்காது...!" என்றாள் அம்புஜம்மாள்.

"யாரையும் நொந்து பிரயோஜனமில்லையம்மா!...என் போன்றவர்களுக்கு சினிமா வானில் இடமில்லை..." சாந்தா மனதில் உள்ளதைச் சொன்னாள்.

அம்புஜம் பேசாமல் இருந்துவிட்டாள்.

சாந்தாவின் மனம், தான் பணத்தோடும், புகழோடும் வாழ்ந்த நாட்களை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தது.

## 2


சாந்தா தேவி எங்கோ பிறந்தாள். எங்கோ வளர்ந்தாள். அவள் சென்னைக்குக் குடிவரும்வரை யாருக்கும் அவளைப் பற்றித் தெரியாது. அவளது தகப்பனுக்கு, சர்க்காரில் பெரிய உத்தியோகம். சென்னைக்கு மாற்றல் உத்தரவு கிடைத்த போது சாந்தாவுக்குப் பதினேழு வயது. பெரிய உத்தியோகஸ்தர் மகள் என்றால் பிரத்தியேகக் கலைகள் ஏதாவது தெரிய வேண்டாமா! வீணையோடு நாட்டியம் கற்றுக் கொண்டாள் சாந்தா. கற்றுக் கொண்டது வீண் போகக் கூடாது என்பது அவளுடைய தாயாரின் எண்ணம். "மேடை ஏறி நாட்டியமாடுவது எனக்குப் பிடிக்காது, வீட்டிலேயே ஆடினால் போதும்!" என்ற முடிவு அவளுடைய அப்பாவுடையது. கடைசியில் அம்புஜம்மாளின் கட்சிதான் வெற்றிபெற்றது. சாந்தா இரண்டிற்குமே தயார்! பிறகு கேட்பானேன்!

ஒரு நல்ல நாளில் அரங்கேற்றம் நடந்தது. சாந்தாவுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுத்த நட்டுவனார், பட உலகில் சம்பந்தப்பட்டவர். அரங்கேற்றத்திற்கு வரும்போதே இரண்டு படத் தயாரிப்பாளர்களையும் கூட கூட்டிக்கொண்டு வந்திருந்தார்.

சாந்தா அப்போது கண்கவரும் கட்டழகி. நாட்டியத்திலும் திறமையிருந்ததால் யாரும் பாராட்டத் தயங்கவேயில்லை. பிறகு கேட்பானேன்.

படவுலகுக்கு அறிமுகப்படுத்தத் தயாரிப்பாளர்கள் துடித்தார்கள். எல்லோரும் புகழும் நக்ஷத்திரமாக வேண்டுமென சாந்தாவுக்கும் ஆசை. ஆனால், அப்பா என்ன சொல்வாரோ என்ற பயம்.

ஆனால், அவளது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள தாம் வழிவிடுவது போல், ஒரு நாள் அவள் தகப்பனார் செத்து வைத்தார். அம்மாவின் ஆசீர்வாதத்துடன் சினிமா உலகில் புகுந்தாள் சாந்தா !



படித்தவள் ... பண்போடு நடந்துகொள்ளத் தெரிந்தவள்...' கலை கலைக்காகவே' என்று நினைப்பவள். அவள் முன்னேறினாள்...மூன்று படங்களில் தான் அவள் நடித்தாள் என்றாலும், முப்பது படங்களில் நடித்த புகழ் வந்து விட்டது அவளுக்கு.

அவளைப் பற்றி ஒரு பிரபல பத்திரிகை எழுதியது...

''சாந்தா தேவி... சினிமா வானில் தோன்றியுள்ள ஒரு அபூர்வ நக்ஷத்திரம். படத் தயாரிப்பாளர்களிடம் பகட்டோடு, பல்லையும் காட்டி முன்னேறும் நக்ஷத்திரங்களைப் போலல்லாமல்...தங்களுடைய நடிப்புத் திறமையால் பெயர் வாங்கும் ...நடிக, நடிகைகளின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணக் கூடிய தொகை. அவர்களில் ஒருவர்தான் சாந்தா தேவி.''

பத்திரிகை ஆசிரியர் எழுதியது நூற்றுக்கு நூறு உண்மை. அம்புஜம்மாளின் பலத்த கண்காணிப்பு ஒரு பக்கம் இருந்தாலும், சாந்தாதேவியின் கண்டிப்பைக் கண்டு, யாரும், அதாவது எந்தப் பட முதலாளியும் சில்லறைத்தனமாக அவளை நெருங்கத் துணிந்ததில்லை.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கத் தோன்றியவர்தான் பரமேஸ்வரா பில்ம்ஸின் சொந்தக்காரரான ஆவுடையா பிள்ளை...பெரிய லட்சாதிபதி. பணத்தைச் செலவழிக்க வழி தெரியாமல் படத் தயாரிப்பில் இறங்கியவர்...பெரிய ஸ்டார்களைப் பிடித்துப் போட்டு, படத்தை வெற்றி பெறச் செய்வது அவரது திறமைகளில் ஒன்றாகும்.



அவரது படக் கம்பெனி மிகவும் பெரியது என்றால் அது மிகையாகாது. ஆவுடையா பிள்ளை கலை உலகத்தில் இருக்கும் சகலவித இன்ப துன்பங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று நினைப்பவர்... அப்படிப்பட்டவரின் திருஷ்டி சாந்தா தேவியின் மீது விழுந்தது. யார் யாரோ சொன்னார்கள், அவளைப் பற்றி. மிகவும் தெரிந்தவர்கள், அவள் மிகவும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றும் சொன்னார்கள். ஆவுடையா பிள்ளை எதையும் கேட்கவில்லை.

"சினிமா ஸ்டார் தானே... மானம், மரியாதை, அந்தஸ்து, கௌரவம் இதெல்லாம் அவர்களுக்கு ஏது ஐயா! பணம்...பலதும் செய்யும்!" என்று பதில் சொல்லி விட்டார்.

அவரது முயற்சி படுதோல்வி அடைந்ததுதான் மிச்சம். கழுத்தைப் பிடித்துத் தள்ளாததுதான் குறை...

"இவளுக்கென்ன இவ்வளவு திமிரா. என்னை யாரென்று நினைத்தாள்!...இவள் சினிமாத் துறையில் இனி இருக்கிறதைப் பார்க்கிறேன்" என்று கருவினார்.

"பட முதலாளியின் தயவே எனக்குத் தேவையில்லை. நடிப்புக்கு மதிப்புக் கொடுத்து என்னை ஒப்பந்தம் செய்தால் செய்யட்டும் ......இல்லாவிடில் தேவையில்லை......!" என்றாள் சாந்தா.

ஆனால், வெற்றி பெற்றது சாந்தா தேவி அல்ல! ஆவுடையா பிள்ளையின் பணம் வேலை செய்தது. எல்லா விதத்திலும் சாந்தா தேவிக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்......அதில் முழு வெற்றி கண்டார்...

சாந்தா தேவிக்கு படத்தயாரிப்பாளர்களிடமிருந்து அழைப்பு வரவரக் குறைந்து கொண்டே வந்து, கடைசியில் ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது.

"அப்படிப்பட்ட அழைப்பு தேவையே இல்லை" என்ற முடிவுக்கு சாந்தா தேவியும் வந்தாள். அவள் அம்மாவுக்கு இதைப்பற்றியெல்லாம் அதிகம் சொல்லவில்லை. எதற்கென்று அவள் பேசாமல் இருந்து விட்டாள்.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் பெயர் மறைந்து கொண்டே வந்தது. ஏன், இரண்டு மூன்று வருஷத்தில் அவளை சினிமா ரஸிகர்கள் மறந்தே விட்டார்கள் எனலாம்!

மகளுக்குக் கல்யாணம் செய்து வைக்கவேண்டுமென்ற கவலை அம்புஜம்மாளுக்கு! உற்றார் உறவினர்களிடம் சொல்லி. வரன் பார்த்தாள். ஒன்றும் சரியாகக் குதிரவில்லை. சாந்தா தேவியை மணம் செய்துகொள்ள எவனுமே முன்வரவில்லை என்றுதான் சொல்லவேண்டும். காரணம் அவள் சினிமா நடிகையாக இருந்ததால்தான். பணத்திற்கு ஆசைப்பட்டு ஏதோ சிலர் வந்தார்கள். அவர்களை சாந்தாவுக்கும், அம்புஜத்திற்கும் பிடிக்கவில்லை.

நாட்கள் கழிந்துகொண்டே போயின. சாந்தா தேவி சினிமா உலகத்தையே மறந்து விட்டாள். நிம்மதியாக வீட்டிலிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். வருஷத்துக்கு ஒரு நாள் நாட்டியக் கச்சேரி ஏதாவது வரும். அதற்கும் குறைச்சலான தொகைதான் சன்மானமாகக் கிடைக்கும். ஆனால், அவள் செலவோ மிகவும் அதிகம். வருவாயே இல்லாமல் செலவு மட்டும் செய்தால்......பணம் வளர்ந்து கொண்டே போகுமா! அதைக் குறித்துத்தான் அவள் தாயார் கவலைப்பட்டாள். சாந்தா அதை லக்ஷியம் செய்ததாகவே தெரியவில்லை.




மேக்கப் கலைஞர் :—என்ன, மிஸ்டர் 'கும்பகர்ணன்'! மேக்கப் செய்து முடிப்பதற்குள்ளாகவே தூக்கம் போட்டுவிட்டீரே! ஓய், எழுந்திரும்!...'ஸெட்'டிற்குப் போய் அங்கே படுத்துத் தூங்கும்........

## 3

பத்திரிகையில் அன்று ஒரு பெரிய விளம்பரம் வந்திருந்தது. புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு டடக் கம்பெனிக்கு நடிக, நடிகைகள் தேவையாம். விளம்பரத்தின் ஒரு பகுதியில் பிரசுரித்திருந்த போட்டோவில் இருந்த மனிதரை எங்கோ பார்த்த ஞாபகம் இருந்தது சாந்தாவுக்கு. சந்தித்து பேசிய நினைவும் இருந்தது. அந்த முகம்...அவள் மனதிலிருந்து நெடு நாள் மறையவேயில்லை. ஏனெனில் அவள் உள்ளத்தில் அதனால் ஒரு சலனம் ஏற்பட்டு விட்டிருந்தது.

ஆனால், அவளுடைய நிலைமையில் அதைப்பற்றி நினைக்கக்கூட அவளுக்கு நேரமில்லை. அவர் யாரோ, தான் யாரோ என்ற நினைவு ஒரு பக்கம். பெண் உள்ளத்தில் உதயமாகும் அன்பு மறைவதேயில்லை, அது நீறு பூத்த நெருப்பைப் போல. அவளுக்குக் கல்யாணம் பேச, அம்புஜம்மாள் முயலும் போதெல்லாம் 'அந்த முகம்' அவள் மனக்கண் முன் தோன்றிக் கொண்டிருக்கும். கல்யாணப் பேச்சும் இப்போது சற்று மந்தமாக இருக்கவே, அதைப் பற்றியும் நினைவு மறைந்து விட்டது.

இன்று அந்த விளம்பரம் மீண்டும் 'அந்த முகத்'தை அவளுக்கு ஞாபக மூட்டியது.

''எங்கே பார்த்திருக்கிறேன்!'' என்று தன் மனதைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள்.

பத்திரிகையின் முன் அமர்ந்து யோசனையிலிருக்கும் தன் மகளைக் கண்ட அம்புஜம்மாளின் திருஷ்டியிலும் அவ்விளம்பரம் பளிச்செனப் பட்டது.

[தொடர்ச்சி 67-ம் பக்கத்தில்]

# பொதுஜனம் பேசுகிறார்

★ கதாநாயகன் சூட்டும், கோட்டும் போட்டுக் கொண்டு கையில் சிகரட்டுடன் காட்சியளிக்கும் படங்களும், கதாநாயகி பைஜாமாவும், கம்சும் அணிந்து, லாரலப்பா மெட்டில், குதிரை நடை போடும் காட்சிகளும், கடவுள் நிந்தனை, கட்சிப் பிரசாரம் நிறைந்த காட்சிகளும் உள்ள படங்களே தற்காலத்தில் சமூகப் படங்கள் என்று பெயர் பெற்று வருகின்றன. உண்மையிலேயே சமூகப் படங்கள் என்றால் அவை புராண காலக் கதையாக இருந்தாலும் சரி, சரித்திர காலக் கதையாக இருந்தாலும் சரி, நவீன காலக் கதையாக இருந்தாலும் சரி. உண்மையிலேயே சமூகத்தை உயர்த்தக் கூடிய, மக்களுக்குப் பயன்படக் கூடிய கருத்துக்களையும், நீதிகளையும், தன்னுள் கொண்டுள்ள படமாக இருக்கவேண்டும். உதாரணமாக "ஔவையார்" ஒரு பழங்காலச் சரித்திரக் கதைதான். இருந்தாலும் அது நம் சமூகப் பண்பாட்டை ஒட்டியும், சமூகத்தை உயர்த்தும் நீதிகளைக் கொண்டிருப்பதாலும் அதையும் சமூகப் படம் என்றே கொள்ளலாம். இனிமேலாவது நம் பட முதலாளிகள் கட்சிப் பிரசாரம், கடவுள் நிந்தனை முதலிய காட்சிகள் நிறைந்த படங்களை விட்டு "கல்கி" கூறியபடி படங்களைத் தயாரிக்க வேண்டுகிறேன்.

எ. ராமசாமி, வடமலைபுரம்.

## அட்டவணையை மாற்றுக!

ஒருவாறாக, நடிப்புத் துறையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் பின் தங்கியிருந்த தமிழ்ப் படங்கள், தற்போது மிகவும் முன்னேற்றமடைந்திருக்கின்றன. நட்சத்திரங்கள் ஒளி வீசும் படங்கள் தான் வெற்றி பெறும் என்ற நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. குறிப்பிட்ட சில நக்ஷத்திரங்களின் 'இரும்புப் பிடி'யிலிருந்து தமிழ்ப் பட உலகம் தன்னை விடுவித்துக் கொண்டு, ஜெமினி கணேஷ், மனோஹர், சாவித்திரி போன்ற பல எத்தனையோ புதிய இளம் நடிகர்களுக்கு சந்தர்ப்பம் அளித்திருக்கிறது. இந்த நிலைமையை—மாற்றத்தை ரசிகர்கள் பெரிதும் வரவேற்கிறார்கள். ஆனால், இப்படி முன்னேற்றமடைந்த இந்த இளம் நடிகர்களிடம் புகழும் பணமும் ஓரளவு சேர்ந்தவுடன் 'காற்றடிக்கப் பட்ட பலூன் போல' அவர்கள் தங்கள் உடலை உப்ப விட்டு விடுகிறார்கள்! எவ்வளவுதான் ஆற்றலுள்ள நடிகனாக இருந்தாலும், தோற்றம் ஓரளவாவது கவர்ச்சிகரமாக இருந்தால்தான் ரசிகர்களின் நீடித்த ஆதரவைப் பெற முடியும். உடல் ஊதி விகாரமாகக் காட்சியளிக்கும் நக்ஷத்திரங்கள் என்னதான் சிரமப்பட்டு நடித்தாலும், புகழைக் காப்பாற்றிக் கொள்வது கடினம். சமீப காலமாக, நமது சில நக்ஷத்திரங்களின் தோற்றம் படங்களில் சகிக்க முடியாதபடி விகார நிலையை அடைந்து விட்டிருக்கிறது. நடிகர்கள் தயவு செய்து சற்று சிந்தித்துப் பார்த்து 'இது தங்கள் நலன் கருதியே கூறப்படுகிறது' என்பதை உணர்ந்து, உடலைப் பேணி பாதுகாக்க முயற்சிக்க வேண்டும். நாள்தோறும் படப் பிடிப்பு இல்லாத வேளைகளில் முடிந்த வரையில் தேகத்தைப் பாதுகாக்க பலவித பயிற்சிகளில்—விளையாட்டுகளில் ஈடுபட வேண்டும். உண்பது, உறங்குவது, ஸ்டூடியோக்களில் உழைப்பது—இவ்வாறு இருக்கக் கூடாது. அவர்களின் கால அட்டவணையில் உடற்பயிற்சி என்பதையும் சேர்த்து அட்டவணையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

மு. புரட்சிப்பித்தன், மதுரை.

☆ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர் :

எ. ராமசாமி,
வடமலைபுரம் போஸ்ட்,
சாத்தூர் தாலுகா.

## நம்ப முடியாதவை!

சென்ற ஆண்டு வெளிவந்த "மனம் போல் மாங்கல்யம்" என்ற படம் ஒரு சிறந்த படம் என்று நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதில் சில சம்பவங்கள் நம்பக்கூடியவையாக இல்லை.

படத்தில் வரும் அனுமன்தன், முதலில் கார் 'ஹார்னை'த் தொடுவதற்கே பயப்பட்டுக் கொண்டு, கடைசியில் திடீரென்று வேகமாக கார் ஓட்டுவது ஒன்று. கடைசிக் கட்டத்தில் காயப்பட்டுக் கிடக்கும் மீனுவின் தலையில் கட்டுப் போட்டிருக்கிறது. ஆனால், தன் சித்தியைப் பார்க்க அவள் போகும் பொழுது கட்டு திடீரென மறைந்து விடுகிறது! இந்த இரண்டு சம்பவங்களும் நம்பக்கூடியவைகளாக இல்லை. இயற்கைக்கு முரணாகவும் இருக்கிறது. இந்த மாதிரி அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் படங்களிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

எம். பிரேமா தேவி,
கடலூர் என். டி.



ரேடியோ மூலமும், கச்சேரிகள் மூலமும் பிரபலம் அடைந்து வரும் சீர்காழி எஸ். கோவிந்தராஜனின் இனிய பாட்டை ''பொன்வயல்'' படத்தில் கேளுங்கள்.

## ஒரு யோசனை

''லக்ஷ்மி''யின் ''பெண் மனம்'' என்ற நாடகத்தை சென்னை ரேடியோவில் கேட்டேன். லக்ஷ்மியின் நாவல்களில் ''காஞ்சனா''விற்கு அடுத்தபடி என் மனதைக் கவர்ந்தவை, ''பெண் மன''மும் ''மிதிலா விலா''ஸுமாகும். இவைகளைப் படமாக எடுத்தால் ஜனரஞ்சகமாக இருக்கும். பல பெயர்களில் ஒரே மாதிரி கருத்துள்ள படங்களைக் கண்டு வெதுப்புற்ற நமக்கு ஒரு மாறுதலாகவும் இருக்கும். ரேடியோவில் ஒரு மணி நேரத்தில் அந்த நாவலை அடக்கும்படி நேரிட்டதால், நாடகம் சுவை குன்றியிருந்தது. கணேசனை ஜகந்நாதனாகவும், லலிதாவை சந்திராவாகவும் நடிக்க வைத்து, இக்கதையைப் படமெடுத்தால் நல்ல ஆதரவு கிடைக்கும். நம் வழக்கங்களுக்கு ஒவ்வாத பிறநாட்டுக் கதைகளைத் தழுவி, படமெடுப்பதை விட்டு, நம் சிறந்த எழுத்தாளர்களின் கதைகளை கௌரவிக்கும் நாள் என்நாளோ !

எம். சுசிலா, மயிலாப்பூர்.

## "படமுதலாளிகள் கவனிக்க."

படமுதலாளிகள் சினிமாக்களில், முக்கியமாகப் பல விஷயங்களை, குறிப்பாக பெண்கள் நாகரீகத்தைப் பற்றித்தான் மிக ஏளனமாகப் பேசுவதை கவனித்து திரைக்கு அனுப்ப வேண்டும். உதாரணமாக, ''ஆசை மகனி''ல் லக்ஷ்மியம்மாவின் வீட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும் கல்யாணி அம்மாள் சொல்வதுதான். ''இந்தக் காலத்திலே பெண்கள் மெல்லிய ஜார்ஜெட் புடவையும், முழு நீள கை வைத்த ஜாக்கெட்டையும் போட்டுக் கொண்டு போறது பார்க்க சகிக்கலை; நாகரீகம்! மூடி வைக்கிறதை யெல்லாம் முக்கால்வாசி திறந்து காட்டுவதுதான் நாகரீகமா !'' எனப் பேசுகிறார். இவ்வாறு திரையில் சொல்லப்படும்போது திரைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஆண்கள் ''கொல்''லென நகைக்கிறார்கள். பெண்களைத் தலை குனியச் செய்யும் காட்சி இது. இக்காலப் பெண்களை அவமானப் படுத்தவே இக் காட்சி காட்டப்படுகிறதா? இம் மாதிரிக் காட்சிகளை இனிமேலும் படமுதலாளிகள் நன்கு கவனித்து, பார்த்து திரைக்கு அனுப்ப வேண்டும் எனப் பெண்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

வி. ஜி. லக்ஷ்மி, குகை-சேலம்.

## ஈடுபடுவார்களா ?

''கட்ட பொம்மன்'' வரலாற்றைத் திரைப்படமாக்க எஸ். எஸ். வாஸன் மேற்கொள்ளும் முயற்சி யாவராலும் வரவேற்கத் தக்கதேயாகும். மேலும், இது மற்ற பட முதலாளிகளுக்

கும் ஒரு வழிகாட்டியாகும். துரதிர்ஷ்ட வசமாக சரித்திரப் புத்தகங்களில் தமிழ் நாட்டுச் சரித்திரக் கதைகள் போதிய இடம் பெறவில்லை. ஆயினும் அவைகள் கிராமங்களில் நடக்கும் கூத்துகளிலும், நாட்டுப் பாடல்களிலும் ஏட்டுச் சுவடி களிலுமே மிளிர்கின்றன. இவைகளில் சீரும் சிறப்பும் வாய்ந்ததே "கட்ட பொம்மன்" கதையாகும். இவ்விதமே அநேக அரும் பெரும் வரலாறுகள் அச்சுருப் பெறாது நாட்டுப் பாடல்களாகவே உலவி வருகின்றன. அத்தகைய சரித்திரங்களை யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் தொகுத்து வெளியிட முயற்சி செய்யவேண்டியது அவசியமாகும். இம் முயற்சியில், கிராம மக்களையும், நகர மாந்தரையும் ஒருங்கே கவரும் திரைப் படம் ஒரு சிறந்த சாதனம் ஆகும். எனவே, புராணங்களைப் பழங்காலத்தவை என்று கருதி விலக்கி விட்டு, சமூகம் என்ற பெயரால் கீழ்த் தரமான படங்களைப் பிடித்து மக்களின் மதிப்பைப் பெரிதும் இழந்துவிட்ட பட முதலாளிகள், வாஸனின் வழியைப் பின் பற்றி, மறைந்து கிடக்கும் தமிழ் நாட்டு சரித்திரத்துக்கு நல் வகையில் உருவளிக்கும் முயற்சியில் ஈடுபடுவார்களானால், இதற்கு ரஸிகர்களின் ஆதரவு இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எஸ். கிருஷ்ணசாமி,
ஹைதராபாத்.

## முன் வருமா?

இலங்கை - மலேயா - இந்தோனேஷியா - தாய்லாந்து - பர்மா முதலிய மற்றைய கிழக்கு ஆசிய நாடுகளில் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்திருக்கும் "தேவன்", 'ஐந்து நாடுகளில் அறுபது நாள்' என்னும் பிரயாணக் கட்டுரைகளை விகடனில் தொடர்ந்து எழுதிவருவதை நான் ஆவலுடன் தொடர்ந்து படித்து வருகிறேன். மேற்குறிப்பிட்ட நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய விவரங்களைப் படித்தறிந்த என் உள்ளம் 'ஏன நம் நாட்டு சகோதர சகோதரிகள் மேற்சொன்ன நாட்டவர்களைப் போல் வாழக்கூடாது' எனத் துடிக்கிறது. நம் நாட்டவர்கள் மேனாட்டவர்களைப் போல் வாழ வேண்டுமென்று நினைத்து நமது அரசாங்கம் முன் வருமானால் நிச்சயம் வெற்றி பெறும். எப்படி யென்றால் விக


விநாயகர்
V. ARUMUGA CHETTY
சுருட்டுகள்
ஷெல்
பிராண்டு
TRADE MARK REGISTERED
PROPRIETOR: V. ARUMUGA CHETTY.
மணிலா
சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி
18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1.
N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும் எம்மிடம் கிடைக்கும்.

டனில் ''தேவன்'' எழுதிவருவதை முற்றிலும் சினிமாப் படமாக தயாரித்து பட்டிணங்களிலும் கிராமங்களிலும் காண்பித்து வந்தார்களானால் தற்பொழுது நம் நாட்டில் கல்வியறிவு இல்லாத நம் சகோதர சகோதரிகளுக்குப் பெரிதும் பயன்படும். இப்பணியையச் செய்ய நம் அரசாங்கம் முன்வருமா ?.

டி. வி. மணி, திருவிழிமிழலை.

## பத்திரிகை விமர்சனம்


லக்ஷக்கணக்கில் பணத்தைக் கொட்டுகிறார்கள் ; வருஷக் கணக்கில் இரவு பகல் எனப் பாராது படம் தயாரிக்கிறார்கள் ; சென்ஸாருக்குப் போனவுடன், 'இந்த இடத்தை வெட்டு, அந்தக் காட்சியை எடு' என்று அவர்கள் சொன்னபடி யெல்லாம் கத்தரிக்கோலைப் பாய்ச்சி ஏதோ ஒரு மாதிரியாக படத்தை வெளியிடுகிறார்கள் பட முதலாளிகள். தாங்கள் தயாரித்த படத்தை பொதுமக்கள் அப்படியே கண்ணை மூடிக்கொண்டு வந்து பார்த்து காசைக் கொட்டிவிட்டு, 'நன்றாக இருக்கிறது' எனக் கூறிச்செல்வார்கள் என எதிர்பார்க்கிறார்கள் அவர்கள். ஆனால், பொதுஜனங்கள் பத்திரிகைகளில்' வரும் விமர்சனங்களைப் படிக்கிறார்கள். அவரவர் அபிமானப் பத்திரிகைகளில் வரும் விமர்சனங்களைப் படித்துவிட்ட பிறகே படங்களைப் பார்க்கலாமா கூடாதா என்று தீர்மானிக்கிறார்கள். ஏதோ எல்லாப் படங்களையும் (அது எப்படி இருந்தாலும்) தவறாமல் பார்க்கும் ஒரு சிலரைத் தவிர! ஆகவே, பத்திரிகைகளில் வரும் விமர்சனங்களைப் பொருத்திருக்கிறது, படங்களுக்கு பொதுஜனம் அளிக்கும் மதிப்பு என்றே கூறவேண்டும். ''ஒரு தடவை பார்க்கலாம்'' என்று எழுதினாலாவது ஏதோ கொஞ்ச நாட்களாவது தியேட்டரில் படம் ஓடும் ; ''படம் மோசம்'' என்று எழுதிவிட்டால் படம் தியேட்டரை விட்டே ஓடிவிடும் ! ஆக, பத்திரிகை விமர்சனங்களையே பொதுஜனம் விரும்புகிறார் என்பதில் ஐயமென்ன! படங்களின் தயாரிப்பின்போதே, அல்லது படம் தயாரித்து முடித்த பிறகு பத்திரிகாசிரியர்களுக்குப் போட்டுக் காட்டியோ, எந்த எந்த இடங்கள் வேண்டாம் அல்லது வேண்டும் என அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்களோ, அதை அனுசரித்து அவர்கள் யோசனைகளை ஒட்டி பட முதலாளி



''மேஜு கொஜபு'' என்ற தெலுங்குப் படத்தில் கையில் கடிதமும், கவனம் வேறு எங்கோவாக காட்சி அளிக்கிறார் கிருஷ்ணா.

கள் படங்கள் தயாரிப்பார்களேயானல், அநாவசியமான பொருள் நஷ்டம் ஏற்படாது. பொதுஜனமும் தவருமல் பார்த்து மகிழலாம் என்றே நான் கருதுகிறேன்.

க. ரகுபதி, கும்பகோணம்




ரஸிகர் :—படம் கால்பாகம் ஓடிவிட்டாலும் பரவாயில்லை, எனக்கு ஒரே ஒரு டிக்கெட் கொடுத்தால் போதும்.........

மானேஜர் :—முடியவே முடியாது.....உமக்காக இப்பொழுது கதவைத் திறந்தால் உள்ளே யிருப்பவர்கள் வெளியே வந்து தொந்தரவு செய்வார்கள் !.........

## புகழவேண்டும்

மேல்நாட்டின் தலைசிறந்த ஹாஸ்ய நடிகரான சார்லி சாப்ளின் நடிக்கும் படங்களைக் காணும் பொழுதெல்லாம் நம் உள்ளம் ஏக்கமடையும். 'நம் நாட்டில் ஒரு சார்லி சாப்ளின் இல்லையே' என்ற வருத்தம் நெஞ்சை வாட்டும். அந்தக் கவலை இப்பொழுது அறவே தீர்ந்துவிட்டது. தமிழ் நாட்டிலும் ஒரு சார்லி சாப்ளின் இருக்கிருர். நம் அருமை நடிகர் சந்திரபாபு தான் அவர். சந்திரபாபுவைப் பற்றி நாம் பெருமை கொள்ள வேண்டும். அவரைப் பாராட்டிப் போற்றிப் புகழவேண்டும். ஆனல் சினிமா உலகம் இந்தக் கலைஞர்களைப் புகழ்வதில்லை; பாராட்டுவதில்லை. படவுலகைப் பொருத்தவரையில் அதன் பல பகுதிகளிலும் ஈடுபட்டுள்ள சந்திரபாபு போன்ற சிறந்த கலைஞர்களைப் போற்றவேண்டும். புகழவேண்டும்.

எஸ். செல்வராஜ், பழனி.

## குறைக்கப்பட வேண்டும்

திரைப் படத் தொழிலில் சிறிது காலமாக படத் தயாரிப்புச் செலவு குறைந்துவிட்டது. நடிகர்-நடிகைகள் தங்களுக்குக் கிடைக்கும் பணத்தை ஏற்றுக்கொண்டு நடிக்க முன் வந்துவிட்டார்கள். வீம்புக்காகவோ, போட்டிக்காகவோ, புகழுக்காகவோ லட்ச லட்சமாகச் செலவழிக்கிருர்களே தவிர. மற்றபடி செலவினம் குறைந்து விட்டதென்னமோ உண்மைதான். ஆனல், படக் கொட்டகைகளில் காட்சிகளுக்கான கட்டணங்கள் குறையவில்லை. குறைக்கப்படுமென்ற நம்பிக்கையையும் காணேம். இந்த நிலையில் திரைப் படங்களுக்கு வசூல் குறைந்து, ஆதரவு கிடைக்காதது ஆச்சரியமில்லை. ஆகவே, படக் காட்சிகளுக்கான கட்டணங்களைக் குறைப்பதற்கு படக் கொட்டகை முதலாளிகளும் படங்களுக்கான கேளிக்கை வரியைக் குறைக்குமாறு கோரி அரசாங்கத்திடம் முறையிட படத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வளவு விரைவில் கட்டணங்கள் குறைக்கப்படுகின்றனவோ அதற்கேற்ப படங்களுக்கு ஆதரவு கிடைக்குமென்பது திண்ணம்.

எம். கே. சொர்ணப்பா, மதுரை.




### நிலவினிலே

[ஆசிரியர்: "அகிலன்"; விலை: ரூ 1-4-0; கிடைக்குமிடம்: பழனி பிரசுரம், மணிக்கூண்டு, புதுக்கோட்டை.]

தமிழ் நாட்டிலே ஒரு புத்தகம் முதல்பதிப்புடன் நிற்காமல், அடுத்து வந்தால் அது அதிசயம்; ஒரு புத்தகத்திற்கு மூன்றும் பதிப்பு வெளிவருகிறது என்றால் அது உண்மையில் உயர்ந்த புத்தகம் ஒன்றுக இருக்கும் என்பதில் ஐயமில்லை. "நிலவினிலே" என்ற இந்தக் கதைத் தொகுப்பு அத்தகைய ஒன்றுதான். தமிழ் நாட்டு இலக்கிய ரஸிகர்களின் ஆதரவைப் பெற்று மூன்று பதிப்புகள் வெளிவந்துள்ள இந்தப் புத்தகம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுதலைப் பெற்றிருப்பது மிகப் பொருத்தமே!

### சிந்தனையாளர் பிளேட்டோ

[ஆசிரியர்; அரு. ராமநாதன்; விலை: ரூ. 1-4-0; கிடைக்குமிடம்: பிரேமா பிரசுரம், சென்னை-24.]

ரூஸோ, நீட்ஷி, டார்வின் மற்றும் உள்ள பல சிந்தனையாளர்களின் புரட்சி அனைத்துக்கும் ஆணிவேர் பிளாட்டோவின் சிந்தனைகளில் இருப்பதை இப்புத்தகத்தைப் படிக்கிறவர்கள் தெரிந்து கொள்ளலாம். பிளாட்டோ என்ற கிரேக்க தத்வ ஞானியின் வாழ்க்கை வரலாறு, அவர் எழுதிய நூல்களின் சுருக்கங்கள், ஆண்-பெண் உறவிலிருந்து அரசியல் வரை பல தரப்பட்ட விஷயங்களையும் பற்றிய அவரது கருத்துக்கள் எல்லாம் இப் புத்தகத்தில் அடங்கியுள்ளன. பிளாட்டோவின் மணிமொழிகளை— அவற்றிற்கு இணையாக திருக்குறள், புறநானூறு, உபநிஷத் ஆகியவைகளிலிருந்துமேற்கோள்கள் எடுத்துக் காட்டி எளிய நடையிலே ஆசிரியர் அரு. ராமநாதன் நன்கு எழுதியிருக்கிறார்.

### சிந்தனையாளர் டார்வின்

[ஆசிரியர்: "ஜெகசிற்பியன்"; விலை: ரூ 1-4-0; கிடைக்குமிடம்: பிரேமா பிரசுரம், ஆற்காடு ரோடு, சென்னை-24.]

"இன்றைய மனிதன், குரங்குக்கும் மனிதனுக்கும் பொது மூதாதையான ஓர் இனத்திலிருந்து பாரம்பர்ய வாயிலாக வளர்ந்துவந்தவன்."— இப்படி ஒருவர் அடித்துச் சொன்னால், ஆதாரத்துடன் கூறினால், "அது யார், அந்த விசித்திர ஆசாமி" என்று அறிய ஆவல் ஏற்படுகிறது அல்லவா? அப்படிச் சொன்னவர் ஒரு மனிதர்தான். சிந்தனையாளர் டார்வின் தான். அவரது மேற்கூறிய சித்தாந்தத்தைப் பற்றியது இந்த நூல். அவர் கூற்றுக்கு விரிவான விளக்கம் பல படங்களுடன் இதில் இடம் பெற்றிருக்கிறது. 'பரிணாம வளர்ச்சியால் மனிதன் தோன்றிய விதத்'தை விளக்கும் படம், எண்ணற்ற வருஷங்களுக்கு முன் இருந்து மறைந்து போன மிருகங்களின் படம் ஆகியவை வியப்பை அளிக்கின்றன. 'டார்வின் சித்தாந்தம்' ஒப்புக்கொள்ளக் கூடியதா இல்லையா என்ற வாதப் பிரதிவாதம் எப்படியானாலும்., இது படித்து மிகவும் ரஸிக்கத்தக்க முறையில் இருக்கிறது.

### பெண்ணின் பரிசு

[ஆசிரியர்: மு. இரத்தின தேசிகர்; விலை: ஒரு ரூபாய்; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட்., சென்னை-18.]

'திருமண சமயம் மணமகளுக்குப் பரிசளிக்கத் தக்க நல்ல புத்தகம் இல்லையே' என்று ஏங்குகிறவர்களுக்கு இப்புத்தகம் நிச்சயம் ஆறுதல் அளிக்கும். குடும்ப வாழ்வில் ஆணும் பெண்ணும் அறிய வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. இல்லறத்தை நடத்தும் திறமை இல்லாளிடம் இல்லையெனில் அக் குடும்பத்திலும் இன்பம் இல்லாது போகும். மணமாகிப் போகும் பெண் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஆசிரியர் பல கட்டுரைகள் மூலம் வெளியிட்டிருக்கிறார்.

### இரு சகோதரிகள்

[ஆசிரியர்: "எல்லார்வி"; விலை: ரூ 2-6-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட், சென்னை 18.]

கிராமாந்தர வாழ்க்கையை சூழ்நிலையாகக் கொண்டு இந்த நாவலை எழுதியிருக்கிறார் ஆசிரியர். கிராம மக்களின் வம்புப் பேச்சின் விளைவாக ஒரு நல்ல குடும்பம் எப்படி ஆட்டி அலக்கழிக்கப்படுகிறது என்பது நாவலின்

உட்கருத்து. 'தீய சக்தி அதிக்கிரமங்களினாலேயே அழியும்' என்ற நீதியை விளக்கும் இந்த நாவல் படித்து ரஸிக்கத் தக்க நல்லதொரு புத்தகம். நாவலில் வரும் கதாபாத்திரங்களின் உருவங்களைக் கொண்டு அழகான ஜாக்கெட்டுடன் புத்தகத்தைக் கவர்ச்சிகரமாக வெளியிட்டிருக்கின்றனர் அமுத நிலையத்தார்.

## பாரதி தமிழ்

[தொகுத்தவர்: பெரியசாமி தூரன்; பிரசுரம்: அமுத நிலையம், லிட்., தேனாம்பேட்டை, சென்னை-18. விலை: ரூ. 7/-.]

மகாகவி சுப்பிரமணிய பாரதி காலமாகி சுமார் 33 வருஷங்களாகின்றன. ஆயினும், அவரது கவிதை, கதை, கட்டுரைகளில் பல இன்னும் புஸ்தக வடிவில் வராமல் இருக்கின்றன. பாரதியார் காலத்தில் பல பத்திரிகைகளில் வெளிவந்தவையும், மற்றும் வெளிவராமலே இருப்பவையுமான அவரது பாக்களையும் கதை கட்டுரைகளையும் சேர்த்து வெளியிடுவதென்பது எளிதான காரியமல்ல. பாரதி அன்பர்கள் பலரும் கூடிச் செய்தாலன்றி இப்பணி பூர்த்தியாகாது.

இவ்வகையில் இதர பாரதி அன்பர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறார் பெரியசாமி தூரன். அவர் தொகுத்து வெளியிட்டிருக்கும் பாரதி தமிழ் என்ற நூல். பாரதி நூல்கள் பிரசுரத்தில் ஒரு மைல் கல். 1906-ம் ஆண்டில் முதன் முதலாக பாரதி பாட்டொன்று "சுதேசமித்திரன்" பத்திரிகையில் வெளிவந்தது.

அது முதல், 1921 செப்டம்பர் 11-ந் தேதி இரவு கவிஞர் காலமானதுவரை, "மித்திர"னில் வெளியான பாரதி எழுத்துகள் அனைத்தையும் சேகரித்து, புத்தக வடிவில் நிரந்தர ஸ்தானம் கொடுத்திருக்கிறார் பெ. தூரன்.

யாரும் சாதாரணமாகப் பார்க்க முடியாத பழைய பத்திரிகைகளிலிருந்து பாரதி எழுத்துகளை வெளிக் கொண்டுவந்து பிரசுரித்தது ஒன்றே போதும் நமது நன்றியைப் பெறுவதற்கு. ஆனால், தூரனே, இக் கவிதை, கதை, கட்டுரைகளை அவை வெளியான தேதிவாரியாகப் பிரசுரித்து பாரதியின் பாட்டும் வசனமும் எப்படிப் படிப்படியாகப் பண்பட்டன என்பதையும் விளக்குகிறார். அத்துடன், பாரதியாரின் வாழ்க்கை விவரங்களைப் பற்றிய பரிசீலனை ஒன்றும் பாரதியாரின் "இந்தியா" போன்ற பத்திரிகைகள் பற்றிய ஆராய்ச்சிகளும், படங்களும் சேர்த்து பாரதி அன்பர்களுக்கு நல் விருந்தளிக்கிறார் தொகுப்பு ஆசிரியர்.



ஆர்.கே. பிலிம்ஸின் "பூட் பாலிஷ்" ஹிந்திப் படத்தில் பையன் ரதன்குமார் பிரமாதமாய் நடித்திருக்கிறானாம்.

ஏற்கெனவே பாரதி பிரசுராலயம் வெளியிட்டுள்ள பாரதி கவிதை, வசனம், கட்டுரைகள் என்ற முத்தொகுதிகளுடன் நான்காவது தொகுதியாக இடம் பெறத் தக்கது 'பாரதி தமிழ்'.

'பாரதி தமிழ்' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பதால் புஸ்தகத்தைப் பார்க்கும் பலருக்கு இந்நூல் பாரதியைப் பற்றியது அல்ல, பாரதியின் எழுத்துக்கள் கொண்டது என்பது சரியாக விளங்காமற் போய் விடுகிறது. இதுவரை வெளிவராத பாரதி கவிதை, கதை, கட்டுரைகள் கொண்ட நூல் என்று விளக்கும் வகையில் புஸ்தகத்தின் பெயரை அமைத்திருக்கலாம்.

புஸ்தகம் அவசரத்தில் வெளிவந்ததைக் காட்டும் சின்னங்கள் இருக்கின்

றன. அச்சும் காகிதமும் செம்மைப் பட்டிருக்க வேண்டும். பாரதி எழுத்துகளை வெளியிட்டனர் என்ற காரணத்தால் இதை மறந்து, நூலைப் படித்துப் பயனுறவேண்டும். பிரசுரகர்த்தர்களும் அடுத்த பதிப்பில் இக்குறைகளை நீக்கி வெளியிட வேண்டும்.

### கோவூர் கிழார்

**[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; கிடைக்குமிடம்; அமுத நிலையம், லிட்., தேனாம் பேட்டை, சென்னை-18 விலை ரூ. 1-2-0.]**

சங்க காலத்து புலவர்களுள் ஒருவரான கோவூர் கிழாரின் வரலாற்றை இப்புத்தகத்தில் தொகுத்து எழுதியுள்ளார் ஆசிரியர். கோவூரில் வேளாண்மை குடியல் பிறந்த இப்புலவரின் இயற்பெயர் இன்னதெனத் தெரியவில்லை. யாவரும் கோவூர் கிழார் என்றே வழங்க, அப்பெயரே இன்றுவரை நிலைத்திருக்கிறது. சோழ மன்னன் நலங்கிள்ளியின் அவைக்களப் புலவராக இருந்ததோடு அமைச்சர் குழுவில் ஒருவராகவும் இருந்து அரசியலில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறார் கிழார். நடந்திருக்க வேண்டிய போரை பல முறைகள் தம் பரந்த அறிவினால் தவிர்த்திருக்கிறார். சோழ மன்னர்கள் புலவர்களையும், பாணர்களையும், விறலியர்களையும் ஆதரித்து கௌரவித்ததற்கு கோவூர் கிழார் போன்ற பெரும் புலவர்கள் அமைச்சர் குழுவில் இருந்ததே முக்கிய காரணம் என்பது விளங்குகிறது. தவறு இழைப்பவர் மன்னராயினும் கண்டித்துச் சொல்லும் துணிவும், நேர்மை உள்ளமும் கொண்ட பெருங்குணம் படைத்த கோவூர் கிழார் இன்றும் அதே குணங்களோடு அவர் கவிதைகளில் வாழ்கிறார். சங்க காலத்துப் புலவர்களில் அநேகரின் வாழ்க்கை, இதைப்போல இனிப்பு நிரம்பியதாக இருக்கிறது. அவற்றை புத்தகமாக வெளியிட, ஆசிரியர் முயற்சிக்கலாம். தமிழ் மக்களும் வரவேற்பார்கள்.

### பொள்ளாச்சி வாசி

அ. பாசித் என்பவரை ஆசிரியராகக் கொண்டு பொள்ளாச்சியிலிருந்து வெளி வருகிறது இந்த வாரப் பத்திரிகை. தனிப் பிரதி விலை அரை அணா.


மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துக்களை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11.

## அழகும் அறிவும்

[34-ம் பக்கத் தொடர்ச்சி]

க்கியபடி உட்கார்ந்து கொண்டாள் சுமங்களா.

“அது சரி, நீ ஏன் இன்னும் மணம் செய்து கொள்ளாமலிருக்கிறாய்!” என்று நிமிர்ந்து வெடுக்கென கேட்டான் சத்தியன்.

அவள் முகம் குப்பெனச் சிவந்தது. அவள் கண்களிலே தோன்றிய ஒருவித கலக்கத்தை மறைக்க ஒரு புன் சிரிப்பு சிரிக்க முயன்றாள். “ஏன், அப்படி இருந்தால் என்னவாம்!”

“அது சரி, நான் கேட்பதற்கு பதில் சொல்.'

“அப்படி ஒரு விரதம் பூண்டிருக்கிறேன்.” குரல் கரகரத்தது அவளுக்கு. அவள் மனம் சங்கடப்பட்டது நன்றாய்ப் புலனாயிற்று.

“விரதமா! அது எத்தனை வருஷமாய்!”

“இன்றோடு நாலு வருஷங்களாகின்றன.”

“நாலு வருஷங்களா! அப்படி என்றால் எனக்குக் கல்யாணமானதிலிருந்தா!”

அவள் பதில் பேசவேயில்லை. சுழலும் செக்கிலே சிக்கிப் பிழியப்பட்ட எண்ணெயைப் போலான அவள் இதயத்திலிருந்து வியப்பு வெட்கம், வேதனை மூன்றும் தனித் தனியே வழிந்து ஒன்று கலந்து ஓட ஆரம்பித்தன. தலை குனிந்து உதட்டை இறுகக் கடித்துக் கொண்டாள்.

“என்ன, இன்று இப்படியெல்லாம் பேசுகிறோமே' என்று சத்தியன் மன

## யாரோ, இவர் யாரோ?



இவரைக் கண்டுபிடியுங்கள்!

சென்ற மாதம் “குண்டூசி”யில் இந்தப் பகுதியில் வெளிவந்த மேக்கப் படத்தில் உள்ளவர்—குமாரி என். ராஜம்.

மும் எண்ணிற்று. எச்சலைக் கூட்டி விழுங்கிக் கொண்டான். அவர்களுக்கிடையே நிலவிய மௌனம் ஒரு பெரிய அலை வட்டம் போல விரிந்தது. தம்மையே மறந்தவராய் இருவரும் வேறெதோ குரல் ஒன்றைக் கேட்பது போல் மெய்ம் மறந்து இருந்தார்கள்.

அந்தச் சமயத்தில்தான் டாக்டர் 'டக்டக்'கென உள்ளே ஓடி வந்தார். ''யாராவது ரத்த தானம் செய்யத் தயாராய் இருக்கிறீர்களா! லோசனை உயிரைக் காப்பாற்ற முயற்சிக்கிறேன்'' என்று அவசரப்பட்டார். ''இதோ, என் ரத்தத்தைக் கொடுக்கிறேன்'' என்று வெடுக்கென எழுந்தாள் சுமங்களா. ''அவள் எப்படியாகிலும் உடம்பு தேறி எழுந்து அவ் விருவரும் சந்தோஷமாய் வாழ்வதைக் காண்பதைவிட வேறு என்ன வேண்டும் எனக்கு. என் இலட்சியமும் அதுதானே!'' என்று சொல்லிக் கொண்டே டாக்டர் பின்னால் ஓடினாள்.

சத்தியனின் மூலாதாரத்தையே அசைத்து விட்டது சுமங்களாவின் அக் கடைசி வார்த்தைகள். அவளுடைய பவித்திரமான தியாக உணர்ச்சியை அறிய அவன் உடலே குலுங்கிற்று; அப்படியே நிலை குலைந்து போனான். 'ஆ! சுமங்களா!' என்று கத்தினான். உணர்ச்சி மேலீட்டால் அவன் பார்வை அப்படியே நின்று விட்டது. ஆனால் அவன் கண்ணில் பட்ட பொருள்களெல்லாம் சுற்றிச் சுழன்று வந்தன. மேஜை சுழன்றது. சாளரத்தின் வழியே தூரத்தே உயரமாய்த் தெரிந்த காவல் கோபுரங்கள் சுழன்றன. ஊடே மோகன கீத மிசைத்துக் கொண்டே லோசனை சுழன்றாள். நேர்த்தியான உடை உடுத்து அற்புதமான 'அலாரிப்புடன்' சுமங்களா சுழன்றாள். வானமும் பூமியுங்கூட சுழன்றன.

---

சத்தியன் தன் நினைவு பெற்று உள்ளே சென்று பார்த்தபொழுது சுமங்களாவின் இரத்தத்தை லோசனாவின் உடலில் புகுத்திக் கொண்டிருந்தார் டாக்டர். லோசனாவின் மங்கிய வதனம் இலேசாய்ச் சிறுகச் சிறுகப் பளிச்சிடுக் காட்டிற்று. ஏதோ பேசக்கூட முயன்றாள் அவள். சத்தியனுக்கு அளவில்லா ஆனந்தம். ஆனால், அணையும் ஜோதி சுடர் விட்டுப் பிரகாசிக்கும் என்பார்களே அது போலவே ஆயிற்று. எத்தனை சிரமப்பட்டும் பிரயோஜனம் ஒன்றுமில்லாமல், ஒரு நொடியில் தலையைச் சாய்த்துக் கொண்டு விட்டாள் லோசனா.

## 4

அதற்கு மறுநாளுக்கு மறுநாள் அதிகாலையில் வீணையும் கையுமாய் எங்கேயோ வெளி சென்ற சத்தியன் பிறகு திரும்பவேயில்லை. அவனை அந்த நேரத்தில் தடுத்து நிறுத்த அங்கு யார் இருந்தார்கள்!

சுமங்களா சோகமே உருவானாள். அரங்கேற்றத்திற்கப்புறம் அவளுடைய அதிமேலான நாட்டியத்தை யார் யாரோ வருந்திக் கேட்டனர். அறவே மறுத்து விட்டாள் சுமங்களா. "சத்தியன் பின்னணி கீதம் இல்லாமல் எனது நாட்டியம் இனி மேல் ஏது'' என்றாள். தன் சுக போக வாழ்க்கையை அறவே மறந்து, அந்த இளம் வயதிலேயே சந்நியாசினி வாழ்க்கை வாழ ஆரம்பித்தாள். சத்தியனைத் தேடாத இடமில்லை; விசாரிக்காத நாளில்லை. அவன் கிடைத்தால் தானே!

வெகுநாள் கழித்து சுமங்களா தன் பரிவாரங்களுடன் ஸ்தல யாத்திரை கிளம்பினாள். அங்கங்கே தெய்வ வழிபாடோடு, சத்தியனைப் பற்றியும் புலன் விசாரிக்கத் தவறவேயில்லை அவள். ஆனால், எந்தத் தகவலும் கிடைக்கவில்லையே!

கடைசியில் தில்லையம்பதி வந்து சேர்ந்தாள். கலையே தெய்வம் என்பதற்கு அறிகுறியாய் ஆனந்தத் தாண்டவகோலத்துடன் வீற்றிருந்த நடராஜப் பெருமானை தரிசித்ததும், அவள் உடலிலே ஒருவித உணர்ச்சி பிறந்தது.

உடனே சிவகங்கையில் நீராடி உடல் முழுவதும் புஷ்பாபரணம் பூண்டு காலில் சதங்கையுடன் சுவாமிக்கு நேரே நாட்டியமாட ஆரம்பித்து வட்டாள். இத்தனை காலமும் அவள் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த கலை உணர்ச்சியானது பொங்கிப் பெருகத் தொடங்கியது. தான் என்னும் உணர்ச்சியற்று கலை வடிவமாகவே மாறிவிட்டாள் சுமங்களா.

''வருகலாமோ ஐயா உந்தன்
அருகினில் நின்றுகொண்டு
ஆடவும் பாடவும்—வருகலாமோ''

என்று அபிநயம் பிடித்தாடினாள்.

அங்கிருந்த அனைவர் மனமும் அதில் குழைந்து நெளிந்தது; பரவசமுற்றார்கள். அப்பொழுது வீணையும் கையுமாய் எங்கிருந்தோ வந்து நுழைந்தான் சத்தியன்; அவனை யாருமே கவனிக்கவில்லை.

அந்த அபிநயம் முடிவடைந்த தருணத்தில் "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே" என்று கணீரென்று தானே பின்னணி கீதம் இசைக்க ஆரம்பித்து விட்டான் சத்தியன். சுமங்களா அதைக் கூட உணரவில்லை; பக்திப் பரவசமாய் ஆடினாள்.

பம்பரம் போல் சுழன்று சுழன்று ஆடி, உச்சநிலை யடைந்ததும் அப்படியே மயக்கமுற்று விழுந்து விட்டாள். சத்தியன் உடனே அருகில் ஓடி, அப்படியே அவளைத் தாங்கிக் கொண்டான். ஜனங்கள் பரபரப்புற்றார்கள். அதற்குள் சுவாமிக்கு ஆராதனை செய்து திருநீறு பிரசாதமும் வந்தது.

சிறிது நாழி சென்று கண்விழித்த சுமங்களா, அருகில் சத்தியனைக் கண்டு "ஆ! நீங்களா!" என்று எழுந்தாள். அந்நொடியில் இருவர் கண்களும் சந்தித்தன. இத்தனை வருஷங்களாகப் பேசாதிருந்த பேச்சுகளனைத்தையும் பேசிக் கொண்டன? அழகிற்கு அறிவு வயப்பட்டு விட்டது. பிறகு அவ்விருவரது வாழ்க்கையும் ஒரே கதியில் செல்லக் கேட்பானேன்!


உடனே அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துவிட்டு, இருவரும் பகவன் நாமத்தைப் பாடிக்கொண்டே வெளியே நடக்க ஆரம்பித்தார்கள். அனைவர் கண்களிலும் நீர் வழிய அப்படியே கட்டுண்டு கிடந்தார்கள்.

ஆண்டவன் பெருமையைப் பாடிக் கொண்டே நெடுக நடந்த சுமங்களாவும் சத்தியனும் அடிவானத்திற்கப்பால் மறைந்து போயினர்.

---

**பாரதி**

தமிழ் எழுத்தாளர் சங்கத்தாரால் வெளியிடப்படும் பத்திரிகை இது. வெ. சாமிநாத சர்மா இதன் ஆசிரியர். தனிப் பிரதி விலை இரண்டணா. வருஷ சந்தா ஒரு ரூபாய். காரியதரிசி, சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை-2. என்ற விலாஸத்தில் கிடைக்கும்.


# போனிக்ஸ் விசிறிகள்

புது ரகங்கள்:

**ஸீலிங், டேபிள், கேபின் எக்ஸாஸ்ட், பெடஸ்டல்**

EWI LTD

**RM.S. & CO., LTD.**

6. BROADWAY.....MADRAS-1

பிராஞ்சு:

5, மேல கோபுரவாசல், மதுரை

# "பணம் படுத்தும் பாடு"

## ஓர் உயர்ந்த ஹாஸ்ய விருந்து

நாள் முழுவதும் உழைத்து அலுத்து, பல கவலைகளிலும் உழன்று மாலையில் மனதுக்கு ஆறுதல்பெற படம் பார்க்கப் போகிறவர்களே பெரும்பாலோர். அத்தகையவர்கள் போன இடத்திலும் அநேகமாக சோக சித்திரங்களையே பார்க்க நேருகிறது—என்ற குற்றச்சாட்டு நம் தமிழ்ப் படங்களுக்குப் பொதுவாக உண்டு. ஆனால், "பணம் படுத்தும் பாடு" படத்தில் அந்தக் குறையின்றி முழுக்க முழுக்க, வேறு ரஸங்களுக்கு இடமின்றி ஹாஸ்யமே பரிபூரணமாக நிரம்பி, கவலையை மறந்து, சூழ்நிலையை மறந்து வாயவிட்டுச் சிரிக்கத் தூண்டுகிறது.

பணத்தை வேண்டாம் வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளுகிறான் ஒருவன். ஆனால் அது ஒன்றுக்கு இரண்டாக அவனிடமே திரும்ப வந்து அவனைப் படாத பாடு படுத்துகிறது. இதுதான் படத்தின் முக்கிய கருத்து. ஹாஸ்யக் கதைக்கு ஏற்ற முறையில் வசனங்களும் மிகவும் தமாஷாகவே எழுதப்பட்டிருக்கின்றன.

நடிப்பு என்று எடுத்துக் கொள்ளும் போது கே. ஏ. தங்கவேலுவின் உயர்ந்த ஹாஸ்ய நடிப்பைப்பற்றி 'சிறப்பாக இருக்கிறது' என்று சொன்னால் போதாது. அபாரம், அபாரம் அவரது நடிப்பு. பட ஆரம்ப முதல் இறுதி வரை இவர் தமது நடிப்பினாலும் பேச்சினாலும் ரஸிகர்களை ஒவ்வொரு கட்டத்திலும் விழுந்து விழுந்து நகைக்க வைக்கிறார். 'டோண்ட ஒரி' என்ற வார்த்தையை இவர் அடிக்கடி உபயோகிக்கிறாரென்றாலும் ஒவ்வொரு கட்டத்திலும் அதை ஒரு தனுசாகப் பிரயோகித்தது "அடிக்கடி உபயோகிப்பது பற்றி டோண்ட் ஒரி" என்று சொல்லவே வைக்கிறது. கதாநாயகன் சேகராக என். டி. ராமராவ் நடிப்பு நன்றாகவே இருக்கிறது. ஆனால், அவரை அவ்வளவு அசடாக சித்தரித்திருக்க வேண்டியதில்லை. ஒரு சைத்திரிகன் ஏழையாக இருக்கலாம்; கோழையாகவும் இருக்கலாம். ஆனால், அசடாக இருக்க வேண்டியதில்லையே! லாண்டரிக்காரனாக சில நிமிஷங்களே வருகிறார் டி. ஆர். கண்ணன்; என்றாலும் அவரது பாகத்தை ரஸிகர்கள் மறக்க முடியாதபடி நடித்திருக்கிறார். செறுகளத்தூர் சாமா தமக்குப் பொருத்தமான ஜமீன்தார் பாகத்தில் உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார்.

ஜமீன்தார் மகளாகவரும் "சௌகார்" ஜானகி தமது பாத்திரத்தை குற்றமற்ற முறையில் நடித்திருக்கிறார். அவளது தோழி ரோஹிணியாக ஜமுனா குறை கூற முடியாத முறையில் நடித்திருக்கிறார். முன் பகுதியை விடப் பின் பகுதிகளில் தான் இவரது நடிப்புத் திறமை வெளிப்படுகிறது. வீட்டுக்காரியாக வரும் அம்புஜம் வெளுத்துக் கட்டியிருக்கிறார். தமது இயற்கையான நடிப்பாலும் வெடுக் வெடுக் என்ற பேச்சினாலும், பட உலகில் இம்மாதிரிப் பாத்திரங்களுக்குத் தம்மைப் பட முதலாளிகள் இனி மேல் தேடி வரும்படி நடித்திருக்கிறார்.

பாட்டுகளில் "வாடுகின்ற ஏழை பாடல்" என்ற பாட்டு இனிமையாக இருக்கிறது. மற்றவை பாதகமில்லை. சங்கீத டைரெக்டர் டி. ஏ. கல்யாணம் பின்னணியில் வாத்திய இசைகளைப் பொருத்தமாக அமைத்திருக்கிறார். காட்சிஜோடனை, ஒலி—ஒளிப் பதிவுகள் பாதகமில்லை.

ஒய். ஆர். ஸ்வாமி படத்தைத் திறமையாக டைரெக்ட் செய்திருக்கிறார். சேகர் தூங்கும் போது 'பணம்' வந்து குவிவதாகக் காணும் சொப்பனக் காட்சி—குடிக்கும் தண்ணீர்கூடப் பணமாக மாறுவது போன்றவையும், சேகர், தன் காதலியை நினைத்து வருந்தும் சமயம் அவனது கையிலிருக்கும் சித்திரப் பலகையில் கடந்துபோன பழைய சம்பவங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் காட்டிருப்பதையும் டைரெக்டர்ன் திறமைக்கு எடுத்துக் காட்டுகளாகக் குறிப்பிடலாம். நாய்கள் விரட்டி சேகரின் நிஜாரை இழுத்துவிடும் காட்சியை ஒரே ஒரு முறை காட்டியிருந்தாலே போதும். டல கட்டங்களில் கத்தரிக்கோலைப் போட்டு நீளத்தைக் குறைத்து விறு விறுப்பாக்கியிருக்கலாம்.

மொத்தத்தில் "பணம் படுத்தும் பாடு" தங்கவேலுவின் தமாஷான நடிப்புப் பரிமளிக்கும் ஓர் உயர்ந்த ஹாஸ்ய விருந்தாக அமைந்திருக்கிறது.

—"ஜாம்பவான்."

# பிரதிபலன்

[34-ம் பக்கத் தொடர்ச்சி]

"சாந்தா, எனக்காக ஒன்று செய்யேன்!" என்றாள்.

"என்னம்மா!"

"உன் வாத்தியார் நட்டுவனாரிடம் சொல்லி, இந்தப் பட முதலாளியிடம் ஏதாவது 'சான்ஸு'க்கு பார்க்கச் சொல்றது தானே!"

சாந்தா தேவியின் மனதில் ஒரு சபலம். எழுந்து போய் கண்ணாடி முன் நின்று தன்னை ஒரு தரம் பார்த்துக் கொண்டாள். இளமை விடை பெற்றுக் கொள்ளும் போல் இருந்தது. ஆனால், அவள் அழகு குறைந்து விடவில்லை. நன்றாக மேக்கப் செய்து நிறுத்தினால் அவள் அழகுக்கு அவள்தான் இணை.

தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டாள் அவள். 'அவரிட்ம் போகச் சொன்னால் என்ன!' என்று தாயார் சொல்லிய யோசனை அவளுக்கு திருப்திகரமாகப் பட்டது. நல்லவேளை அந்த நட்டுவனாராவது இன்னும் பழைய உறவோடு இருக்கிறாரே! அதுவரை சந்தோஷந்தான்.

நட்டுவனாரிடம் இந்த விஷயத்தைக் கூறியபோது அவர் அவ்வளவாக நம்பிக்கையைத் தெரிவிக்கவில்லை. "இருந்தாலும் பார்க்கிறேன்... புது ஆள் அல்லவா!" என்று சொல்லி விட்டுப் போனார். சாந்தாவுக்கு மனதில் நம்பிக்கை வைக்கத் திறனில்லை. நட்டுவனாரே இவ்வாறு சொல்லிவிட்ட பிறகு!

ஆனால்... யாரும் எதிர்பார்க்காத வகையில் நட்டுவனார், பட முதலாளியோடு காரில் திரும்பி வந்தார். சாந்தாவும், அவள் அம்மாவும் ஆச்சர்யத்தினால் கைகால் ஓடாமல் நின்று விட்டார்கள்.

சாந்தா பட முதலாளியை ஏறிட்டுப் பார்த்தாள், அதே மனிதர்தான். அவள் உள்ளத்தில் புயலைக் கிளப்பிவிட்ட அதே உருவம்தான்.

"வாருங்கள்... உட்காருங்கள்!" குரலில் ஏற்பட்ட நடுக்கம் வெளியில் தெரியக் கூடாதென்று நினைத்தாள் அவள்.

முதலில் பேச்சை ஆரம்பித்தது விஸ்வநாதன்தான். அதுதான் வந்த பட முதலாளியின் பெயர்.

"என்னை உங்களுக்கு ஞாபகமிருக்குமென நினைக்கிறேன்!" என்றார் அவர்.

"எங்கோ பார்த்த ஞாபகம்... ஆனால் எங்கே, எப்போது பார்த்தோம் என்றுதான் நினைவில்லை" என்றாள் சாந்தா.

"உங்களுக்கு ஞாபகமிருக்க நியாயமில்லை. ஆனால் நான் உங்களை மறந்துவிட முடியுமா!"—அவர் சிரித்தார். அது சாந்தாவுக்குப் பிடித்திருந்தது

"நினைவுக்கு எதுவும் வரவில்லையே!" என்றாள் சாந்தா.

"பரவாயில்லை, நான் சொல்கிறேன். நான் ஒரு எழுத்தாளன் எவ்வித முன்னேற்றமும் காண முடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். என் கையில் ஒரு நல்ல கதை இருந்தது. சரியான சிபாரிசு இல்லாததால் அது விலை போகவில்லை. நீங்கள் மிகவும் தாராள மனதுடையவர் என்று பலர் சொல்லக் கேட்டு உங்களிடம் சிபாரிசுக்கு வந்தேன். எனக்கு மனதுள் சந்தேகந்தான். முன்பின் தெரியாத நான், உங்களிடம் எந்த விதமான ஆதாரத்தோடு அணுக முடியும். இருந்தாலும் மனதில் தைரியம், வந்தேன். நீங்கள் என்னை அன்புடன் வரவேற்று உபசரித்து... கதையைப் படித்தீர்கள்... "சிபாரிசு செய்கிறேன்" என்று சொன்னீர்கள். அப்போதே நீங்கள் உதவுவீர்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. அதைப் போலவே நீங்கள் சொன்னதன் பேரில் ஒரு கம்பெனியின் முதலாளி பணம் கொடுத்து என் கதையை வாங்கிக் கொண்டார். அந்தக் கதையை சரியாக எடுக்காத காரணத்தினால் படம் தோல்வியடைந்தது. எனக்கு ஏதோ பெயர் வந்தது. வடநாட்டிற்குப் போய் முயற்சி செய்வோமென்று அங்கே போனேன். பலன் கிடைத்தது. எனது கதைகள் நல்ல விலைக்குப் போயின. கையில் கொஞ்சம் பணம் சேரவே இங்கு திரும்பி வந்து விட்டேன். எனது திறமையை எல்லாம் ஒருங்கே திரட்டி ஒரு கதையை சமீபத்தில் எழுதி முடித்தேன். அதை நானே படமாக்க விரும்புகிறேன். அதற்குத்தான் நக்ஷத்திர வேட்டை..." என்று நிறுத்தினார் விஸ்வநாதன்.

"அப்பாடா, இப்போதுதான் ஞாபகம் வந்தது!" என்றாள் சாந்தா. அவள் மனக்கண்முன் அந்தச் சம்பவம், ஒரு விநாடி தோன்றி மறைந்தது. ஆம்! அப்போதே விஸ்வநாதனை அவளுக்குப் பிடித்திருந்தது. ஏன் இப்போது மட்டு

மென்ன! அவர் என்ன நினைப்பாரோ...! பேசாமல் இருந்தால்! ஏதாவது பேச வேண்டுமே!

"உங்கள் பணத்திற்கு வேறு உபயோகமில்லையா?" என்றாள் சாந்தா!

"உங்கள் எண்ணம் எனக்குப் புரிந்தது. இதனால் நான் நஷ்டமடைய மாட்டேன் என்ற நம்பிக்கை!"

"உங்கள் இஷ்டம்!"

இதற்குள் நட்டுவனார் குறுக்கிட்டார்.

"நம்ம சாந்தாவுக்கு உங்க படத்திலே ஏதாவது சான்ஸ் கொடுத்தா தேவலே!"

"என் படத்தில் ஹீரோயின் அவங்க தானே!" என்றார் விஸ்வநாதன்.

சாந்தா தேவிக்கு உள்ளூர சந்தோஷம் தான். இருந்தாலும் அவள் சொன்னாள்:

"என் நிலைமையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்!'

"நான் தமிழ் நாட்டில் இல்லாதிருந்தாலும், உங்களைப் பற்றிய ஒவ்வொரு செய்தியையும் தெரிந்து கொண்டுதான் இருந்தேன். ஏனெனில், உங்களால் தானே நான் முன்னுக்கு வந்தது. ஆவுடையாபிள்ளை என்ன ஆனார் தெரியுமா!"

"என்ன ஆயிட்டான்!" அம்புஜம்மாள் கேட்டாள் இப்படி.

"பழையபடி கிராமத்துக்குப் போய் விட்டார். எடுத்ததெல்லாம் தோல்வி... என்ன செய்ய முடியும் இங்கிருந்து கொண்டு!"

"என் வாழ்வின் முன்னேற்றம் அவரால்தான் தடைப்பட்டது!" என்றாள் சாந்தா.

"போனால் போகிறான்...உங்கள் மாதிரியே எல்லா நக்ஷத்திரங்களும் இருந்து விட்டால் இம்மாதிரி ஆட்களுக்கு வேலையிருக்காது" என்றார் விஸ்வநாதன.

அதற்குள் சமையல்காரி காப்பி கொண்டு வரவே எல்லோரும் சாப்பிட்டனர்.

சாப்பிட்டவுடன் விஸ்வநாதன் எழுந்து விட்டார். "நாளைக்கு வந்து 'காண்ட்ராக்ட்' விஷயமாகப் பேசிக்கொள்ளுகிறேன்." என்று போய் விட்டார்.

## 4

"திருமணம்!" என்ற யோசனை இப்போது அவள் மனதில் புகுந்து கொண்டு குடையத் தொடங்கியது. படத்தில் நடிக்க வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையெல்லாம் இப்போது அவள் மனதில் இருக்கவில்லை.

விஸ்வநாதன், அவளுக்கு ஆதர்ச கணவனாகத் தெரிந்தார். எவ்வளவோ பேர் அவளுடன் பழகி இருப்பார்கள்...ஆனால் அவள் உள்ளம் இவரைத்தானே தேர்ந்தெடுத்திருக்கிறது. ஒரு சில மணி நேரப் பழக்கந்தான். இருந்தாலும் அது பலமான அஸ்திவாரமாக அல்லவா அமைந்து விட்டது.

அம்புஜம்மாளிடம் இதைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியுமா!

"நல்ல பையன் போலத்தான் தோணுது...நம்ம வாத்தியாரய்யாவைப் போய் பேசச் சொல்லு. மேலே கவனிச்சுக்கிறேன்!" என்று ஆசீர்வாதம் செய்தாள் அவள். பிறகு கேட்க வேண்டுமா!

நட்டுவனார் தூது போனார். எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லச் சொன்னார்கள். அவருக்குத் தெரியாதா என்ன!

ஆண்களை நெருங்க வொட்டாமல் விரட்டியடித்த சாந்தா அல்லவா கல்யாணம் பேசச் சொல்கிறாள்! அது வேறு அவருக்கு ஊக்கமளித்தது.

வெற்றியுடன் திரும்பினார். கையிலிருந்த கடிதத்தை சாந்தாவிடம் கொடுத்தார்.

"அன்புள்ள சாந்தாவிற்கு...

என் மனதிலுள்ள எண்ணமும் அதுதான். எனக்கு உதவியதற்கு பிரதிபலன் வேண்டாமா!......நேரில் வருகிறேன், எல்லாம் பேச!

இப்படிக்கு,
விஸ்வம்."

அது போதும் அவர்களுக்கு. ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்தார்கள் அம்மாளும், மகளும். இரண்டு தினங்கள் ஓடிவிட்டன. விஸ்வத்தைக் காணவில்லை. மூன்றாம் நாள் ஒரு ஆள் வந்தான் சாந்தாவிடம்.

"கார் விபத்து ஏற்பட்டு, விஸ்வம் காயமடைந்தார். ஆஸ்பத்திரியில் இருக்கிறார். உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்" என்று துக்கச் செய்தியைச் சொல்லிவிட்டுப் போனான் அவன்.

பதறிப் போய் ஆஸ்பத்திரிக்கு ஓடினாள் சாந்தா! விஸ்வநாதன் சவம் போலக்கிடந்தார். 'விஸ்வநாதன் பிழைக்கமாட்டார்' என்று டாக்டர் சொன்னார்!

சாந்தாவிடம் அவர் கடைசியாக பேசக் கூட இல்லை. உயிர் போய்விட்டது. தன் கணவன் போய்விட்டது போல அழுதாள் சாந்தா!

பிரயோஜனம்...!

விஸ்வநாதனின் சொத்துகள் சாந்தாவுக்கு சேர்ந்து விட்டது. அவரது மரண வாக்குமூலத்தின்படி.

அதுதான் அவர் செய்த பிரதிபலன்!

சினிமாவைப் பற்றியும்...திருமணத்தைப் பற்றியும் சாந்தா பிறகு நினைக்கவேயில்லை. அவள் ஆசைகள் விஸ்வநாதனுடனேயே புதைந்து விட்டன.

---

## வாஸனுக்கு தஞ்சையில் வரவேற்பு

''ஔவையார்'' படத்தை வெற்றிகரமாக எடுத்துத் தமிழகத்திற்குச் சிறந்த தொண்டாற்றியுள்ள தஞ்சை ஜில்லாவில் பிறந்த எஸ். எஸ். வாஸன் சேவையைப் பாராட்ட, தஞ்சை ஞானம் டாக்கீஸில் சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் குழுமி யிருந்தனர். தஞ்சை ஜில்லாவின் எல்லா தாலூகாக்களிலு மிருந்து பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். பாராட்டுவிழாக் கமிட்டியின் சார்பில், வடபாதி மங்கலம் எஸ். தியாகராஜ முதலியார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார், எ. ஒய். எஸ். பரிசுத்த நாடார் அனைவருக்கும் மாலை சூட்டினார். தருமை ஆதீனத்தின் ஆசிச் செய்தியை மேற்படி ஆதீனப் பல்கலைக் கல்லூரி துணைத் தலைவர் ச. தண்டபாணி தேசிகர் படித்தார். சுமார் 400, 500 வாழ்த்துக்கள் வந்திருந்தன. தங்க முலாம் பூசிய வெள்ளி ஏடுகளில் எழுதப்பட்ட ஒரு வாழ்த்துப் பத்திரத்தை தியாகராஜ முதலியார் வாசித்தளித்தார். நிதி மந்திரி சுப்பிரமணியம் பாராட்டு விழாக் கமிட்டியின் சார்பில் வேலைப்பாடும், கருத்தும் நிறைந்த ஞாபகச் சின்னம் ஒன்றை வாஸனிடம் வழங்கினார். எஸ். எஸ். வாஸன் பதில் கூறுகையில் தமக்களிக்கப்பட்ட பாராட்டு 'ஔவை' படத்திற்கும் அதற்கு உதவியவர்களுக்கும், குறிப்பாக ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளுக்கும் உரியதாகும் என்றார்.


உங்கள் குடும்பங்களுக்கு
தேவையான

# ஏவர்சில்வர்

அலுமினியம், பித்தளை
பாத்திரங்களுக்கு




M. A. எத்திராஜுலு
நாயுடு

7/4, ஈவினிங் பஜார் ரோடு,
சென்னை—3

# பிரம்ம லோகம்

ஏவி. எம்மின் ''பெண்'' ரூபாயில் பதினைந்தணு அளவு படமாகிவிட்டது. படப் பிடிப்பு இம்மாத மத்திக்குள் முடிவடைந்து விடுமென்றாலும் படம் அடுத்த மாத மத்தியிலேயே திரைக்கு வருமெனத் தெரிகிறது. மாஜி மிலிட்டரி ஆபீஸர் அவர் மனைவி இருவர் சம்பந்தப்பட்ட காக்ஷி ஒன்று சென்ற மாத இறுதியில் படமாகியது. ஆபீஸராக ஆர். பாலசுப்பிரமணியமும் அவரது மனைவியாக கே. ஆர். செல்லமும் நடித்தார்கள் வைஜயந்தி, அஞ்சலி, கே. என். கமலம், நாகய்யா, கணேஷ், கே. சாரங்கபாணி, பாலச்சந்தர், பி. டி. சம்பந்தம் ஆகியோர் நடித்து வருகின்றனர். தண்டாயுதபாணி பிள்ளை இப் படத்திற்கெனக் கவர்ச்சிகரமான சில நடனங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறார். ரா. வே.யின் கதையான ''பெண்''ணுக்கு அவரே வசனங்களை எழுதியிருக்கிறார். டைரெக்டர் எம். வி. ராமன் இரவும் பகலும் இப் படத்தின் வளர்ச்சியில் மிக்க அக்கறை காட்டி வருகிறார்.

### அறிஞன்

சியாமளா ஸ்டுடியோவில் ஓசைப்படாமல் உருவாக ஆரம்பித்திருக்கிறது ''அறிஞன்'' என்ற தமிழ்ப் படம். செறுகளத்தூர் சாமா, கண்ணப்பா, டி. கே. ராமச்சந்திரன், வி. கே. சரஸ்வதி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர் இப் படத்தில். படத்தை டி. ஆர். கோபு டைரெக்ட் செய்து வருகிறார்.

### ஜோதி

நவயுகா பிக்சர்ஸாரின் ''ஜோதி''யின் படப் பிடிப்பு வாஹினி ஸ்டுடியோவில் முடிவடையும் நிலையில் இருக்கிறது. இது தெலுங்கிலும் தமிழிலும் தயாராகி வரும் படம். காமிராமென் ஸ்ரீதர் தான் படத்தின் டைரெக்டர். ஜி. வரலக்ஷ்மி, காஸ்யப், ஸ்ரீராமமூர்த்தி ஆகியோர் படத்தின் முக்கிய நடிக நடிகைகள்.

### ஆவதும் பெண்ணாலே!

நியூடோன் ஸ்டுடியோவில் ''ஆவதும் பெண்ணாலே'' என்ற ஒரு தமிழ்ப் படம் அதிகமான படாடோபமின்றிப் படமாகி வருகிறது. இது விக்டரி பிக்சர்ஸின் தயாரிப்பாகும். இப் படத்திற்கான வசனம், பாட்டு இவைகளை ''சுரபி'' எழுதியிருக்கிறாராம். வி. நாகய்யா, நம்பியார், கே. ராமசாமி, (பிரண்ட்) கிருஷ்ணகுமாரி, ரேவதி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இப் படம் எம். ஆர். விட்டல், டி. பி. சுந்தரம் கூட்டு டைரெக்ஷனில் உருப் பெற்று வருகிறது.

### நாஸ்திகம்

பம்பாயில் தயாராகி வரும் — தமிழாக்கப்பட்டு வரும்—மற்றொரு தமிழ்ப் படம் ''நாஸ்திகம்'' என்பதாகும். பில்ம்ஸ்தான் ஸ்டுடியோஸாரது இப் படம் நாஸ்திகனை ஒருவன் ஆஸ்திகனை மாறுவதைச் சித்தரிக்கும் முறையில் இருக்குமெனத் தெரிகிறது. தமிழ் வசனங்களை கு. மா. பாலசுப்ரமண்யம் என்பவர் எழுதியிருக்கிறார். தமிழ் வசனங்களைப் பேச, சென்னையிலிருந்து பல நடிகர், நடிகைகள் பம்பாய் சென்று தமிழ் பேசி வருகின்றனர். திருச்சி லோகநாதன் இப் படத்தின் பின்னணிப் பாட்டுகளைப் பாடியிருக்கிறாராம்.

### கனவு

சீக்கிரமே திரைக்கு வரக் கூடிய படங்களில் ''கனவு''ம் ஒன்றாக இருக்கும். இப்படத்தின் படப் பிடிப்பு இப்பொழுது ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் வெகு மும்முரமாக நடைபெற்று வருகிறது. லலிதா இப் படத்தில் ஒரு சோக பாத்திரத்தில் தோன்றி நடிக்கிறாராம். மற்றும் வி. கே. ராமசாமி, விசா, செல்லம், பொள்ளாச்சி கமலா, காரைக்குடி லக்ஷ்மி, சாந்த என்ற புது முகம் ஆகியோர் நடித்து வருகின்றனர். படத்தை பி. வி. கிருஷ்ணய்யர் டைரெக்ட் செய்து வருகிறார்.

### வெறும் பேச்சல்ல

ஜெப்டியூன் ஸ்டுடியோவில் ஒரு படத்தைத் தயாரித்து வரும் பிரின்ஸிபல் பிக்சர்ஸார் அப்படத்திற்கு ''வெறும் பேச்சல்ல'' என்று நூதனமாகப் பெயரிட்டிருக்கிறார்கள். இரு அழகிகளை ஒரு மலைக்குகையில் கொண்டு வந்து அடைத்து விட்டுக் கொக்



துரிதமாக முடிவடைந்து வரும் "சொர்க்க வாசல்" தமிழ்ப் படத்தில் கே. ஆர். ராமசாமியும், பத்மினியும் முக்கிய கட்டத்தில் இவ்விதம் காட்சியளிக்கின்றனர்.

கரிக்கிறான் ஒரு துஷ்டன். அங்கு வந்து அவனுடன் வாள் போர் புரிந்து அழகிகளை மீட்கிறான் கதாநாயகன். இந்த கட்டம் சென்ற மாதம் நல்ல முறையில் இப் படத்திற்கென சுடப்பட்டது. துஷ்டனாக பாலய்யாவும், இரு அழகிகளாக எஸ். வரலட்சுமியும் பத்மினியும், கதாநாயகனாக ரஞ்சனும் நடித்தார்கள் அக்காட்சியில். இவர்கள் தவிர, ஸ்டன்ட் சோமு, வஹாப் காஷ்மீரி, ஹேமலதா ஆகியோரும் இப்படத்தில் நடிக்கின்றனர். வெகு காலத்திற்குப் பின் யூ. ஆர். ஜீவரத்தினத்தின் குரலை இப்படத்தில் கேட்கலாம். இந்தப் படத்தை ஜோஸப் பள்ளிப்பாட் டைரெக்ட் செய்து வருகிறார் நெப்டியூனில்.

## கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

ஏப்ரல் மாதத்தில் ரஸிகர்களை மகிழ்விக்க வரும் படங்களில் பத்மினி பிக்சர்ஸின் "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" நிச்சயம் ஒன்றாக இருக்கும். பிரம்மச்சாரி ஆசிரமத்தைக் கடைப்பிடிக்க விரும்பும் ஒரு வாலிபன் இறுதியில் என்ன ஆகிறான் என்பதை விளக்கும் கதையைக் கொண்ட இப்படம் ஒரே சிரிப்பு மயமாக இருக்குமாம் சிவாஜி கணேசன் இப் படத்தில் முற்றிலும் புது மாதிரியான ஒரு பாகத்தில் நடித்து வருகிறார். அவருடைய கூட்டாளியாக டி. ஆர். ராமச்சந்திரன் வருகிறார். மற்றும் பத்மினி, ராகினி, பி. ஆர். பந்துலு, தனம்—சுசீலா சகோதரிகள் ஆகியோர் படத்தில் நடித்து வருகின்றனர். மதராஸ் பிக்சர்ஸின் வெளியீடான இப் படத்தை ப. நீலகண்டன் டைரெக்ட் செய்கிறார்.

## நண்பன்

தந்தைக்கும் மகனுக்கும் வேம்பாகி விட்டது. மகனிடம் சொத்து முழுவதையும் எழுதி வாங்கிக் கொண்டு, மகனை வீட்டை விட்டு விரட்டுகிறார் தந்தை. இந்தக் காட்சி சென்ற மாதம் படமாகியது, ரோஹிணிஸ்டுடியோவிலே உருப் பெற்றுவரும் "நண்பன்" படத்திற்காக. மகனாக மனோஹரும், தந்தையாக வி. நாகய்யாவும் நடித்தனர். மற்றும் டி. எஸ். பாலய்யா, புளி

மூட்டை, பிரண்ட் ராமசாமி ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். எம். டி. வி. புரொடக்ஷன்ஸின் இத்தயாரிப்பை பழைய கால நடிகரான பி. எஸ். ஸ்ரீனிவாஸ ராவ் டைரெகட் செய்து வருகிறார்.

### இல்லற ஜோதி

இம் மாதம் திரைக்கு வரக்கூடிய படங்களில் மாடர்ன் தியேட்டர்ஸின் "இல்லற ஜோதி" ஒன்றாக இருக்கும். சிவாஜி கணேசன் சிவாஜியாக நடித்ததைப் பார்க்காத பல ரஸிகர்களின் குறையும் இப்படத்தின் மூலம் நீங்கிவிடும். இப்படத்தில், சிவாஜி நாடகம் ஒன்று வருகிறது. கணேசனே அதில் சிவாஜியாக வருகிறார். சிவாஜி கணேசன், பத்மினி, ஸ்ரீரஞ்சனி, தங்கவேலு ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கும் இப்படத்தை டி. ஆர். சுந்தரம் டைரெக்ட் செய்து வருகிறார். 'வள்ளுவர் காட்டிய வழியே சிறந்த வழி' என்பதை வலியுறுத்துவதே படக் கதையின் கருத்தாக இருக்கும். இப்படத்தின் சென்னை, செங்கல்பட்டு, சித்தூர் விநியோக உரிமைகளை பெல் பிக்சர்ஸார் பெற்றிருக்கின்றனர்.

### குடும்பம்

ஜம்பனா—நந்தி புரொடக்ஷன்ஸின் கூட்டுத் தயாரிப்பான "குடும்பம்" தற்போது வாஹினி ஸ்டுடியோவுக்கு மாறியிருக்கிறது. எளிய உடையுடன் சர்க்காவில் ஜி. வரலக்ஷ்மி நூல் நூற்கும் காட்சி ஒன்று இப்படத்திற்கென சமீபத்தில் காமிராவுக்குள் புகுந்தது. ஜி. வரலக்ஷ்மி, ஸ்ரீராம், சாவித்திரி, டி. கே. ராமச்சந்திரன் ஆகியோர் "குடும்ப"த்தின் முக்கியமான நடிகர்கள்.

### நம் குழந்தை

விண்ட்ஸர் புரொடக்ஷன்ஸின் "நம் குழந்தை" நாளொரு காட்சியும், பொழுதொரு ரீலுமாக வளர்ந்து வருகிறது, வாஹினி ஸ்டுடியோவில். "நால்வர்" நாகராஜன் இப் படத்தில் வக்கீலாக வருகிறார். லக்ஷ்மி என்ற புதுமுகம் இப் படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார். மனோஹர், நாகய்யா, எஸ். வரலக்ஷ்மி, குமாரி என். ராஜம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். படத்தை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ட் செய்கிறார்.



"பெண்" படத்திற்காக வைஜயந்திமாலா ஆடும்பொழுது ஏதோ பெரிய தமாஷில் ஈடுபட்டிருக்கின்றனர்—டைரெக்டர் எம். வி. ராமன் உள்ளிட்ட தயாரிப்பாளர்கள்.

# சினிமா—ஒரு கலையா? தொழிலா?

## மு. புரட்சிப்பித்தன்

சினிமா ஒரு 'கலையா'! அல்லது 'தொழிலா'! இன்றைய தமிழ்ப்பட உலகின் போக்கை எண்ணிப் பார்க்கும் எவரும் இந்தக் கேள்வியை எழுப்பியே ஆகவேண்டும். நம் படங்களைத் தொடர்ந்து கருத்தூன்றி கவனித்து வருவோர், இன்றைய நிலைமையில் 'சினிமாவை தூய கலை என்று அழைப்பது தவறு, என்ற முடிவுக்குத்தான் வருவார்கள். அதை ஒரு தொழில் என்று குறிப்பிடுவதே மிகப் பொருத்தமாக இருக்கும். ஆம்! உலகிலுள்ள மற்ற தொழில்களைப் போலவே சினிமாவும் பணம் திரட்டும் ஒரே நோக்கத்திற்காக பயன்படுத்தப் பட்டு வருவதால், இக்கலை வீதிகளிலே விலை கூறப்படும் விற்பனைப் பொருளின் நிலைமைக்கு வந்து விட்டது! ஏனெனில் எந்தப் பட முதலாளியும் மக்கள் நலனில் நல்லெண்ணம் கொண்டு, அல்லது நாட்டுப் பெருமையை உணர்த்தும் உயரிய இலட்சியச் சித்திரங்கள் உருவாக்க வேண்டும் என்ற தூய எண்ணத்துடன் படத் தயாரிப்பில்ஈடுபடுவதில்லை. சினிமா மூலம் எந்த அளவுக்கு செல்வம் சேர்க்கமுடியும் என்பதைப்பற்றித்தான் அவர்கள் சிந்தனை சுழலுகிறதே தவிர, சிறந்த படம் உருவாக்குவதைப்பற்றி அல்ல. பணப் பெட்டியை நிரப்பும் படங்கள் தயாரிப்பதெப்படி என்பது குறித்துதான் அவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார்களே யன்றி, கலை வளர்ச்சியைப் பற்றி கடுகளவு கூட கவலைப்படுவதேயில்லை. இவ்வாறு தமிழ்ப் படங்களும், அவற்றைத் தயாரிப்போரும் தாழ்ந்த நிலைக்கு வந்ததேன்!

பெரும் ஜனத்திரளுக்கிடையே இடைவிடாத ரஸிகர்களின் ஏகோபித்த ஆதரவுடன் வாரக் கணக்கில் தொடர்ந்து தமிழ்ப் படங்கள் வெற்றி முழக்கமிட்ட காலம் மாறிவிட்டது. வெள்ளி விழாக்கள், வைர விழாக்கள் பல கொண்டாடி, பணப் பெட்டி நிரம்புவதைப் பார்த்து பட முதலாளிகள் பூரித்து நின்ற நிலைமை அடியோடு அழிந்துபோய், போட்ட மூலதனமாவது திரும்ப வந்து சேருமா என அச்சப்படும் அளவுக்கு மோசமான கட்டத்தை அடைந்து விட்டது நமது தமிழ்ப் பட உலகம்.

அன்னிய நாட்டில் தயாரிக்கபபட்டு இங்கு வெளியிடப்படும் ஆங்கிலப் படங்களைப்போல 'நாள் கணக்கில்' தான் நமது படங்களும் நடைபெறுகின்றன. ஏன் இந்த இழி நிலை! இத்தகைய அவல நிலைக்கு யார் காரணம்! வெளியிடப்படும் படங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தோல்விப் படு குழியில் சமாதி அடைவது ஏன்! என்பதைச் சிந்தித்து குறைபாடுகளை நீக்க முயல வேண்டும். பட முதலாளிகள் இதைவிட்டு, தம்மை 'பொருளாதார மேதைகள்' என நினைத்துக் கொண்டு, 'படங்களின் தோல்விக்குக் காரணம் நாட்டில் நிலவும் பொருளாதார மந்தம் தான் என' குருட்டு விளக்கம் கொடுக்கின்றனர் சில பட முதலாளிகள். தமிழ்ப் படங்களுக்குப் போதிய ஆதரவு கிடைக்காததற்குக் காரணம் உண்மையிலேயே பொருளாதார மந்தமா! அல்லது அவர்களின் மதி மந்தமா!

முன்பெல்லாம் தமிழ் நாட்டில் படத் தயாரிப்பாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. படங்களும் குறைந்த எண்ணிக்கையில்தான் வெளிவந்து கொண்டிருந்தன. ஒரு படம் வெளியிடப்பட்டு நீண்ட காலம் கழித்துத்தான் அடுத்த படத்தைத் திரையிடுவார்கள். இவ்வாறு, நீண்டகால இடைவேளைக்குப் பின்னரே படங்கள் திரையிடப்பட்டு வந்தன. அதனால் ஒரு குறிப்பிட்ட படத்தையே ரஸிகர்கள் பன்முறை பார்க்க வேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. இன்று போல ஒரே மாதத்தில் ஐந்து அல்லது ஆறு புதுப் படங்கள் வெளிவந்ததில்லை. ஆகவே, மட்டரகப் படங்களைத் தயாரித்தவர்கள் கூட அந்தக் காலத்தில் நஷ்டம் அடையவில்லை. நல்ல படங்கள் குறைந்த பட்சம் 25 வாரங்களாவது ஓடும். மிதமிஞ்சிய கொழுத்த வருவாய் கிடைத்தது எல்லாப் பட முதலாளிகளுக்கும்.

ஆனால், நாளடைவில் தமிழ்ப் பட மார்க்கெட்டில் ஆந்திரர், மலையாளத்தவர், வடநாட்டினர் போன்ற பிறமொழியாளர்களும் புகுந்தனர். போட்டி மனப்பான்மை வலுத்தது. பிறமொழிப் படத் தயாரிப்பாளர்கள் தத்தம் மொழிகளில்

தாங்கள் தயாரித்த படங்களை 'டப்' செய்து தமிழ்ப்படுத்தி, நம் நாட்டில் வெளியிடத் தொடங்கினார்கள். போதாதற்கு மேனாட்டுப் படங்கள் வேறு ஏராளமான அளவில் இறக்குமதி செய்யப்பட்டன—செய்யப் படுகின்றன. சர்வ தேசத் திரைப் பட விழாவுக்குப் பின்னர், உலகெங்கும் உள்ள நாடுகள் தங்கள் படங்களை நம் நாட்டிற்கு அனுப்பி வருகின்றன. இவ்வாறு திரையிடப்படும் படங்களின் பட்டியல் விரிந்தது. ஆகவே, மக்கள் எல்லாப் படங்களையும் பார்க்க இயலவில்லை; விரும்பவுமில்லை. சிறந்த படம் எது என்பதை சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து—நன்கு பரிசீலனை செய்த பின்னரே பார்க்கத் தொடங்கினர். அதாவது, ரஸிகர்களிடையே விமர்சன மனப்பான்மை தீவிரமாக வளர்ந்தது. இதனால் முன்போல மோசமான படங்களை வெளியிட்டோர் வெற்றிபெற முடியாது போயிற்று. ஒரு குறிப்பிட்ட படத் தயாரிப்பாளருக்கு மட்டும் கிடைத்து வந்த லாபம் இப்போது பல பங்குகளாச் சிதறி, பிற தமிழ்ப் பட முதலாளிகளிடம் போய்ச் சேருகிறது. குறிப்பாக ஆந்திரப் படத் தயாரிப்பாளர்களிடம் பிற மொழியாளர்களின் படங்களுடன் போட்டியிட்டுத்தான் தமிழ்ப் படங்கள் வெற்றி காண வேண்டும் என்ற நிலைமை வந்ததால், முன்பு ஏனோ தானோ என்ற எண்ணத்துடன் படத்தைத் தயாரித்தவர்கள் எல்லோரும் இப்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கின்றனர். படத் தயாரிப்பில் இதை ஆரம்பத்திலேயே நம் பட முதலாளிகள் உணர்ந்திருந்தால் எவ்வளவோ நலமாக இருந்திருக்கும். 'வெள்ளம் வந்த பின்னர் அணைபோடும்' புத்திசாலிகளாக அல்லவோ இருக்கின்றனர் தமிழ்ப் பட முதலாளிகள்! இக் காரணங்களால்தான், தமிழ்ப் படங்கள் தாழ்ந்தன. கதை, நடிப்பு, காட்சி ஆகியவைகளில் சற்று மாறுபட்ட சுவை உள்ள பிறமொழியாளர் தயாரித்த (தமிழ்ப்) படங்கள் தலை தூக்கத் தொடங்கின.

மீண்டும் 'நம்' தமிழ்ப் படங்கள் நன்னிலைக்கு வரவேண்டுமானால், இன்றைய நிலையில் மிகவும் இன்றியமையாது வேண்டப்படுவது கதைத் துறையில் புரட்சி. ஆம்! தமிழ்ப் படங்களின் கதைப் போக்கு முற்றிலும் மாற்றப்பட வேண்டும். இதைச் செய்தாலன்றி தமிழ்ப் படங்களின் தரம் அபிவிருத்தி அடையப் போவதில்லை. மேனாட்டுப் படங்களின் கதையமைப்பைத் தழுவியும், பிறமொழி நாவல்களை மொழி பெயர்த்தும், தமிழ்ப் படங்களைத் தயாரித்து வெளியிடும் வழக்கம் வரவேற்கத் தக்கதல்ல. இம் முயற்சிதான் கதைத் துறையில் செய்யப்படும் புரட்சி (மாறுதல்) என நினைப்பது மிகவும் தவறான கருத்து. பிறமொழியிலுள்ள கதைகளை தமிழில் படமாக்குவது அடியோடு கூடாது என்பதல்ல—என் அபிப்பிராயம். ஆனால், அவற்றிற்கே நிரந்தர அடிமைகளாகி விடக் கூடாது. மேலும், "வெண்ணெயைக் கையில் வைத்துக் கொண்டு ஏன் நெய்க்கு அலைய வேண்டும்!" என்பதைப் போல, நம் நாட்டில் எழுத்தாளர்கள் பலர் இருக்கும்போது, பிறமொழி நவீனங்களை ஏன் நாட வேண்டும்!

ரூ. 5க்கு 15 ஜ்வெல் கைக் கடிகாரம்



ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனாவும், 15 ஜ்வெல் கைக் கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்திரவாதம்.

தபால் செலவு ரூ. 1-8-0

NATIONAL SWISS WATCH SUPPLIER
Begum Bagh, (G.M.) Meerut.

ரூ. 5-க்கு ஒரு ரேடியோ

மின்சாரமோ, பாட்டரியோ இல்லாமலே, ஸ்பஷ்டமான இனிய நாதத்தைக் கொடுக்கும். எமது புதிய திட்டத்தை பிரபலப்படுத்தவே இவ்விதம் கொடுக்கிறோம். குறைந்த அளவே ஸ்டாக் உள்ளது. ஏமாற்றம் அடைவதைத் தவிர்க்க. உடனே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

AMERICAN RADIO STORE
Halka, No. 28. (G.M.) Meerut.



“ சொர்க்க வாசல் ” தமிழ்ப்
படத்தில் நடன பத்மினி.

★ ★ ★ ★



ஏவி. எம். "அந்த நாள்"
தமிழ்ப்படத்தில் பண்டரிபாய்

நம் நாட்டில் இதுவரை எந்தப் பஞ்சம் ஏற்பட்டிருந்தாலும்கூட, அதிர்ஷ்டவசமாக எழுத்தாளர்களுக்குப் பஞ்சம் இல்லை! இருந்தும் நம் கதாசிரியர்களுக்கு பட உலகில் வாய்ப்பளிக்கப்படுவதில்லை. நமது புதிய இளம் எழுத்தாளர்களுக்கு சந்தர்ப்பம் தருவதன் மூலம் நவீன—புதுமைக் கதைகள் கிடைக்கும்; கதாசிரியர்களின் வாழ்க்கைத் தரம் ஓரளவு உயரும்; அப்போது சீரிய கருத்துச் சித்திரங்களைத் தீட்டும் சிந்தனைச் சிற்பிகள் பலர் உருவாக வழி பிறக்கும். ஆகவே, படாமுதலாளிகள் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் பட உலகம் பிரகாசம் பெற்றுத் திகழும்; தமிழ்ப் படங்களில், கதை அம்சத்தில் பெரும் மாறுதலும் விளையும். 'புதிய—அறிமுகமில்லாத எழுத்தாளனின் கதையை நம்பி எவ்வாறு படம் தயாரிப்பது! அப்படிப் படமாக்கினால் வெற்றி கிடைக்குமா!' என்ற சந்தேகங்களுக்கு இடம் தராது, தன்னம்பிக்கையைத் தளர விடாமல், துணிந்து படத்தைத் தயாரிக்க வேண்டும். நிச்சயமாக புதுமை (கதைகள்) வெற்றி பெற்றே தீரும்!



சிறுமிகள் வஸந்தாவும், பிரேமாவும் சமீபத்தில் சென்னை சௌந்தரிய மஹாலிலும், மியூஸியம் தியேட்டரிலும் அழகாக நடனம் ஆடினார்கள். இவர்கள் என். எம். மணியின் சிஷ்யைகள்.

தமிழ்ப் படங்களின் தரம் தாழ்வடைந்ததற்கு மற்றொரு முக்கிய காரணம், நம் தயாரிப்பாளர்களிடையே திட்டம் வகுத்து செயலாற்றும் தன்மை இல்லாததே. நாம் தயாரிக்கப்போகும் படம் எத்தகையது—இதற்கு எவ்வளவு மூலதனம் தேவை—படப் பிடிப்பு எவ்வளவு காலம் நடைபெற வேண்டும் என்பன போன்ற பிரச்னைகளை தெளிவாகத் தீர்மானித்துக் கொள்வதில்லை. ஒரு படம் பாகி வரை ஒரு டைரெக்டரின் பார்வையில் தயாராகும்; பிற்பகுதியோ மற்றொரு டைரெக்டர் கண்காணிப்பில் வளரும். முடிவில் படம் வெளி வருப்போது இருவர் பெயரும் இருக்காது; மற்றொரு புதிய நபர் டைரெக்ட் செய்ததாக விளம்பரப்படுத்தப்படும். புகழ் பெற்ற டைரெக்டர் இருந்தால் தான் வெற்றி பெறும் என்ற எண்ணமே இந்த தகிடுதத்தங்களுக்குக் காரணம். படமுதலாளிகளின் அறியாமையை நினைத்து அனுதாபப்படுவதைத் தவிர, நாம் இதைப்பற்றி வேறொன்றும் கூறுவதற்கில்லை. இதனால் காலமும் பொருளும் எவ்வளவு விரயமாகின்றன என்பதை மட்டும் சிறிது சிந்தித்துப் பார்க்கட்டும்! இப்படி பணத்தை அவசியமின்றி பெருமளவில் செலவு செய்து விட்டு, வசூலாகவில்லையென்றால் ரசிகர்களை மட்டும் குறைகூறி விடாதீர்கள் என்பதே படமுதலாளிகளுக்கு நான் கூற விரும்புவது. கண்டபடி பணத்தை பல வழிகளிலும் பட முதலாளிகள் பாழ்படுத்தினால், அதை ரஸிகர்கள் கொடுக்க வேண்டுமா!

*   *   *

படமுதலாளிகளின் மற்ற செயல்கள் எப்படியிருக்கிறதென கவனிப்போம். படங்கள் வெற்றிகரமாக ஓடவேண்டும் என்ற எண்ணத்தால் ஏககாலத்தில் ஒரே பிரபல கதாசிரியரையும், புகழ் பெற்ற நக்ஷத்திரங்களையும் பல படங்களுக்கு ஒப்பந்தம் செய்து விடுகிறார்கள். கதாசிரியருக்கோ, கற்பனை ஊற்று அடைபட்டு விடும், ஓய்வின்மையால். ஆனாலும், அதற்காக அவர் வந்த 'சான்ஸை' நழுவ விடுவாரா! 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளத் தானே' பார்ப்பார்! எனவே, தைரியமாக ஒரே கதையை, சில சம்பவங்களை மட்டும் சற்று மாற்றி இரு பட முதலாளிகளுக்கும் கொடுத்து



திருநெல்வேலி சங்கீத சபாவிலும் கோமாரபாளையம் மாரியம்மன் திருவிழாவிலும், பழனி பங்குனி உற்சவத்திலும் திருக்கோயிலூர் சகோதரிகளான அலமேலுவும், புஷ்பாவும் பாடினார்கள்.

---

விடுவார்! படங்கள் வெளி வந்த பிறகு தான் விஷயம் விளங்கும்; அதற்குள் அந்தக் கதாசிரியர் கலையுலகில் விலாஸமற்ற புள்ளியாகி விடுவார்! அதாவது, அவருடைய ஆட்டம்—''ஸீஸன்'' அவ்வளவு தான்! இப்படியும் ஏமாறும் படமுதலாளிகள் இருக்கத்தானே செய்கிறார்கள்!

ஒரே நடிகனை அல்லது நடிகையை பல படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்வதால், நடிப்புத் திறமை குன்றி விடுவதுடன், ரஸிகர்களுக்கும் பல படங்களில் ஒரே முகத்தைத திரும்பத் திரும்பப் பார்த்து சலிப்புத் தட்டிவிடும், படப்பிடிப்பில் தாமதம் ஏற்படும். அதுவும் சென்னை தவிர, வெளியூர்களில் (சேலம், கோவை) படப் பிடிப்பு இருந்தால் கேட்க வேண்டுமா! மக்கள் விரும்புவது சிறந்த நடிப்புதான். எனவே, திறமையுள்ள புதிய முகங்களுக்கு ஏன் இடமளிக்கக் கூடாது! நடிப்புத் திறமை யாரிடம் இருந்தாலும்—புது முகமாக இருந்தாலும் சரி, பழைய நட்சத்திரமானாலும் சரி—அவர்களை நிச்சயம் ரசிகர்கள் பாராட்டுவார்கள். ஆனால், ''கன்னிகா''வில் தோன்றிய டி. ஈ. வரதனும் புது முகம்தான்; ''பராசக்தி''யில் அறிமுகமான சிவாஜி கணேசனும் புது முகம்தான்! இதைப் படமுதலாளிகள் மறந்துவிடக் கூடாது.

தவிர, இன்னும்கூட நம் படங்களில் கதைக்குப் புறம்பான நடன நிகழ்ச்சிகள், நகைச் சுவைப் பகுதிகள் சேர்க்கப் படுகின்றன. இவற்றை ரஸிகர்கள் சிறிதும் விரும்புவதில்லை! இவற்றால் கதைப் போக்கு சுவையற்று, அதனாலேயே தோல்வியடைந்த படங்கள் பலப் பல. எந்த அம்சமும் படக் கதையுடன் இணைந்து சென்றாலன்றி, அதை சேர்க்கவே கூடாது. ரஸிகர்களைப் பலவிதங்களிலும் திருப்திப்படுத்துவதாக எண்ணிக் கோட்டை கட்டிக் கொண்டு, 'மாமூலாக' பாடல்களையும், நடனங்களையும் அவசியமின்றி இணைப்பதை இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும். மற்றபடி, கலை நுணுக்கத் துறையில் நமது படங்களைக் குறை கூறுவதற்கில்லை. கதைத் தேர்வு, திட்டமிட்டுப் படம் பிடிக்கும் தன்மை, திறமை மிக்க நடிகர்களை (புது முகங்களை)யும், இளங் கதாசிரியர்களையும் அமர்த்தி, தயாரிப்பு செலவை சுருக்குதல் போன்ற பிரச்னைகளில் தக்க கவனம் செலுத்தி, தயாரிப்பாளர்கள் பொறுப்புடன் செயலாற்றினால் தமிழ்ப் பட உலகின் எதிர்காலம் சுபிட்சம் தழைத்ததாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

---

### ஹாஸ்ய ரஸம்

சென்ற மாதம் 22-ம் தேதி குரோம்பேட்டை, லக்ஷ்மிபுரம் கிராம முன்னேற்ற சங்க மூன்றாவது ஆண்டு விழா நடைபெற்றது. அவ்வமயம் ''ஹாஸ்ய ரஸம்'' என்ற கதம்ப நிகழ்ச்சியை சங்கத்தினர் நடத்தினார்கள்.

### சந்தானம்—சந்துரு விகடம்

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மகாஜனக் கார்னிவாலில், சென்ற மாதம் 21-ம் தேதி முதல் 30-ம் தேதி முடிய 10 தினங்கள் பிரதிதினமும் சந்தானம்-சந்துரு ஜோடியின் விகடக் கச்சேரி நடைபெற்றது. இவர்களது நிகழ்ச்சியை பெரும் திரளான மக்கள் கண்டு களித்து அமோகமான ஆதரவு அளித்தார்களாம்.

# ரெயின்போ கிராஸ்வோர்ட்ஸ்

ரிஜிஸ்டர் நெ. 729

பிரவேசக் கட்டணம் 0-4-0 — எங்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டது

## பரிசு ரூபாய் 15,000

முதற் பரிசு ரூ. 10,000 — முடிவுதேதி (மதராஸ்) 16—4—54 — ரன்னர்ஸ் அப் ரூ. 5,0

| குறிப்புகள் | | 1 விடைகள் | |
|---|---|---|---|
| 1 | ரெயின்போ கிராஸ்வேர்ட்ஸில்.........முதல் பரிசு பெறுவது உறுதி. | முயன்றால் | தொடர்ந்தெழுதி |
| 2 | வகுப்பில் பின்னணியில் இருந்தால் மாணவர்கள்.........க்குப் பயப்படுகிறார்கள். | உபாத்தியாயர் | பரீட்சை |
| 3 | விளையாட்டில் அக்கரை செலுத்துதல் ஒருவனின்......நாளடைவில் முன்னுக்குக் கொண்டுவரும். | குணத்தை | நலத்தை |
| 4 | தேசத்தின் புகழ் இதைப்பொறுத்துத்தான். | அறிவுச்செல்வம் | பொருட்செல்வம் |
| 5 | இது ஆடையில் ஒருவகை. | சட்டை | கோட்டு |
| 6 | சில பிரகயாதிபெற்ற ரிப்போர்ட்டர்கள் இம்மாதிரியான செய்திகளைத் தர விரும்புகிறார்கள். | புத்திநிறைந்த | உணர்ச்சியுள்ள |
| 7 | இது மகிழ்ச்சியை நினைவூட்டுகிறது. | சந்தோஷம் | பிறப்பு |
| 8 | ..........அடைய நல்லமுறையில் அப்பொருளைக் கையாடல் வேண்டும். | வளர்ச்சி | ஊக்கம் |
| 9 | வெளிவேஷம் போடுதற்குரிய வாய்ப்பு திருடனை இப்படிச் செய்யச் சொல்லும் | ஓடுதல் | தந்திரம் |
| 10 | உறுதியில்லாத இதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. | நிறுத்தம் | செலவு |
| 11 | ஒருவன் இப்படி இருக்கும்போது கேள்விகள் கேட்கக்கூடாது. | கோபமாக | பசியாக |
| 12 | ஏழை. திறமை எவ்வளவு நிறைந்திருந்தாலும்...........தான். | மதிப்பில்லாதவன் | பேச்சில்லாதவன் |
| 13 | கணக்கில்...........குறித்து தவறுகள் ஏற்படலாம். | கழிவு | ஒளிவு |
| 14 | சினிமாவின் வெற்றி இதைப் பொறுத்தே அமைகிறது. | டைரக்ஷன் | கதைவசனம் |
| 15 | இது ஒரு அபாயகரமான ஆயுதம் | வார்த்தை | வாள் |
| 16 | தோட்டக்காரன் இதுகுறித்து கவலை செலுத்தாவிட்டால் செடிகள் இறந்துவிடும். | உரம் | தண்ணீர் |

8

**வரிசை 1க்கு அணா 4 — 5 வரிசைக்கு ரூ 1/**

| | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |
| 11 | |
| 12 | |
| 13 | |
| 14 | |
| 15 | |
| 16 | |

IN ENTERING THIS COMPETITION I AGREE TO ABIDE BY THE COMPETITION RULES AND CONDITIONS PUBLISHED IN THE 'RAISING STAR' FROM TIME TO TIME AND TO ACCEPT THE DECISION OF THE PROMOTERS AS FINAL AND LEGALLY BINDING.

THIS NUMBER MUST NOT BE ALTERED

No. 8

Name ____________________ Collector No. ________

Address ____________________ Date Sent ________

Post Town ______________ District ______________

ENTRY FEE SENT / ATTACHED BY P.O./M.O. NO. _____ OR CASH/ RECEIPT NO ____________ TOTAL RS. ____ AS. __

**RAINBOW CROSSWORDS, 306, MINT STREET, MADRAS-1.**

# வாழ்க்கை வர்ணனை

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

கண்ட முருகன் டாக்கீஸார் தாங்கள் தயாரிக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்த ''அசோக் குமார்'' படத்தில் கதாநாயகியாக நடிப்பதற்கு அவரை ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இப்படத்தில் அவருடைய நடிப்பும் பாட்டும் பாராட்டக் கூடியதாகவே இருந்தன. ஆனால், வீரம் பொருந்திய நடிப்பின் மூலம் புகழ் பெற்ற குமுதினியை இரண்டாவது படத்தில் அமைதியான பாத்திரத்தில் பார்த்தபோது ரஸிகர்கள் கொஞ்சம் ஏமாற்றமடைந்தனர்.

'அசோக் குமாரு''க்குப் பிறகு குமுதினி பக்ஷிராஜா பிலிம்ஸின் ''சாயா'' படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தமானார். மீண்டும் அவரது துணிகர நடிப்பிற்கு இப்படத்தில் இடம் அளிக்கப்பட்டது. ஆனால் இப்படம் ஓரளவு பிரமாதமான முறையில் தயாரான பின்னர் டைரெக்டருக்கும், பட முதலாளிக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக தயாரிக்கப்படாமல் நின்றுவிட்டது.

இதன் பின்னர் குமுதினி மூன்று வருஷகாலம் எப்படத்திலுமே நடிக்காமலிருந்தார். பிறகு 1944-ம் வருஷத்தில் ''பக்த காளத்தி'' படத்தில் நடித்தார். ''இப்படத்தில் அவர் நடிக்காமலே இருந்திருக்கலாம்'' என்ற எண்ணமே படத்தைப் பார்த்தவர்களுக்கு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நடித்த ''ஸ்ரீ முருகன்'', ''சுலோசனா'' ஆகிய படங்களில் அவருக்கு சாதாரணமான வேஷங்களே கொடுக்கப்பட்டிருந்தன.



ஆண் வேஷத்திலுள்ளவர் குமுதினி

அடுத்தார்ப்போல் வெளிவந்த ''பக்த ஜனா'' படத்தில் அவருக்கு ஒரு முக்கியமான பாத்திரம் கொடுக்கப்பட்டிருந்தது; அவரும் சிரமப்பட்டு நன்கு நடித்துப் பாடியிருந்தார். ஆனால் துரதிருஷ்டவசமாக இப்படம் தோல்வியுற்றது.

கிருஷ்ணா பிக்சர்ஸின் ''வனசுந்தரி'' படத்திலும் குமுதினி நடித்திருக்கிறார் என்றால் நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ''வேலைக்காரன்'' படத்தில் கூடியவரையில் நன்கு நடித்திருக்கிறார்.

சமீப காலத்தில், குமுதினி நடித்த மூன்று படங்கள் வெளி வந்து ஓடிக்கொண்டிருக்கின்றன. ''ஔவையார்'', ''பொன் வயல்'', ''விடுதலை'' ஆகிய இப்படங்களில் குமுதினிக்கு சிறு சிறு பாத்திரங்களே அளிக்கப்பட்டிருந்தபோதிலும் அவர் கச்சிதமாக நடித்திருக்கிறார்.

''பக்த ஜனா''விற்குப் பிறகு அவருக்குப் படங்களில் பாடும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ''ஔவையாரி''ல் அவர் வாய் மூலம் நீங்கள் கேட்பது வஸந்த குமாரியின் குரலாகும்.

''ஔவையார்'' படத்தில் ஔவையின் வளர்ப்புத் தாயாக நடிக்கும் பாக்கியத்தைப் பெற்ற குமுதினி அசல் வாழ்க்கையில் தாயாகும் பாக்கியத்தைப் பெறவேயில்லை. ஆனால் அதற்காக அவர் துளிக்கூட வருந்தக் காணோம்.

பெரிய வித்வான்கள் சிலர் உதவி மூலம் குமுதினி தம் சங்கீத ஞானத்தைத் தற்போது வெகுவாக விருத்தி



பரிமனாவின் "சொர்க்க வாசல்" தமிழ்ப் படத்தில் அஞ்சலி தேவி பிரதான பாகத்தில் நடித்திருக்கிறார்.

மாதமாக சோபிக்காம லிருப்பதற்குக் காரணம் அவரது இயல்புக்குத் தக்க பாத்திரங்கள் கிடைக்காதது தான் என்று கூறினால் மிகையாகாது. படங்களில் வீரம் மிக்க பாத்திரங்களை நடிப்பதையே அவர் அதிகமாய் விரும்புகிறார். அத்தகைய பாத்திரங்கள் அவருக்குக் கிடைக்குமா!

## ஸ்ரீ ஐயப்பன்

இம் மாதம் 3ம் தேதிக்குப் பின், சென்னை நகரில் எப் பக்கம் திரும்பினாலும், "சாமியே சரணம் ஐயப்பா" என்ற கோஷம் கேட்கப் போகிறது என்பது நிச்சயம். பல நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாக மாற்றப் போகும் அந்த கோஷத்தைக் கிளப்பப் போகிறவர் நவாப் டி.எஸ். ராஜமாணிக்கம் தான். கடந்த பல மாதங்களாக நாடகங்களை நடத்தி வந்த அவர் மீண்டும் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் இம் மாதம் 3ம்தேதி முதல் "ஐயப்பன்" நாடகத்தை நடத்தி வருகிறார். இந்த நாடகம் நடைபெற்ற பல நகரங்களிலும் பல அற்புதங்களைச் செய்திருக்கிறது. சென்னையில் என்னென்ன அற்புதங்களைப் பார்க்கப் போகிறோமோ!

செய்து கொண்டிருக்கிறார். மேடைக் கச்சேரிகளிலும், ரேடியோவிலும் அவர் பாடி வருகிறார். ரேடியோ நாடகங்களிலும் அவர் பங்கெடுத்துக் கொள்ளுவதுண்டு. தற்போது குமுதினி "பாசவலை", "தோழன்", உமாவின் "சிவகாமி", மஹாலிங்கத்தின் "உலகத்தில் நாம்", ஜெமினியின் "நீலவேணி" ஆகிய ஐந்து படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

சுமார் ஐந்தடி உயரமும், சிவந்த மேனியும், அழகிய முகத் தோற்றமும் உடையவரான குமுதினி அசாத்தியமான நெஞ்சழுத்தமும் துணிச்சலும் உடையவர். இல்லையெனறால் கத்திச் சண்டை குதிரை சவாரி, நீந்துதல் முதலியவைகளில் அவர் இறங்கியிருப்பாரா!

அவர் படங்களில் இவ்வளவு நாள் வரையிலும் பிர



"சொர்க்க வாசல்" படத்தில் பி. எஸ். வீரப்பாவும், நாராயணப் பிள்ளையும் தோன்றும் ஒரு காட்சி இது.

# கானல் நீர்

ஜே. நாராயணன்.

ராஜி, என் கண்மணி!

வாழப் பிறந்தவளாகிய உனக்கு வாழ்க்கை ஒப்பந்தம் செய்ய ஜாதகம் பார்க்கப் படுகிறது. உன் காதல் வாழ்வு, நவஜீவனமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். உனக்கு மனம்போல் மாங்கல்யம் கிடைத்து விடுதலை கிடைத்ததாக எண்ணிக் கொள்வாய். ஆனால், லைலா மஜ்னுவாக இருந்த நாம் இருவர் இப்போதுள்ள நிலை! ராணி! உலகம் எப்படிப் பட்டது என்பதை நிரூபித்து விட்டாய். இறந்த காதலைத் திரும்பிப் பார்க்கும் எனக்கு உள்ளம் வெடித்து விடும் போல் இருக்கிறது. உன்னால் என் உள்ளத்தில் எழுப்பப்பட்ட இதய கீதம் மட்டும் என் இதயத்திலே இசை உருவத்தால் இயங்கிக் கொண்டிருக்கிறது. எல்லாம் ஸ்திரீ சாஹஸம் தானோ என்னும் சந்தேகமே தோன்றுகிறது.

குமாரி! நாம் கொண்ட காதல் மறைய, அவன் வந்து விட்டபின், அன்பு திசை மாறி, காதலும் பாதைமாறிச் சென்று விட்டது. அதன் பலனாகத்தான் இப்போது உனக்கு ஜாதகம் பார்க்கப்படுகிறது. பிறகு என்ன! கல்யாணம் பண்ணிப் பார்த்து விடவேண்டியது தான். அப்புறம்! ஓர் இரவில் சந்தித்தபின் இல்லாளாக மாற, சம்சாரம் என்ற பந்தம் ஏற்பட, வாழ்க்கைப் பாதையில் சந்திக்கப் போகும் உன் மாமியாருக்கு நீ மருமகள் என்ற முறை ஏற்பட, 'என் கணவர்' என்று நீ பெருமை பட்டுக்கொள்ள, 'என் மனைவி' என்று உன்னை அடைந்தவர் உன்னை உரிமை கொண்டாட, என் மகள், என் மகன் என்ற உரிமைகள் மேலும் ஏற்பட என் வீடு என்று சொல்லிக் கொள்ள ஓர் வீடும் ஏற்பட, பணம் தேடி வந்தபின் பணக்காரியாகப்போகும் மங்கையர்க்கரசியாகிய நீ, உனக்கு மூன்று பிள்ளைகள் தோன்றி உன்னை அம்மா என்று அழைக்கும்போது தாய் உள்ளத்தையும் பெறப் போகிறாய். இதெல்லாம் எப்போது என்கிறாயா! அழகியாகிய உனக்கு சந்திரஹாரத்துடன் மாங்கல்யம் அணிவிக்கப் படப் போகிறாயே அதன் பின்னர்தான். ஆனால் பிழைக்கும் வழியறியாத, இந்த ஏழை படும் பாட்டை எந்தக் கண்கள் ஏறெடுத்துப் பார்க்கப் போகிறது! பராசக்திதான் கானல் நீராகப் போய்விட்ட என் வாழ்க்கைக்கு உயிரூட்ட வேண்டும். இதன் உண்மையை ஒரு நாள், பெண்ணாகிய நீ உணர்வாய்! எல்லாம் பணம் படுத்தும் பாடுதான்.

இப்படிக்கு, உன் மாஜி காதலன்.

---


ஸ்த்ரீ ரகஸ்யங்கள்
(ஆண்கள் அறியாதது)



கொக்சாஸ்திரம் - வசீகரணம், ஆண் - பெண் கலர் போட்டோக்கள் இதற்கு முன் நீங்கள் படித்திராத உபயோககரமான கட்டுரைகள் - அடங்கியது. இதன் விலை: ரூ. 8|-. தபால் செலவு ரூ. 1|-.

படுக்கை அறைப் படங்கள்

நீங்கள், பெண்களைக் கவர்ச்சிகரமான நிலையிலே, அழகிய முறையிலே காண விரும்பினால் ஐம்பது படங்கள் உள்ள ஒரு செட் வாங்குங்கள். விலை ரூ. 5|-. தபால் செலவு: ரூ. 1|-. இரண்டும் சேர்த்து வாங்கினால் ரூ. 8|-.

H. H. STORES (G.M.)
Post Box 51. :: MEERUT.


## நாமகரணங்கள்

சுகுமார் பிக்சர்ஸ் தயாரித்து வரும் தங்கள் படத்திற்கு "விளையாட்டு பொம்மை" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஏவி. எம். "ஒரு நாள்" என்ற பெயரில் தயாரித்து வந்த படத்திற்கு "அந்த நாள்" என்று பெயரை மாற்றி வைத்துள்ளனர். கிருஷ்ணா பிக்சர்ஸார் தயாரித்து வரும் தமிழ்ப் படத்தின் பெயர் "காவேரி" என்பது தான். "விஜய கௌரி" என்பது அவர்களுடைய தெலுங்குப் படத்தின் பெயர்.

# சென்னையில் கைத்தறிக் கண்காட்சி

கைத்தறித் துணிகளின் மேன்மையையும், ரகங்களையும் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டி அவைகளுக்கு அதிக ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் சென்னை ஸெயின்ட் மேரீஸ் ஹாலில் ஒரு கைத்தறிக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கண்காட்சியை குமாரராஜா ஸர். மூத்தய்யா செட்டியார் சென்ற மாதம் 25-ந் தேதி திறந்து வைத்து, கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் சில முக்கிய விஷயங்களை எடுத்துக் கூறினர். இந்த விழாவுக்கு "கல்கி" ஆசிரியர் ஸ்ரீ. ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமை வகித்தார். அவர் கைத்தறித் துணிகளின் மேன்மையை விளக்கிக் கூறி, எல்லோரும் கைத்தறித் துணிகளை வாங்கி, ஏழை நெசவாளர்களைப் பட்டினியின்றி காக்க வேண்டும் என்று கூறினர்.

அன்றைய விழாவில் குமாரி என். ராஜத்தின் பாட்டுக் கச்சேரியும் சேர்ந்திருந்தது. அடுத்த நாள் நடந்த இதே விழாவில் ஸி. ஆர். ராஜகுமாரி நடனம் ஆடினர். இந்த விழாவை அதி அழகான முறையில், மிகுந்த சிரத்தையுடன் ஏற்பாடு செய்ததற்காக நமது தொழில் வர்த்தக டைரெக்டரான ஸ்ரீ. இ. பி. ராமய்யாவைப் பாராட்டுகிறோம்.

---

## 'பிலிம்பேர்' பரிசு

பிரதி வருஷமும் ஹாலிவுட்டில் தயாராகும் படங்களுக்கு ஆஸ்கார் பரிசு வழங்கப்படுவதுபோல இந்தியாவிலும் பரிசுகள் வழங்க பம்பாயிலிருந்து வெளிவரும் "பிலிம்பேர்" என்ற ஆங்கில சினிமாப்பத்திரிகை முன் வந்திருக்கிறது, அதற்கான ஒரு தேர்தலை சென்ற வருஷம் ஆகஸ்ட் மாதம் அப்பத்திரிகை நடத்தியது. அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பத்திரிகை 'இந்தியா ஆஸ்கார்' பரிசளிப்பு விழாவை சென்ற மாதம் 21-ம் தேதி நடத்தியது. இந்தப் பரிசளிப்பு விழா பம்பாய் மெட்ரோ தியேட்டரில் நடைபெற்றது. அமெரிக்க தூதர் ஆலன் அப்பரிசுகளை வழங்கினர். இந்தப் பரிசளிப்பு விழாவில் பல நக்ஷத்திரங்களும் பத்திரிகாசிரியர்களும்கலந்து கொண்டனர். இந்த விழாவில் பலாது நடன சங்கீத நிகழ்ச்சிகள் நடந்தன. பின்கண்டவர்களுக்குப் பரிசு கிடைத்தது: சிறந்த படம்! "தோ பீகா ஜமீன்"; டைரெக்டர்: பீமல்ராய்; நடிகை: மீனகுமாரி; நடிகர்: திலீப் குமார்; சிறந்த பாட்டு: 'கங்காகி ராஜ்' ("பாய்ஜு பாவ்ரா"வில் பாடியது); (இப்படத்தின் சங்கீத டைரெக்டர் நவுஷாத் அலி பாராட்டப் பட்டார்.) சிறந்த பாடகர்: மகமது ரபி.

## ஏப்ரல் வெளியீடுகள்

ஏவி. எம்மின் "அந்த நாள்" இம்மாதம் இரண்டாவது வாரத்தில் தமிழ் நாட்டில் திரையிடப்படுகிறது. தமிழ்ப் பட சரித்திரத்திலே இது ஒரு புதுமாதிரியான முயற்சியாக இருக்கும். நடனமோ பாட்டோ இல்லாமல் ஒரு படம் என்றால் அது ஆச்சரியம்தானே! எஸ். பாலச்சந்தர் டைரெக்ஷனில் தயாராகியுள்ள இப்படத்தின் வசனங்களை ஜாவர் என். சீதாராமன் எழுதியிருப்பதுடன் ஒரு முக்கிய பாத்திரத்திலும் நடித்திருக்கிறார். சிவாஜி கணேசன், பண்டரிபாய், சூர்யகலா, மேனகா, பி. டி. சம்பந்தம் ஆகியோர் இப்படத்தில் முக்கிய பாத்திரங்களாக நடித்திருக்கின்றனர்.

இம்மாதம் 9ம் தேதி முதல் மாடர்ன் தியேட்டர்ஸின் "இல்லற ஜோதி" தமிழ் நாட்டில் திரையிடப்பட விருக்கிறது. சிவாஜி கணேசன், ஸ்ரீரஞ்சினி, பத்மினி. கே. ஏ. தங்கவேலு பிரதம பாகங்களில் நடித்துள்ள படம் இது.

பத்மினி பிக்சர்ஸின் "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" கூட இம் மாதமே தமிழ் நாட்டில் திரையிடப்பட விருக்கிறது.

## ஸ்ரீ 420

ஆர். கே. பிலிம்ஸின் அடுத்த தயாரிப்பான "ஸ்ரீ 420" மும்முரமாகப் படமாகி வருகிறதாம். இப்படத்தில் மீண்டும் "அவாரா!" பட கோஷ்டி—அதாவது. கதாசிரியர் அபாஸ், சங்கீத டைரெக்டர்கள் ஷங்கர் ஜெய்கிருஷ்ணன், கர்கீஸ் ராஜ்கபூர் ஜோடி—இப் படத்தின் வளர்ச்சியிலும் அக்கறை காட்டுகிறது. படத்தை ராஜ்கபூரே டைரெக்ட் செய்து வருகின்றார்.

# குண்டூசி டைரி

## பிப்ரவரி 1954

2. ஜெமினி ஸ்டுடியோவில் "ஔவையார்" தினத்தைக் கொண்டாடினுர்கள்.

5. மைசூர், மல்லிகா புரொடக்ஷன்ஸார் தங்களது "வாடாமலர்" தமிழ்ப் படத்தின் ஆரம்ப பூஜையை நடத்தினுர்கள்.

   ஜெமினியின் அகில உலக இலாகா அதிகாரி எம். ஏ. பார்த்தசாரதி பத்திரிகாசிரியர்களை அழைத்துப் பேசினுர்.

11. நியூ ஈரா புரொடக்ஷன்ஸின் "விடுதலை" பத்திரிகைக் காட்சி காமதேனு தியேட்டரிலும், ஜெயந்தியின் "பொன் வயல்" பத்திரிகைக் காட்சி வாஹினி ஸ்டுடியோவிலும் நடைபெற்றன.

## மார்ச் 1954

3. மனோஹர் பிக்சர்ஸின் "மனோஹரா"வின் பத்திரிகைக் காட்சி ராஜகுமாரி தியேட்டரில் நடைபெற்றது. படமும் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டது.

   எம். ஆர். ராதாவின் "ஆயுள் தண்டனை" நாடகத்திற்கு சென்னை சர்க்கார் தடை விதித்தது.

5. "ஆயுள் தண்டனை" என்ற நாடகத்தை நடத்தியதற்காக நடிகர் எம். ஆர். ராதா மீது சென்னை சர்க்கார் வழக்குத் தொடர்ந்தனர்.

   கொத்தமங்கலம் சுப்புவைப் பாராட்ட ஒரு விழா சென்னையில் நடைபெற்றது.

7. குமாரி சுசிலாவின் பரத நாட்டியக் கச்சேரி—உதவி நிதிக் கச்சேரி—நடைபெற்றது.





சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ். 37, ஜானிஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர். பாலக்காடு. நீலகிரிக்கு சோல் ஏஜன்டுகள்: B. பாலபட்டாபி செட்டியார் (1933ல் ஸ்தாபிக்கப்பட்டது) கோயமுத்தூர்



Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.


44 ஆண்டுகளாக புகழ்பெற்ற..
மேரிராம் பற்பொடி
(REGD.)
சகல விதமான பல் நோய்களையும் அறவே ஒழிக்க வைத்திய முறைப்படி தயாரிக்கப்படுகிறது.
★
பாக்கெட், டின், இருவித பாக்கிங்குகளில் விற்பனையாகிறது.
தயாரிப்பவர்கள்
ஆர்.எஸ்.பதி அண்டு கோ.,
(REGD.)
தபால் பெட்டி நீர்: 99. மதுரை.

GUNDOOSI April 1954 Regd. No. M. 4924

